விலை ரூபா: 14.00 பக்கங்கள்:- (16+8) Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

# VALAMPURI






சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 11 புதன்கிழமை (24.04.2002) தொலைபேசி 3378 ஒலி 126



ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் யாழ் செயலகத்தில் நேற்று நடத்திய கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட படம்.

## விண்ணப்ப திகதி நீடிப்பு

அரசாங்க சேவையில் எழுதுவினைஞர் மற்றும் அதனோடு இணைந்த பதவிகளுக்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய விண்ணப்ப முடிவுத் திகதி மே மாதம் 6ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று பொது நிர்வாக முகாமைத்துவ புனரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது. இந்த விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி ஏப்ரல் 22 என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (த)

## சமாதான முயற்சிகளை எதிர்த்து எதிர்க்கட்சிகள் நேற்று ஆர்ப்பாட்டம்

# அரசு விடுதலைப் புலிகளிடம் நாட்டை ஒப்படைத்து விட்டது

## அனுரா பண்டாரநாயக்கா உரை

(நமது நிருபர்)

**அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையையும் நோர்வேயின் சமாதான முயற்சியை எதிர்த்து எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றையும் நடத்தியுள்ளன.**

**பத்தாயிரத்துக்கும் அதிகமான சிங்களப் பேரினவாதிகள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் அனுரா பண்டாரநாயக்கா, தினேஷ் குணவர்த்தனா, விமல் வீரவன்ச ஆகியோர் உரையாற்றினர்.**

நோர்வேயின் சமாதான முயற்சியை கண்டித்தும் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு

கள் ஒன்றினைந்து நேற்று பிற்பகல் 3மணிக்கு வில்டன் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

தடையை நீக்கக்கூடாதென்றும் புலிகளுக்கு நாட்டை தாரைவார்த்து கொடுக்கவேண்டாம் என்றும் கோசங்கள் எழுப்பியும், சுலோகங்களை

## கொக்குவில் வைரவர் ஆலயத்தில் ஆணின் சடலம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கோணாவளை வைரவர் ஆலயத்தின் வசந்த மண்டபத்திற்கு அருகில் காணப்பட்ட ஆணின் சடலம் ஒன்று கோப்பாய் பொலிஸாரினால் நேற்று யாழ் போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான தம்பிமுத்து மகாலிங்கம்(வயது44) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது சடலத்தின் பிடரி, தோள் மூட்டு, முதுகுப்பகுதிகளில் காயங்கள் காணப்படுவதுடன் காலில் தடமும் போடப்பட்டுள்ளது.

இச்சடலத்துக்கு அருகில் நீலநிறப்

(8ம் பக்கம் பார்க்க)

நோர்வேயின் சமாதான முயற்சியை கண்டித்தும் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சி

3மணிக்கு வில்டன் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் புலிகளின்

களுக்கு நாட்டை தாரைவார்த்து கொடுக்கவேண்டாம் என்றும் கோசங்கள் எழுப்பியும், சுலோகங்களை

(8ம் பக்கம் பார்க்க)

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான

இச்சடலத்துக்கு அருகில் நல்நிற்ப

(8ம் பக்கம் பார்க்க)

## சர்வதேச சக்திகள் ஆதிக்கம் செலுத்த முன்னர்

# வடக்கு- கிழக்கு நிர்வாகத்தை புலிகளிடம் ஒப்படைக்க வேண்டும்

## கலாநிதி கருணாரட்ண கருத்து

(கொழும்பு)

சர்வதேச சக்திகள் இலங்கையின் வடக்கு- கிழக்குப் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்துவதற்கு முன்னர் அந்தப்பகுதிகளின் இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க வேண்டு மென புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்

புலிகள் மீதான தடையை நீக்கி இடைக்கால நிர்வாகத்தை அவர்களிடம்

(8ம் பக்கம் பார்க்க)

# தலைவர் பிரபாவின் அணுகு முறை மிகவும் வித்தியாசமானது

## அமைச்சர் ஹெல்கிஸன் பிரமிப்பு

(கொழும்பு)

விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டு சாதனைபடைத்த எந்த ஒரு தலைவர்களிடமும் காணப்படாத அரசியல் அணுகுமுறை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் காணப்படுவதாக நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி.தொலைக்காட்சி சேவைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் விடுதலைப் புலிகளின் தலைவர்.

(8ம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் மொறகொட ஐ.நா. செயலருடன் சந்திப்பு

(கொழும்பு)

பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப துறை அமைச்சர் மலிந்த மொறகொட ஐக்கிய நாட்டு சபைச் செயலர் கோபி அனானுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக கோபி அனான் அமைச்சரிடம் விரிவாக கேட்டறிந்து கொண்டார்

இதேவேளை கோபி அனானை இலங்கைக்கு வருமாறு அமைச்சர் மெலிந்த, மொறகொட பிரதமரின் சார்பாக வேண்டுகோள் விடுத்துள்ளார். (த)

## அரசு-புலிகள் பேச்சுவார்த்தைக்கு

# சட்ட ஆலோசனை வழங்க இந்தியா தயாராகவுள்ளது

## இந்தியா வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் தாய்லாந்தில் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தையின்போது எழக்கூடிய சட்டசிக்கல்கள் மற்றும் அரசியலமைப்பு விவகாரங்கள் தொடர்பான ஆலோசனைகளை வழங்க இந்தியா தயாராகவுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் தெரிவித்துள்ளார்.

புதுடில்லிக்குச் சென்றுள்ள அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீஎல்பீரிஸுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஆலோசனை வழங்குவதற்கு இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்தால் இந்தியா மகிழ்ச்சியுடன் ஏற்று உதவிகளை வழங்கும்.

இனப்பிரச்சினைக்கு சகல சமூகங்

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

சிறு விளம்பரம்

**வியாழன் மாற்றம் எப்படி?**

எங்கும் விற்பனையாகின்றது பிரபாகரனின் ஜாதகக் குறிப்பும் உள்ளது மற்றும் அமெரிக்க ஆங்கிலத்தில் கட்டுரைகள், புலமைப்பரிசில்பரீட்சைக்கு மொழித்திறன் துரித மீட்டற்பயிற்சி (தரம்3,4,5) V.Aசிவராசா வெளியீட்டது என்று கேட்டு வாங்குங்கள் (4997)

## துணைவேந்தரின் மணிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையின் மணிவிழா இன்று பி.ப. 1.00 மணிக்கு இராமநாதன் நுண்கலை வளாகத்தில் நடனசித்திர வடிவமைப்புத்துறைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரைகளை மகாராஜஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ணஐயர், அருட்கவி சி. விநாசித்தம்பி, மகாவித்வான் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் ஆகியோரும்,

வாழ்த்துரைகளை பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் வி. சிவசாமி, யாழ். பல்கலைக்கழக பேரவைஉறுப்பினர்களான இரா. சுந்தரலிங்கம், திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் மற்றும் கலாநிதி எஸ். சிவலிங்கராசா ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (உ)

# ஜனாதிபதியின் இந்தியப் பயணம் சமாதான முயற்சிகளைத் தவிர்க்கும் சதி முயற்சி

## புதிய இடதுசாரி முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துமாறு புதிய இடதுசாரி முன்னணி அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளது.

இவ் மாகாணங்களில் சிவில் நிர்வாகம் ஆரம்பிக்கப்படாவிட்டால், அங்கு வேறு சக்திகள் தலையிடக் கூடிய வாய்ப்புகள் ஏற்படும் என்று அதன் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட தெரிவித்துள்ளார்.

தமிழீழவிடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட வேண்டும் எனவும்,

சில கட்சிகள், தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதானமுயற்சிகளிற்கு எதிரான இனவாத நடவடிக்கைகளில்ஈடுபட்டுவருவதை தமது கட்சி கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அனுராபண்டாரநாயக்கா, விமல் வீரவன்ச, தினேஷ்குணவர்த்தனா, பேரியல் அஷ்ரப் ஆகியோர் நேற்று ஆரம்பிக்கப்பட்ட இனவாத இயக்கத்தில் ஜனாதிபதியின் பிரதிநிதிகளாக கலந்து கொண்டுள்ளனர்.

இத்தகைய இனவாத இயக்கம் ஒன்றை ஆரம்பிப்பானது முன்னாள் தேசவிரோத இயக்கங்களுக்குரு உந்துசக்தியாக அமையும் முயற்சியாகும் என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

நாட்டுமக்கள் அனைவரும் சமாதானத்தையே விரும்பியுள்ளதால் இத்தகைய இனவாத இயக்கம் வெற்றி பெறப் போவதில்லை.

இத்தகைய நிலைகளை கவனத்தில் கொண்டு தான் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இந்திய விஜயத்தை மேற்கொண்டுள்ளார். இதனால் இவர் சமாதான முயற்சிகளினை தவிர்க்கும் சதி முயற்சியில் ஈடுபடுவாரா? என்ற சந்தேகம் தனக்கு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

### ஆசிய அபிவிருத்தி வங்கி

# யுத்த அனர்த்த புனரமைப்புக்கு 400 மில்லியன் ரூபா வழங்க சம்மதம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கல்வி, சுகாதாரம் மற்றும் புனரமைப்புப் பணிகளுக்கென ஆசிய அபிவிருத்திவங்கி 400மில்லியன் ரூபாவை உடனடியாக வழங்குவதற்குசம்மதம் தெரிவித்துள்ளது.

நேற்றையதினம் யாழ்ப்பாணம் வருகைதந்திருந்த ஆசிய அபிவிருத்திவங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி ஜோன் கொனி யாழ்அரசசெயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தகவலை தெரிவித்திருந்தார்.

மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மாபோல் திலகநாயகம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆசியஅபிவிருத்தி வங்கியின் திட்டப்பணிப்பாளர் நீ.லங்காநேசன் ஆலோசகர் எஸ்.திலகரத்தினா உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ், எம்.குறூஸ் ஆகியோர்பங்குகொண்டிருந்தனர்.

யாழ்குடாநாட்டுக்கு முதற்கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 400மில்லியன் ரூபாவில்.

தென்மராட்சியில் 500வீடுகள் நிர்மாணிப்பதற்கும் 100 பொதுக்கிணறுகளைப் புனரமைப்புச் செய்வதற்கும் சாவகச்சேரி டிறிபேக்கல்லூரிக்கு மூன்று மாடிக் கட்டிடம் அமைப்பதற்கும்.

சாவகச்சேரி மாவட்டவைத்தியசாலைக்கு ஒருஅம்புலன்ஸ் வண்டி, ஒருமின்பிறப்பாக்கி மற்றும் பிரசவ விடுதியும்.

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலைக்கு வெளிநோயாளர் பிரிவுக்கான கட்டடமும்.

யுத்தத்தினால் சேதமடைந்துள்ள 15பாடசாலைகளுக்கு தளபாடவசதியும் வழங்கப்படும் எனத்தீர்மானிக்கப்பட்டுள்ளது,

இத் திட்டங்களுக்கான திட்ட அறிக்கைகளை உடனடியாகத் தயாரித்துதரும்படி உரிய திணைக்களத் தலைவர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் கேட்கப்பட்டுள்ளனர். (த-77)

## இராசி பலன்

24 -04-2002
(சித்திரை 11 புதன்)
துவாதசி பி.ப 4.18வரை
உத்தரம் பி.இ 1.54 வரை
ராகுகாலம் - 12.00-1.30
நல்லநேரம் 4.30-6.00
பிரதோச விரதம்,
அமிர்தசித்தம்

**மேடம்**
காரிய அனுகூலம், ஆரோக்கியம், செய்தொழில்விருத்தி மனமகிழ்ச்சி.

**இடபம்**
பிரயாண இடையூறு தாழ்ந்த சுபாவம், முயற்சிதாமதம் வாக்குப் பலிதம்.

**மிதுனம்**
ரோகபயம், மனச்சஞ்சலம் உத்தியோகநன்மை, அற்பர் உறவு.

**கடகம்**
கூட்டுமுயற்சி, இனிய சம்பவம், வாக்குமேன்மை, காரிய நன்மை

**சிங்கம்**
மதிப்புக்குறைவுகாரியதாமதம், பொருள்விரயம், தேவையற்ற விவாதம்.

**கன்னி**
நல்லமுயற்சி, சிந்தனை தெளிவு, போசனசுகம், சயன சுகம்.

**துலாம்**
ரோகம், தர்மம், அமைதிக் குறைவு, காரியதாமதம்.

**விருச்சிகம்**
காரியஅனுகூலம், பெரியோர் ஆதரவு, நண்பர்கள் சந்திப்பு, குடும்பசுகம்.

**தனுசு**
உற்சாகம், முயற்சி கைகூடும், செய்தொழில்சிறப்பு, நண்பர்கள் உதவி.

**மகரம்**
வீண்பயம் புதிய திட்டம் முயற்சிதாமதம், உடல்உழைப்பு.

**கும்பம்**
காரியதாமதம், உடல்நலக் குறைவு, நண்பர்கள் மனஸ்தாபம், பிரயாணபயம்.

**மீனம்**
போசனசுகம், பெரியோர் சந்திப்பு, காரியம் கைகூடும் தொழில் நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

### கருவிகள் கையாடல்

## தீயணைப்புப் பிரிவு பொலிஸில் முறைப்பாடு

தீயணைப்புப் பணிக்காகச் சென்றவேளை 20 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் களவாடப்பட்டிருப்பதாக யாழ். மாநகரசபையின் தீயணைப்புப்பிரிவினரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தலைக்கவசம், பிக்கப்ரியூப் கூடை, வடிகூடை, நைலோன் கயிறு, சீலிங்குக், டிவியுசர் பிறாஞ் என்பனவே களவாடப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-247)

## கணக்காளர் நாயகம் நேற்று யாழ் வருகை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அரச திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புக்களின் கணக்காய்வுப்பணிகளின் முன்னேற்றங்களை ஆய்வு செய்வதற்காக கணக்காளர் நாயகம் எஸ்.சி மாயதுன்னே முதல் முறையாக நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இவருடன் பிரதிக் கணக்காளர் நாயகம் எம்.டி.ஹரேல், உதவிக் கணக்காய்வாளர் எஸ்.சிவகுரு ஆகியோர் வந்துள்ளனர்

இவர்கள் யாழ்.அரசசெயலகத்திலும், யாழ். மாநகர சபையிலும் இயங்கிவருகின்ற கணக்காய்வுத் திணைக்கள அலுவலகங்களுக்கும் விஜயம் செய்து அங்கு இடம் பெறும் பணிகளைப் பார்வையிடுவர் (த-77)

### வவுனியா அரச அதிபர் கம்போடியா பயணம்

(வவுனியா)

வவுனியா அரசாங்க அதிபர் கே. கணேஷ் உலக உணவுத்திட்டக் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக கம்போடியா சென்றுள்ளார்.

அரச அதிபர் ஒருவார காலம் கம்போடியாவில் தங்கியிருப்பதால் அவர்வரும் வரை வவுனியா பிரதேச செயலாளர் மேரி இமெல்டா சுகுமார் பதில் அரச அதிபராகப் பொறுப்பேற்றுள்ளார். (வ)

### முதல் தமிழ் பெண் அரச அதிபர்

(வவுனியா)

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராக முதன் முறையாக ஒரு பெண்மணி நியமனம் பெறவுள்ளார்.

வவுனியா பிரதேச செயலராக இருந்துவரும் மேரி இமெல்டா சுகுமாரே முதலாவது தமிழ் பெண் அரசாங்க அதிபராக வரும் வாய்ப்பினைப் பெற்றவராவார். இவர் இலங்கை நிர்வாகசேவையின் முதலாம் வகுப்பைச் சேர்ந்தவராவார். (வ)

### தங்குமட திறப்புவிழா

(காரைநகர்)

காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சாம்பலோடை மீனவர் தங்குமடம் திறப்பு விழா நாளை வியாழக்கிழமை மு.ப10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யூ.என்.எச்.சி.ஆர். இன் யாழ் வதிவிடப் பிரதிநிதியும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகமும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ். ஏ. ஜோசப்பும் கலந்துகொள்ளவுள்ளார். (த-246)

நன்றி செலுத்தும் வழிபாடு

**தந்தை S.J.V செல்வநாயகம்**

அவர்களின் வாழ்வின்
104 ஆவது பிறந்ததின (1898-03-31)
நினைவு கூரலும்
25 ஆவது இறந்ததின (1977-04-26)
ஞாபகார்த்தமும

இடம்- யாழ். பரி. யோவான் ஆலயம் சுண்டுக்குளி
காலம்- 2002-04-26 காலை 8.00 மணி (S.L.T)
பாராட்டுரை- திருமதி கிருபா பவசிங்கம்
இறை செய்தி- அருட்தந்தை S.E. ஜெயசீலன்

யாவரும் இவ் வழிபாட்டிற்கு அன்பாய் அழைக்கப்படுகின்றீர்கள்.

(4995) யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்
யாழ் கிளை

**உலக செஞ்சிலுவைத்தினம்**
**08-05-2002**

மாவட்டரீதியிலான ஓவியம் தீட்டல்போட்டி

இப்போட்டியில் வயதுக் கட்டுப்பாடின்றி எவரும் பங்குபற்றலாம்.

**தலைப்பு / எண்ணக்கருத்து:**
01. சிறுவர்களும் சமாதானமும்.
02. ஏச்.ஐ.வீ. (H.I.V) / எயிட்ஸ் (AIDS)

ஆகிய இருவிடயங்களையும் எண்ணக் கருத்தாகக் கொண்ட மாவட்ட ரீதியிலான ஓவியம் தீட்டல் போட்டி வயது கட்டுப்பாடற்ற வகையில் நடாத்தப் படுகின்றது. மேற்படி ஒரு எண்ணக் கருத்தை அல்லது இரு எண்ணக்கருத்துக்களையும் மையமாக வைத்து வரையும் ஓவியங்கள் தனித்தனியாக 18x14 அளவுள்ள **Bristol Board, Canvas**- அல்லது பொருத்தமான பேப்பர் போன்றவற்றில் **Water Colours, Oil Paint, Pencil Colours** அல்லது **Pastel** பாவித்து வரையப்படல் வேண்டும்.

சகல ஆக்கங்களும் யாழ். கிளைக்கு 04.05.2002 அன்றோ, அல்லது அதற்கு முன்பாகவோ, அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதற்கு பின்னர் கிடைக்கும் ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

நன்றி

2002.04.23

செஞ்சிலுவைச் சேவையில்
**கௌரவ செயலாளர்**

(கி-4005)

# மனிதனின் வாழ்க்கை செயற்பாடுகளிலிருந்தே சமூக முன்னேற்றமும் தாழ்வும் ஏற்படுகின்றன

''மனித மனங்களை மதித்து
மனித மகத்துவத்தை ஒளிரவைக்கும்
மனித செயற்பாடுகளே - நிரந்தர
சாந்தியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தும்''

மனித வாழ்க்கை இன்று நேற்று உருவாகியதல்ல காலகாலமாக கடந்துவிட்ட அறுவடைகள் முற்றிப் பழுத்து இன்று செப்பமாக்கப்பட்டுவிட்டது. ஆனால் அவற்றுக்குள் இருக்கின்ற முரண்பாடுகள் ஏனோ தெரியவில்லை இன்று வரை அறுவடை செய்யப்பட்டுத்தான் வருகின்றது. உண்மையில் மனித சக்தி அபாரமானது. இன்று வரை பல்வேறு சாதனைகளை, நிகழ்த்தியபடிதான் இருக்கின்றது. ஆனால் அத்தகைய வளர்ச்சி மனித உள்ளங்களில் அவன் நடத்தைகளில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதென்பதை நாம் சிந்திக்க வேண்டியுள்ளோம்.

மனித நடத்தைகள்

ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு வகையில் இப்பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான் அறிஞர் பற்றிக் குறிப்பிடுகையில் 'மனித வாழ்க்கையை ஓர் றோஜாச் செடிக்கு ஒப்பிடலாம் அது வளரும் நிலத்தையும் பண்படுத்தி பசளையிட்டுக் காலத்துக்குக் காலம். அதன் இலைகளை வெட்டிப் பக்குவமாய் பராமரித்து வந்தால் அது அழகான மலர்களைக் கொடுத்து எழில் கோலத்தோடு காட்சியளிக்கும் அதே போல் மனித வாழ்க்கையும் பலன்தரும் வாழ்வாக அமைந்திட அது பண்போடு பராமரிக்கப்பட வேண்டும்' என்கிறார். பொதுவாக மனிதன் சிரிக்கின்ற பிறருடன் சேர்ந்து வாழ்கின்ற சமூகப்பிராணி அதனால், ஏனைய விலங்குகளிலிருந்தும் சிறப்பிக்கப்படுகின்றான் இதன் காரணமாக தனது சிறந்த மேலான பண்புகளைக் கொண்டு சமூகத்துடன் சிறப்பாக உறவாட வேண்டும் இது தான் அனைவரும் ஏற்றுக் கொள்கின்ற மனிதநல் நடத்தை,

சமூகநலனும் சந்தோஷமும்

துன்பம் வரும் போது அதனை எதிர்த்து நிற்பவன் சமூகத்தின் தூணாக மிளிர்வான். வாழ்க்கையில் சோர்வுற்று, விரக்தியுற்று, இருக்கும் மனிதனைக் காணும் போது நிலமகள் கூட வெட்கமடைவாள். மனிதன் 'மகிழ்ச்சியோடு பாரங்களைச் சுமந்தால் சுமை தெரியாது. கவலையானது, அவனது சவப்பெட்டியில் ஓர் ஆணியை அறைகின்றது. இன்பமாகச் சிரிக்கும் ஒவ்வொரு சிரிப்பும் அந்த ஆணியைக் கழற்றுகின்றது' என்கிறார் எழுத்தாளர் இ.எஸ்.மெர்வின்.

அவளது நவீன உடலல்ல. மாறாக அவள் முகத்தில் தோன்றுகின்ற வற்றாத சந்தோஷமே என வாழ்க்கையின் அடிப்படை மகத்துவத்தை டேல்கார்னீஜ் விளங்குகின்றார்.

எனவே, இன்றைய சமூக முன்னேற்றமும் அதன் தாழ்வும் ஒவ்வொரு மனிதனதும் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது. ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்வ

**வ. சசிகுமார்**
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி

செருப்பு இல்லை என்று ஒருவன் அழுதானாம். காலில்லாதவனைக் கண்ட பின்பு தன் மகிமையைக் கண்டு சிரித்தானாம். நகைச்சுவையாக வாழக்கூடியதும், சமூக உறவுகளை விசாலித்துக் கொள்ளுவதுமான சந்தர்ப்பங்கள் இருந்தும் பலர்இங்கு அறியாமையின் சுதியில் வாழத்துடிக்கின்றார்கள். ஒரு பெண்ணை அழகு செய்வது

தும், உதவிசெய்துவாழ்வதும், உயர்ந்த வாழ்க்கையின் உரிமைகளாகும். ஆதலால் எந்தவொரு மனிதனும்தற்கால - எதிர்கால சமூக விருத்திக்காக, சிறந்த வாழ்வை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அது தனிமனிதன் தொட்டு குடும்பத்திற்கும, சமூகத்திற்குமென விரிவு பெற்றுச் செல்லல் மிக அவசியமாகும்.

## கவுணாவத்தை செல்வதற்கு படையினர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை கவுணாவத்தை வைரவர் ஆலயத்திற்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை சித்திரைப் பூரணைஉற்சவத்திற்கு மக்கள் செல்வதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

அன்றையதினம் காலை9-00 மணி முதல் சேந்தாங்குளம் சோதனைச் சாவடியூடாக கவுணாவத்தைக்கு செல்லமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (செ)

## விபத்தில் இளைஞன் படுகாயம்

(மந்திகை)

பருத்தித்துறை இறங்குதுறையில் இருந்து பொருட்களை ஏற்றிவந்த பாரவூர்தியுடன், எதிரே வேகமாக வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதியதில், மோட்டார் சைக்கிளில் வந்தவர் படுகாயமடைந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவத்தில் பருத்தித்துறை மணல் ஒழுங்கையைச் சேர்ந்த எஸ். ஜெனிராஜ் (வயது 24) என்பவரே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## பேரணியை படம் பிடிக்க பத்திரிகையாளருக்கு தடை

(கொழும்பு)

சமாதான முயற்சிகளை எதிர்த்து நேற்று முன்தினம் பௌத்த பிக்குமார் புறக்கோட்டையில் நடத்திய பேரணியை படம் பிடிப்பதற்கு விசேட அதிரடிப்படையினர் தடைகளை ஏற்படுத்தியதாக ஊடகவியலாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பேரணியில் கலந்து கொண்டவர்களையோ, தம்மையோ படம்பிடிக்க வேண்டாம் என அதிரடிப்படையினர்தலைமை அதிகாரி ஒருவர் தமக்கும் ஏனைய படப்பிடிப்பாளர்களுக்கும் தடை விதித்தார் என புத்திக வீரசிங்க என்ற புகைப்படப்பிடிப்பாளர் தெரிவித்துள்ளார்.

முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய பேரணியின் போது ஜனாதிபதிபாதுகாப்பு பிரிவைச் சேர்ந்தோர் ஊடகவியலாளரைத் தாக்கியதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## மீசாலைச்சந்தி சோதனை சாவடி அகற்றப்பட்டு சற்று அப்பால் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

மீசாலைச் சந்தியில் இருந்த படையினரின் சோதனைச் சாவடி அகற்றப்பட்டுள்ளது. இச் சாவடி சற்றுத் தள்ளி அல்லாரை வீதியில் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மீசாலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இன்னமும் பொது மக்களின் வீடுகள் கட்டடங்களில் படையினர் நிலை கொண்டிருப்பதால் பொது மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதனைக் கண்டித்து அண்மையில் அப்பகுதி மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியமை தெரிந்ததே. (உ-124)

## தத்தம் பிரச்சினைகளுக்கு தீர்வுதேடி அரசியல்துறை அலுவலகங்களுக்கு பெருமளவு மக்கள் படையெடுப்பு

(வவுனியா)

வவுனியாவிலும், மன்னாரிலும் திறந்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகங்களில் ஏராளமான முறைப்பாடுகள் பொது மக்களால் செய்யப்பட்டுள்ளது.

கசிப்பு உற்பத்தி, சமூகச் சீர்கேடுகள், கலாசார சீர்கேடுகள், சுகாதார சீர்கேடுகள் சம்பந்தமான முறைப்பாடுகளே இவற்றில் அதிகமானவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து, விடுதலைப் புலிகள் தமது அரசியல் நடவடிக்கைகளை இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களான வவுனியா, மன்னார் மாவட்டங்களில் மேற்கொள்வதற்காக அலுவலகங்களை திறந்து வைத்துள்ளமை தெரிந்ததே.

இவ் அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டு மிகவும் குறுகிய காலத்தில்ஏராளமானமுறைப்பாடுகளை பொது மக்கள் அங்கு செய்துள்ளனர்.

விடுதலைப் புலிகளிடம் தெரிவிக்கப்படும் இம் முறைப்பாடுகள் தினமும்தொடர்ந்து வருவதாகவும் அவற்றிற்கான உரிய நடவடிக்கைகளையும் விடுதலைப் புலிகள் எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார், வவுனியா மாவட்டங்களில் நிலவும் சுகாதார சீர்கேடுகள் தொடர்பாகவும் விடுதலைப்புலிகளின் கவனத்துக்கு மக்கள் கொண்டு வந்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க, இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசமான வுனியாவில் இம்முறை முதன் முதலாக மே தினத்தை நகரசபை மைதானத்தில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளும் விடுதலைப் புலிகளால் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் எமது வவுனியா நிருபர் அறிவித்துள்ளார். (வ)

## சுகாதாரக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபையின் சுகாதாரக்குழுக்கூட்டம் இன்று மு.ப. 10.00மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

மேற்படி கூட்டம் சுகாதாரக்குழுத்தலைவர் மனுவல் மங்களநேசன் தலைமையில் யாழ். மாநகரசபையின் கேட்போர்கூடத்தில் இடம் பெறவுள்ளது. (உ-19-6)

## ஆங்கிலதின போட்டிகள்

(கோப்பாய்)

யாழ். வலயப் பாடசாலைகளுக்கிடையேயான ஆங்கில தினப் போட்டி சம்பந்தமான முன்னாயத்தநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாடசாலை மட்டப் போட்டிகள் ஜூன் 10ம்திகதிக்குமுன்பாகவும் கோட்ட மட்டப் போட்டிகள் ஜூன் 17 ஆம் திகதிக்கு முன்பாகவும் வலய மட்டப் போட்டிகள் ஜூன் 24 ஆம் திகதி முன்பாகவும் நடத்திமுடிக்கப்படவுள்ளன.

3 ஆம் தரம் தொடக்கம் 13 ஆம் தரம் வரைஇப்போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும் யாழ். வலய ஆங்கில உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். தியாகராஜா தெரிவித்தார். (உ-79)

## வட-கிழக்கு பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய ஆயிரம் மில்லியன் தேவை

(கொழும்பு)

வடக்கு, போரினால் சேதமடைந்த பாடசாலைகளை புனரமைத்து அபிவிருத்தி செய்ய ஆயிரம் மில்லியன் ரூபா தேவைப்படும்என புனர்வாழ்வு புனரமைப்பு அகதிகள் மீள் குடியேற்ற அமைச்சு நடத்திய மதிப்பீட்டின் மூலம் தெரியவந்துள்ளது.

மேற்படி பாடசாலைகளை இனங்கண்டு மதிப்பீடுசெய்ய உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அதிகாரிகளை பணித்துள்ளார்.

உள்ளூர் கல்வி நிருவாக தலைமைகளுடன் இணைந்தே இம் மதிப்பீடு நடத்தப்படவிருக்கிறது.

தற்போது வட-கிழக்கில் ஆயிரத்து 989 பாடசாலைகள் உள்ளது, என்றும் அவற்றில் 172 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-3)

## வடக்கு- கிழக்கு விவசாய விருத்திக்கு ஐ. நா. சபை நிதியுதவி

(கொழும்பு)

இலங்கையில்வடக்கு- கிழக்கில் விவசாய துறையை அபிவிருத்தி செய்வதற்கு நிதி உதவி வழங்கப் போவதாக ஐ.நா சபை கூறியுள்ளது.

இந் நடவடிக்கையின் முதற்கட்டமாக 13.4 மில்லியன் டொலர்களை வழங்கவுள்ளது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன் படிக்கையின் கீழ், நடை முறைப்படுத்தப்படவுள்ள விவசாய அபிவிருத்தி மற்றும் மீன் பிடித்துறை ஆகியவற்றிற்கு இந் நிதி வழங்கப்படவுள்ளது. (உ-9)

## சாந்தி அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மீசாலை கரும்பி மாவடிக் கந்தன் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை சாந்தி அபிஷேகம் நடைபெற்று, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பூஜை வழிபாடுகள்நடைபெறவுள்ளன.

தென்மராட்சியில் மக்கள் இடம் பெயர்ந்த பின்னர் பூஜை வழிபாடுகள் நடைபெறாதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-124)

## உள்ளூர் விமானசேவை பதினொரு வெளிநாட்டு நிறுவனங்கள் விண்ணப்பம்

(கொழும்பு)

இலங்கையில் விமான சேவையை நடத்துவதற்கு 11 வெளிநாட்டு நிறுவனங்கள் அனுமதிகோரி விண்ணப்பித்துள்ளன.

இதேவேளை, தமக்கு அனுமதி வழங்கும்பட்சத்தில் இந் நிறுவனங்கள் யாழ்ப்பாண குடாநாட்டுக்கான சேவையையும் விஸ்தரிக்கும்எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-9)

# பட்டப்பின் படிப்பு விரிவுரைகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவனத்தின் பட்டப்பின்படிப்புடிப்ளோமா பகுதி II விரிவுரைகள் எதிர் வரும் 26 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி நிலையத்தில் ஆரம்ப மாகவுள்ளது.

இக் கற்றை நெறிக்கான பகுதி I பகுதி II மாணவர் களை எதிர்வரும் வெள்ளிக் கிழமையும்ஞாயிற்றுக்கிழமை யும் மேற்படி நிலையத்திற்கு சமுகமளிக்கும்படி சிரேஷ்ட விரிவுரையாளர் கே. சண்முக நாதன் அறிவித்துள்ளார்.

(எ)

கோபல்ற் சிகிச்சை அலகு கொள்வனவுக்கு 50 மில்லியன் ஒதுக்கீடு

# தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையம் விரைவில் இயங்க ஆரம்பிக்கும்

## யாழ். வந்த சுகாதார அமைச்சர் தகவல்

(தென்மராட்சி)

'தெல்லிப்பழையிலுள்ள புற்றுநோய் சிகிச்சைநிலையத் துக்குரிய கோபல்ற் சிகிச்சை அலகினைக் கொள்வனவு செய்ய பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்காவின் நிதியில் இருந்து 50 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே இச் சிகிச்சை நிலை யம் மிக விரைவில் ஆரம்பிக் கப்படும்.

யாழ்ப்பாணத்துக்கு இரு நாள் விஜயமொன்றை மேற் கொண்டு வந்திருந்தசுகாதார அமைச்சர் பி. தயாரத்னா யாழ். போதனா வைத்திய சாலையின் மருந்துக் களஞ்சி யக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற சுகாதார சேவை கள் தொடர்பான கலந்துரை யாடலின் போது தெரிவித் தார்.

இக்கலந் துரையாடலின் போது பணிப்பாளர் டாக்டர் செல்வி நவமணி கனகரத்தி னம், யாழ். பிராந்திய சுகா தாரப் பணிப்பாளர் டாக்டர் செல்விஉமா சிவபாத சுந்தரம் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, மனநோய் வைத்திய நிபுணர் பேராசிரியர் தயா. சோமசுந் தரம், தமிழர்விடுதலைக்கூட் டணி பாராளுமன்ற உறுப் பினர் மாவை சேனாதிராஜா மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் உட்பட வேறும் பலர்சமூகமளித்திருந்தனர்.

அமைச்சர் பி. தயாரத்னா அங்கு தொடர்ந்துகருத்துரை வழங்குகையில்,

இதுவரைகாலமும்சுகாதார சேவைகளைப் பெற முடியா திருந்த யாழ். குடா நாட்டு மக்களுக்கு போதிய சுகாதார சேவைகளைசுகாதாரஅமைச்சு விரைவாக வழங்கும்

யாழ். குடாநாடு இலங் கையின் இணைந்த பகுதி ஆத லால் இப்பகுதிக்கு சுகாதார சேவைகளை வழங்காமல் இருக்க முடியாது. சுகாதார சேவைகளில் உள்ளகுறைபாடு கள் தேவைகள் இனங்கண்டு அவற்றை நீக்கி சீரான சுகா தார சேவைகள் வழங்க நட வடிக்கை எடுக்கப்படும் என் றார்.

மனநோய் வைத்திய நிபு ணர் பேராசிரியர் தயா.சோம சுந்தரம் அங்கு உரையாற்றும் போது.

குடா நாட்டு வைத்தியசாலை களில் டாக்டர்களுக்கான பற் றாக் குறை நீண்டகாலமாக நிலவிவருகின்றது. குறிப்பாக மன நோய் வைத்திய நிபுணர் களுக்கு அதிக வெற்றிடங்கள் உண்டு. தெல்லிப் பழை, மாவட்ட அரசினர் வைத்தி யசாலை, பருத்தித்துறை அர சினர் ஆதாரவைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைக ளில் மனநோய் வைத்தியநிபு ணர்கள், அத்துறை சார்ந்த தாதிகள் இல்லை.

மனநோய் வைத்தியர்க ளைப் பெற்றுக்கொள்வதற்கு நீண்டகாலமாக விண்ணப் பங்கள் கோரப்படவில்லை. ஆயினும் மனநோய் வைத்திய நிபுணர்கள் பலர் யாழ்ப்பா ணத்தில் கடமையாற்ற விருப் பம் தெரிவித்துள்ளனர் எனக் கூறினார்.

இந் நிகழ்வின் போது சுகா தார அமைச்சர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு 20 மில்லியன் ரூபா பெறுமதி யான வைத்திய உபகரணங் களையும், ஒரு லொறியையும் அன்பளிப்புச் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுகாதார அமைச்சருடன் அமைச்சின் செயலாளர் உட் பட 20க்கு மேற்பட்ட உயர் அதிகாரிகளும் வருகைதந்தி ருந்தனர். (உ-77-6)

## ஜனாதிபதி பாதுகாப்பு

# பிரிவுத்தலைவர் நிகாலுக்கு 20 வரை விளக்கமறியல்

(கொழும்பு)

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் தலைவர் நிகால் கருணாரட்ணா எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள் ளார்.

நேற்று முன்தினம்கண்டி நீதி மன்றொன்றில் ஆஜர்படுத்தப் பட்டபோது மேலதிக நீதி வான் பிரதீப்ஹெட்டியாராட் சியினாலேயே இவ்விளக்க மறியல் உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது.

கடந்தவருடம் நடைபெற்ற பாராளுமன்ற பொதுத்தேர் தலின்போது சமுர்த்தி அமைச் சர்எஸ்.பி. திஸாநாயக்காவை டுகொலைசெய்ய முற்பட் டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைதுசெய் யப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# பேருவளை நகர முதல்வருக்கு யாழ்.மாநகர சபையில் பொது வரவேற்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்துக்குவிஜயம் செய்திருந்த பேருவளை நகர முதல்வர் பசாட்முகமட்டுக்கு யாழ்ப்பாண மாநகர முதல் வர் செல்லன் கந்தையன் மாநகர சபையில் பொது வர வேற்பு அளித்துக் கௌரவித் தார்.

அண்மையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் மாநகர முதல்வர் பேருவளை நகர முதல்வரிடம் யாழ்ப்பாண மாநகர சபை எதிர் நோக்கி வருகின்றபிரச்சினைகள்பற்றி யும் தேவைகள் பற்றியும் விரி வாக எடுத்துக் கூறியிருந் தார். (உ-77)

## தமிழ்ப்பொலிஸார்

# தென் பகுதிக்கு திடீர் இடமாற்றம்

(வவுனியா)

வவுனியாவில் கடமை யாற்றி வந்த 7 தமிழ்ப் பொலிஸாருக்கு,தென்பகுதிக் குத் திடீர் இடமாற்றம் வழங் கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை காலை-வவு னியா பொலிஸ் நிலையத்தில் இருந்து இத் திடீர் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா நீதிமன்றக் கடமைகளில் ஈடுபடும் 4பேர் உட்பட ஒரு சப் இன்ஸ்பெக் டருக்கும்,6 பொலிஸ் சார் ஜன்டுகளுக்குமே இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும்,

சமாதானச் சூழல் நிலவும் இவ் வேளையில்,தென்பகுதிக் கான திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டமை குறித்து எதுவித விளக்கமும் கொடுக் கப்படவில்லை எனவும் தெரி விக்கப்படுகிறது. (உ)

# இடி மின்னல் தாக்கி இம்மாதம் 38பேர் மரணம்

(கொழும்பு)

மார்ச் மாதத்திலிருந்து மொன்சூன் பருவம் ஆரம்பித் திருக்கிறது. இதனால் இந்த ஒருமாதத்தில் மட்டும் இலங்கையின் பல பாகங்களி லுமாக மொத்தம் 38 பேர் கள் இடி மின்னல் தாக்கி மரணமடைந்துள்ளனர் இவ் வாறு பொலிஸ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடி மின்னலுக் கெதிராக தம்மை பாதுகாத்துக் கொள் ளும் முறைகள் பற்றி வளி மண்டலவியல் திணைக்களம் போதிய முன்னெச்சரிக்கை ஆலோசனைகளை விடுத்தி ருந்தும்மரணங்கள் அதிகரித்து வருவது பற்றி கவலை தெரி விக்கப்பட்டுள்ளது. (உ)

## தொழில்பயிற்சி பெற்றவர்கள் இல்லை

# வருடாந்தம் 50ஆயிரம் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் இழப்பு

(கொழும்பு)

வருடந்தோறும் 50ஆயிரம் வெளிநாட்டு வேலைவாய்ப் புக்களை இலங்கை இழந்து வருவதாக தொழில்வேலை வாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்காதெரிவித்துள்ளார்:

வெளிநாட்டு வேலைவாய்ப் புக்களுக்கு ஏற்ப தொழிற் பயிற் சிகள் வழங்கப்படாமை யே இவ் வேலைவாய்ப்புக் களை இழப்பதற்கு காரணம் எனவும் அவர் தெரிவித்துள் ளார்.

குறுகிய நீண்டகால தொழிற்பயிற்சி செயற்திட் டங்களை உருவாக்கி இலங் கையிலுள்ள இளைஞர்,யுவதி களுக்கான வெளிநாட்டு வேலைவாய்ப் புக்களை பெற் றுக்கொடுக்க முடியும்.

இதற்காக வெளிநாட்டுநிறு வனங்களின் நிதியுதவிமற்றும் தொழில்நுட்ப உதவியுடன் இந்தத்திட்டம் உருவாக்கப் படும் எனவும் தெரிவித்துள் ளார். (உ-8)

# சூசையப்பர் தினம்

(யாழ்ப்பாணம்)

எதிர் வரும் மேமாதம் முத லாம் திகதி புனிதசூசையப்பர் தினத்தை முன்னிட்டு யாழ். மறை மாவட்டத்தில் உள்ள சூசையப்பர் ஆலயங்களில் திருநாள் திருப்பலிகள் இடம் பெறவுள்ளன.

ஊர்காவற்றுறை கோப் பாய்,அளவெட்டி அச்சுவேலி புதுக்குடியிருப்பு ஆகிய பகு திகளில் உள்ள சூசையப்பர் ஆலயங்களில் திருநாள் திருப் பலிகள் சிறப்பாக நடைபெற வுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

## பிராந்திய மேன்முறையீட்டு

# நீதிமன்றங்கள் அமைக்கும் சட்டவரைபு தயாரிப்பு

(கொழும்பு)

வழக்கு விசாரணைகள் தாமதமாவதைத் தடுப்பதற் காக பிராந்திய மேன்முறை யீட்டு நீதிமன்றங்கள் அமைப் பது தொடர்பான சட்ட வரைவு ஜி. எல். பீரிஸினால் தயாரிக்கப்பட்டு அரசாங்கத் தின் பரிசீலனையிலிருப்பதாக பிரதம நீதியரசர் சரத். என். சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நடை பெற்ற சட்டஉதவிகள் சம்பந் தமான தேசிய மாநாட்டி லேயே மேற்படி தெரிவித்துள் ளார்.

மேலும் அவர் கூறியதா வது;

பிராந்திய மேன்முறை யீட்டு நீதிமன்று அமைக்கப் படவிருப்பது இதுவே முதற் தடவையாகும்.

இதன் மூலம் வழக்கு விசா ரணைகளின் தாமதங்கள் தவிர்க்கப்படும்.

இப் பிராந்திய நீதிமன்றங் கள் மூலம் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை துரித மாக்க முடியும்.

குற்ற செயல்களால் பாதிக் கப்பட்டவர்களின் நலன் களைப் பேணுவதற்காக அதற்கென ஒரு அமைப்பை நிறுவவேண்டும் என்றும் தெரி வித்துள்ளார். (உ-3)

## தமிழக முகாம்களிலுள்ள

# ஈழ அகதிகள் விவகாரத்தில் அமைச்சர் ஜயலத் ஆர்வம்

(கொழும்பு)

தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளை திருப்பியழைப்பது குறித்து கவனம் செலுத்தப் போவதாக புனர்வாழ்வு புன ரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத்ஜெயவர்த்தனா தெரி வித்துள்ளார்.

தமிழக முகாம்களில் சுமார் 4 இலட்சம் அகதிகள் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களில் பெரும்பாலா னோர் இலங்கை திரும்புவ தற்கு விருப்பம் தெரிவித் ததை அடுத்தே அமைச்சர் இது தொடர்பாக இந்தியாவு டன் தொடர்பு கொண்டுள் ளார்.

இலங்கை அரசாங்கத்துட னும் இந்திய அரசாங்கத்துட னும் இதுதொடர்பாக பேச்சு வார்த்தையொன்றை நடத் தப் போவதாகவும் அவர்தெரி வித்துள்ளார்.

இலங்கையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்ட பின்னர் தமிழகத்தி லுள்ள இலங்கை அகதிகள் விருப்பத்தின் பெயரில் நாடு திரும்புவதற்கு விண்ணப்பிக் கலாம் என தெரிவிக்கப்பட் டதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## மீளக் குடியமரும் முஸ்லிம்களுக்கு

# யு. என். எச். சி. ஆர் ஊடாக உதவி வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களை மீண்டும் மீளக்குடியமர்த்தும் போது அவர்களுக்கு தேவை யான உதவிகளை யு என். எச். சி. ஆர், யு. என். டி. பி ஆகியன ஊடாக வழங்க நட வடிக்கை எடுப்பதாக இலங் கைக்கான பிரிட்டிஷ் தூது வர், மற்றும் ஐ. நா. அமைப் பின் தூதுக்குழுக்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் உறுதியளித்துள்ளன.

இது சம்மந்தமாக அமைச் சர் ரவூப் ஹக்கீம் தெரிவிக் கையில், மீள்குடியமர்வு உதவி கள் குறித்து தூதுக்குழு விசேடமாக சகலதரப்பினரு டனும் கலந்தாலோசிப்பார் எனவும்,

இதுசம்மந்தமாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி புத் தளம், மற்றும் பல்வேறு இடங்களுக்கும் விஜயம் செய்து அறிக்கை ஒன்றையும் ஐ. நா. செயலாளர் நாயகத் துக்கும் அனுப்பிவைக்கவுள்ள தாகவும் தெரிவித்துள்ளார். (உ-9)

# 101பேர் கைது

(கொழும்பு)

பொத்துவில் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மின்சாரத் தைப் பாவித்த 101 பேரை, நேற்றுமுன்தினம் அக்கரைப் பற்று பொலிஸார் மின்சார சபையின் புலனாய்வுப் பிரிவி னருடன் சேர்ந்து கைதுசெய் துள்ளனர். (உ-9)

## இன்று ஒரு தகவல்

### நம்பிக்கை தந்த அற்புதம்

ஒருவனுடைய மகன் தீராத நோய்வாய்ப்பட்டு மரணத் தறுவாயில் இருந்தான். எவ்வளவோ வைத்தியம் செய்து பார்த்தார்கள். நோய் குணமாகவில்லை. இந்த நிலையில் அங்கு வந்த ஒரு சன்னியாசி 'ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. சுவாதி நட்சத்திரம் உச்ச நிலையில் இருக்கும்போது மழை பெய்ய வேண்டும். அப்படிப் பெய்யும் மழைத்தண்ணீர் ஒரு மண்டையோட்டில் விழவேண்டும். மண்டையோட்டின் அருகில் ஒரு தவளையைப் பிடிப்பதற்காகப் பாம்பு ஒன்று துரத்த வேண்டும். தவளையைப் பாம்பு பிடிக்கப் போகும் தறுவாயில் அது தப்பி மண்டையோட்டைத் தாண்டிக் குதிக்கவேண்டும். அப்படித் தாண்டிக் குதிக்கும் போது பாம்பின் விஷம் மண்டையோட்டில் உள்ள தண்ணீரில் விழவேண்டும். பிறகு அந்த விஷத்தையும் தண்ணீரையும் கொண்டு மருந்து தயாரித்து உன் மகனுக்குக் கொடுத்தால் அவன் பிழைத்துக் கொள்வான்' என்று சொன்னார்.

உடனே அந்த மனிதன் நாள், நட்சத்திரம் எப்படி இருக்கிறது என்றுகாலத்தைக் கவனித்துப் பார்த்தான். சுவாதி நட்சத்திரம் மறுநாள் உதயமாகும் என்பது தெரிய வந்தது. அவன் இறைவனை நினைத்து, 'பெருமானே இந்த நிபந்தனைகளை எல்லாம் நிறைவேற்றித் தந்து எனது மகனைக் காப்பாற்றுங்கள்' என உளமார மனம் கசிந்து பிரார்த்தித்துக் கொண்டான். பிறகு அவன், அதிகச் சிரத்தையுடனும் ஆவலுடனும் எங்கேயாவது ஒரு மண்டையோடு கிடைக்குமா என்று தேடிக்கொண்டே சென்றான். கடைசியில் ஒரு மரத்தின் அடியில்ஒருமண்டை ஓடு இருப்பதைப் பார்த்தான். அதை எடுத்து ஒரு பக்கமாக வைத்து, மீண்டும் இறைவனின் திருவருள் துணையை வேண்டிப் பிரார்த்தித்தான். சிறிது நேரத்தில் சுவாதி நட்சத்திரம் உச்சத்திற்கு வந்தபோது லேசாக மழை பெய்ய ஆரம்பித்தது. அவன் வைத்திருந்த மண்டையோட்டிலும் மழை நீர் விழுந்தது.

பிறகு அவன், 'பகவானே! உமது திருவருளால் இரண்டு காரியங்கள் நடந்தேறிவிட்டன. இப்போது கிருபை கூர்ந்து மற்றொன்றையும் நிறைவேற்றி வைத்து என் மகனுக்கு உயிர்ப்பிச்சை தாருங்கள்' என்று மனம் தோய்ந்து பிரார்த்தித்தான். சிறிது நேரம் ஆயிற்று. மண்டையோடு வைத்திருந்தஇடத்தின் பக்கமாக ஒருதவளைவந்தது. அதைக்கண்ட அவன் மீண்டும் மீண்டும் பகவானைப் பிரார்த்தித்தான். அவனது பிரார்த்தனை வீண்போகவில்லை. சிறிதுநேரத்தில் ஒரு நல்லபாம்பு தவளையைப் பிடிப்பதற்காக அந்தப் பக்கமாகவந்தது. அதைக்கண்டதும், விருப்பிபடியே எல்லாம் நல்லவிதமாக நடக்கவேண்டும் என்பதால் அவனது இதயம் படபடவென்று அடித்துக்கொண்டது. அந்தநிலையிலும் ஈசுவரனை நினைத்து அவன் பிரார்த்தித்துக்கொண்டிருந்தான். 'வந்தபாம்பு' தவளையைப் பிடிப்பதற்காகத் துரத்தியது பாம்பு மண்டையோட்டின் அருகில் வந்து தவளையைப் பிடிக்கப் பாய்ந்த சமயத்தில், தவளை தப்பித்துக் கொள்வதற்காக மண்டையோட்டைத் தாண்டிக்குதித்தது. அதேநேரத்தில் அந்தக்கணத்தில் நல்ல பாம்பின் விஷம் மண்டையோட்டில் விழுந்தது.

இதைக்கண்ட மனிதன் கடவுளின் கிருபையை நினைத்து உள்ளம்பூரித்தான். 'பரமேஸ்வரா, உமது திருவருளால் நடக்கவே இயலாத செயல்களும் நடந்தேறுகின்றன. இனி எனதுமகன் உயிர் பிழைத்துக்கொள்வான்' என்றுநன்றியறிதலோடுஇறைவனை நினைத்துச் சொன்னான். ஆகையால்தீவிரமான ஆவல், உண்மையான நம்பிக்கை ஆகியவற்றை முழு அளவில் பெற்றிருந்தால் கடவுள் கிருபையால் உனக்குத் தேவையானவை எல்லாம் நடந்தேறும் என்று நான் கூறுகின்றேன். கடவுள் எல்லாவற்றையும் அறிய வல்லவர். சிறிய துரும்புவிழும் சப்தத்தையும் அவர் அறிவார். ஆதலால் என் செல்வக் குழந்தைகளே உங்கள் பிரார்த்தனை ஒவ்வொன்றும் அவரது செவியில்படும். என்று சொல்கிறார். ஸ்ரீராமகிருஷ்ணர். உண்மைப் பிரார்த்தனை ஒருநாளும் வீண்போகாது. சர்வசக்திமானாகிய இறைவன் தமது பக்தர்கள் உளமார எதை வேண்டிப் பிரார்த்தித்தாலும் உறுதியாக அதை நிறைவேற்றித் தந்திடுவார். இது உண்மை. உறுதி. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

நன்றி
ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்

# போர் முனைப் போராளிகளுக்கு மாபெரும் விளையாட்டு விழா

(வவுனியா)

ஆனையிறவுப் பெருந்தளம் விடுதலைப் புலிகளால் வெற்றி கொள்ளப்பட்ட 2ஆம் ஆண்டு நினைவு நாளையும், அதனை மீளக்கைப்பற்றவென்று முடுக்கி விடப்பட்ட 'தீச்சுவாலை' படை நடவடிக்கை முறியடிப்பின் முதலாவது ஆண்டு நிறைவையொட்டியும் போர் முனைப் போராளிகளுக்கான மாபெரும் விளையாட்டுவிழா நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. இவ்விழா எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளது.

ஆரம்ப நாளன்று ஆண் போராளிகளுக்கான மரதன் ஓட்டத்தை தீச்சுவாலை முறியடிப்பை நேரடியாக களத்தில் நின்று வழிநடத்திய கேணல் பானு, கேணல் தீபன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

பெண் போராளிகளுக்கான மரதன் ஓட்டத்தை கேணல் விதுஷா, கேணல் கெங்கா ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். (உ-9)

# இந்திய இராணுவத்தை அனுப்பி பிரபாவை கைது செய்ய வேண்டும்

### வலியுறுத்தி விரைவில் தமிழக ராஜீவ் காங்கிரஸ் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப் புலிகளின் தலைவரை கைது செய்வதற்காக இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் எனக் கோரி தமிழகத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கு தமிழக ராஜீவ் காங்கிரஸ் ஏற்பாடு செய்துள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றவாளியென அறிவிக்கப்பட்ட தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைவரை கைதுசெய்து விசாரணைக்குட்படுத்த வேண்டும் என இவ் வார்ப்பாட்டக்காரர்கள் இந்திய அரசைக் கோரவுள்ளனர்.

இதேவேளை, பிரபாகரனை இந்தியாவுக்கு கொண்டுவரக்கோரி சென்னையில் நேற்று முந்தினம் தமிழ்நாடு காங்கிரஸின் உறுப்பினர் வாழப்பாடி இராமமூர்த்தி உண்ணாவிரதமிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## இரத்மலானை - பலாலி விமானத் தளங்களைப் புனரமைக்க வழியில்லை

(கொழும்பு)

விமானப்படையினரால் நிர்வகிக்கப்படும் இரத்மலானை பலாலி விமான சேவையினை சிவில் விமான சேவைகள் திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறுவிமான சேவைகள் பணிப்பாளர் பாதுகாப்பு அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விரு விமானத்தளங்களும் விமானப்படையின் கட்டுப்பாட்டில் உள்ள காரணத்தால் அவற்றினை அபிவிருத்தி செய்ய முடியவில்லையென சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் எல்லியனராட்சி தெரிவித்துள்ளார்.

மேற்படி விமான நிலையங்களில் ஓடுபாதைகள் சேதம் உட்பட பல குறைபாடுகள் காணப்படுகின்றன.

சிவில் விமான சேவைகள் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட அவ் வேண்டுகோளுக்கு இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## வம்பு புரிந்தவருக்கு மக்களின் தண்டனை

(யாழ்ப்பாணம்)

வீதியால் செல்லும் பெண்களுடன் வீண்வம்பு புரிந்து வந்த நபர் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப் புடைக்கப்பட்டார்.

கொக்குவில் கிழக்குப் பகுதியில் இந்தச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மேற்படி நபர், தினமும் பெண்கள் பின்னால்அலைந்து அவர்களுக்குத் தொல்லை கொடுத்து வந்ததாகவும்,

இதனைப் பொறுக்கமுடியாத ஊர்மக்கள் சம்பவதினத்தன்று கையும் மெய்யுமாக நபரைப் பிடித்து நல்ல சாத்தல் வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-19

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துசமயப் பேரவையின் சைவாலயக் கிரியைகளும் ஆலய பரிபாலனமும் சம்பந்தமான கருத்தரங்கு திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் 27 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு தலைவர் அருட்கவி சீ. வினாசித்தம்பிதலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில்ஆலய நிர்மாணம், சைவாலய பூஜையில் சிவாச்சாரியார், ஆன்மார்த்த பரார்த்த பூஜைநெறி, மஹா கும்பாபிஷேகம், மஹோற்சவக் கிரியைகள், சைவாலய பரிபாலனம் ஆகிய விடயங்களில் சமயப்பெரியார்கள்கருத்துரை வழங்கவுள்ளதுடன்,

ஆலயப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான நடைமுறைகள் பற்றிய கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது. (உ)

# தனியார் பஸ்வண்டி உரிமையாளர்கள் புலிகளுடன் இன்று பேச்சு

(கொழும்பு)

தனியார் பஸ்வண்டி உரிமையாளர் சங்கத்திற்கும் விடுதலை புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கும் இடையே இன்று கிளிநொச்சியில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும்இடையே ஏ-9 பாதையூடாக தனியார் பஸ் சேவைகளினை நடத்துவது தொடர்பாகவே இக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு தரைவழியூடாக செல்லவிருந்த பஸ் சேவைகள் யாவும் புலிகளின் அனுமதி பெறாத காரணத்தால் இடைநிறுத்தம் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## வெட்டுப்புள்ளி விரைவில்

(கொழும்பு)

பல்கலைக்கழகஅனுமதியைத் தீர்மானிக்கும் வெட்டுப்புள்ளிகள் எதிர்வரும் 3 வாரங்களில் வெளிவரும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தினால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட இசற்கோர் முறைக்கமைவாகவே இவ் வெட்டுப்புள்ளிகள் யாவும் வெளியிடப்படவுள்ளன. (உ-8)

# கோள்களின் அணி திரள்வு ஒத்திசைவை ஏற்படுத்தும்

### பிரி.சோதிடர்கள் நம்பிக்கை

ஒரு நூற்றாண்டில் ஒரு தடவை மட்டும் அரிதாக ஏற்படும் கோள்களின் அணி திரள்வு பலருக்கும் சிறப்புத் தருவதாகவும், மனிதருக்குள் ஒத்திசைவு மனப்பான்மை கூட்டுத்தொழிற்பாடுகளில் கரிசனை என்பவற்றினை ஏற்படுத்தும் என்றும்பிரிட்டனின் சோதிடர்கள் நம்பிக்கைவெளியிட்டுள்ளனர்.

இப்போது புதன், சுக்கிரன், செவ்வாய், சனி, வியாழன்என்பன நெருக்கமாக வருகின்றன:

இவற்றை சூரியன்மறைந்து 45நிமிடங்களின் பின்னர் இந்தக் கோள்கள் 10 பாகை வரையான வித்தியாசத்தில் மேற்கு அடிவானில் இருந்து எழுந்து வருவதை சாதாரண கண்களால் பார்க்க முடியும். ஜூன் மாத முற்பகுதிவரை இக் காட்சியைப் பார்க்க முடியும். (உ)

## மேலும் ஒருமாதம் பாலாவின் விசா அனுமதி நீடிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் விசா அனுமதிப்பத்திரத்தை நீடிக்குமாறு குடிவரவு குடியகல்வு திணைக்களத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின்தலைவர் பிரபாகரனினாலும் பிரதமரினாலும் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வுஒப்பந்தத்தையடுத்து லண்டனிலிருந்து இவர் கடந்த மாதம் ஒருமாத விசா அனுமதியில் வன்னிக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர் இலங்கை வருவதற்கு அனுமதி கொடுத்த குடிவரவு குடியகல்வு திணைக்களமே அதனை நீடிப்பதற்கும் ஆவன செய்யவேண்டும். (உ-8)

## சிந்தனைக்கு விருந்து

### பெற்றோர் புலம்புகின்றனர்

பகலிர வதுபா ராது
பாடுபட் டுழைத் தனுப்பச்
சுகமாகக் கொழும்பு சென்று
சோக்காகச் செலவ ழித்தார்
மகன் விபத்தினிலே சிக்கி
மாண்டனன் எனுஞ் செய்தி
புகச் செய்வ தறியாதின்று
புலம்புகின் றார்கள் பெற்றோர்.

- பழையவன்

# தீவகத்தில் இருந்து கண்காணிப்பு குழுவுக்கு பெருமளவு முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இதுவரை செய்யப்பட்ட முறைப்பாடுகளில் பல, தீவகத்தில் இருந்தே கிடைத்திருப்பதாக கண்காணிப்புக் குழுவின் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

தவிரவும், தனியார் வீடுகளில் படையினர் நிலைகொண்டுள்ளமை, சோதனைச் சாவடிகளில் பொதுமக்களை ஏற்றியிறக்கி வீண்சிரமங்களுக்கு ஆளாக்குதல் தொடர்பான முறைப்பாடுகள் தினமும் கணிசமான அளவு வந்துகொண்டிருப்பதாகவும்,

இவைகள் தொடர்பாக படை உயரதிகாரிகளோடு தொடர்பு கொண்டிருப்பதாகவும் கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, கடந்த 14 ஆம் திகதி பிற்பகல் வேளை மிருசுவில் காப்பரண் ஊடாகத் தாம் செல்ல முற்பட்ட வேளை படையினர் தம்மையே திருப்பியனுப்பியதாகவும்,

இது தொடர்பாக காங்கேசன் துறை இராணுவ அதிகாரிக்கு தகவல் அனுப்பியதைத் தொடர்ந்து அவர்கள் இனிமேல் இவ்வாறு இடம்பெறாதென உறுதிமொழியளித்திருப்பதாகவும் தெரிவித்தனர். (உ-19)

# அஹமதாபாத்தில் மதக் கலவரம் வெடிப்பு 8 பேர் உயிரிழப்பு

(புதுடில்லி)

அஹமதாபாத்தில் சார்கூர் பிரகாம்கூர் பகுதிகளில்நேற்று முன்தினம் எழுந்த மத வன்முறைகளில் 8 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் 4 பேர் காவல் துறையின் துப்பாக்கி சூட்டிலும் 2 பேர் கல் வீச்சிலும், 2 பேர் கத்திக்குத்திற்கும் இலக்காகி உயிரிழந்துள்ளனர்.

அப்பகுதியில் வீடுகளுக்கும், கடைகளுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, அப்பகுதிகளில் காலவரையறையற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதுடன், பதற்றத்துக்குள்ளாகியுள்ள இடங்களில் இராணுவம் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளது. (உ-9)

# சமாதானத்திற்கு உதவும் நீண்ட பயணத்தில் நாம் இணைந்துள்ளோம்

## தென்பகுதி வர்த்தகர்களை வரவேற்கும் நிகழ்வில் உரை

(யாழ்ப்பாணம்)

நாங்கள் கூட்டாக வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் பரஸ்பரம் இருவரும் சமுதாயத்திற்கு உதவுவதற்கான நீண்ட பயணத்தில் இணைந்துள்ளோம்.

இதன் ஆரம்பமாக தங்களின் இன்றைய வருகைவிளங்குகிறதுஎன்று யாழ்ப்பாண வணிகர்சங்கத் தலைவர் எஸ்.ஜெயசேகரம் தெரிவித்தார்.

தென்பகுதியிலிருந்துயாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த வர்த்தகர் தூதுக்குழுவினரை யாழ்ப்பாணவர்த்தகர் சங்கம் வரவேற்று அறிமுகம்செய்யும் நிகழ்வு நேற்று முற்பகல் மேற்படி சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது.

தென்பகுதியிலிருந்து வருகை தந்த 42 வர்த்தகர்கள இந்நிகழ்வில் சமுகமளித்தனர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்: யாழ்வர்த்தகர் சமூகத்தைச் சந்திப்பதற்காக தாங்கள் மேற்கொண்டுள்ள விஜயம் போன்று மேலும் தொடர வேண்டும்.

அதன்மூலம் வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே நல்லெண்ணமும் புரிந்துணர்வும் வளர்ந்து நிரந்தர சமாதானம் மலர வேண்டும் என்று நாம் விரும்புகிறோம் என்று குறிப்பிட்டார். (எ)

## பௌர்ணமி தின ஆன்மீக நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பௌர்ணமி தினத்தை முன்னிட்டு காலை 9.00மணி தொடக்கம் காயத்திரி மந்திர ஜெபம், இலட்சார்ச்சனை, பண்ணிசை, பஜனை, சொற்பொழிவு போன்ற ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெற்று நண்பகல் நாராயண சேவையும்நடைபெறும். (செ)

# நித்திரையிலிருந்த சிறுவர்கள் 4 பேர் மண்சரிவினால் மரணம்

(சுவா)

பிஜிதீவில் பெய்த அடைமழையினால் ஏற்பட்ட மண்சரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த4 சிறுவர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

தலைநகரான சுவாவிற்கு 250கிலோமீற்றர் தூரத்திலுள்ள றாவிதீவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

3வயது முதல் 16 வயது வரையான சிறுவர்கள் தமது வீட்டில் தூங்கிகொண்டிருந்த போது இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-9)

# எரிந்த கப்பலில் இருந்து 3 வாரங்களின் பின் உயிருடன் நாய் மீட்பு

(வாஷிங்டன்)

ஹவாய் பகுதியில் தீப்பிடித்த கப்பலில் இருந்து3 வாரங்களின் பின் நாயொன்றை அமெரிக்க கரையோர காவல படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்தமாதம் 2 ஆம் திகதி இந்தோனேசியா எண்ணெய் தாங்கிக்கப்பலொன்றுஹவாய் பகுதியில் தீப்பிடித்ததை தொடர்ந்து அக்கப்பல் கைவிடப்பட்டிருந்தது.

உணவு, நீராகாரம் எதுவுமின்றியும், மூன்று வாரங்களின் பின் மீட்கப்பட்ட இந்நாய் அதிசயத்துக்குரியது என அமெரிக்க மனித நேயச்சங்கம் தெரிவித்துள்ளது. (உ-8)

# நகர அபிவிருத்தி அமைச்சர் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

நகர அபிவிருத்திஅமைச்சர் எம். எச். முகமட் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

யாழ். மாநகரசபை வளவினுள் புனரமைப்பு செய்யப்பட்டநகர அபிவிருத்திஅதிகாரசபையின் அலுவலகத்தை அவர் திறந்துவைப்பார்என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-247)

# வடமராட்சி கிழக்கில் இலவச மருத்துவ முகாம் 250 பொதுமக்கள் பயன்

(மந்திகை)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் வடமராட்சி கிழக்கில் நடாத்தப்பட்ட மருத்துவ முகாமில் 250துக்கு மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடந்த ஞாயிறன்று குடத்தன தென்னிந்திய திருச்சபை மண்டபத்தில் நடத்தப்பட்ட மேற்படி மருத்துவ முகாமில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த 126 பேருக்கு கண்ணாடி வழங்கப்பட்டது.

மேலும் 125 பேருக்கு மேற்பட்டோர் நீரிழிவு, இரத்த அழுத்தம், மலேரியா போன்ற நோய்களிற்கு சிகிச்சை பெற்றுள்ளனர். (உ-23)

# அயல் நாடென்ற வகையில் இந்தியா ஆதரவு மட்டுமே

## அரசு-புலிகள் தாய்லாந்தில் பேச்சு

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையே தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தையில், இந்தியா ஓர் அயல் நாடு என்ற ஆதரவோடு நிறுத்திக் கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவு துறையின் இணையமைச்சர் ஓமர் அப்துல்லா நேற்று முன்தினம் புதுடில்லியில்பத்திரிகையாளர்களிடம் பேசும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெற்று வரும் இனப்பிரச்சினை தொடர்பான அனைத்து விடயங்களிற்கும் இந்தியா ஆதரவு வழங்கும் எனவும்,

இலங்கைத் தீவிற்கு அமைதி வரவேண்டுமென்று இந்தியா விரும்பினாலும், அதன் எல்லைப்புற பாதுகாப்பில் அக்கறையுடன் இருக்கவேண்டும் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

# தேவாலய விவகாரம் விரைவில் முடிவுக்கு வரும்

(ஜெருசலேம்)

பெத்தலஹேம் நகரிலுள்ள சேச் ஒவ் நேற்றிவிற்றியுள் பணயக்கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் பலஸ்தீனர்களின் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் நேற்று இஸ்ரேலிய-பலஸ்தீன அதிகாரிகள் கலந்துரையாடலொன்றை நடத்தியுள்ளனர்.

இஸ்ரேலியர்கள் கடந்த இரண்டாம் திகதி பலஸ்தீன நகரங்களின் மீது நடத்தப்பட்ட முற்றுகையை அடுத்தே இத்தேவாலயம் சர்ச்சைக்குரிய வொன்றாக மாறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலின் முற்றுகையை அடுத்து, பாதிரிமாரும் 200 பலஸ்தீனர்களும் தேவாலயத்தினுள் இருந்து வருகிறார்கள்.

தேவாலயத்தினுள் சந்திப்பை நிகழ்த்த இஸ்ரேலிய அதிகாரிகளுக்கு பலஸ்தீன அதிகாரி அனுமதியளித்தார் என பலஸ்தீன சட்டசபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-8)

# மேயரின் பாவனைக்கு கார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர முதல்வர் எஸ். கந்தையனின்பாவனைக்கென விரைவில் கார்ஒன்று எடுத்துவரப்படவுள்ளது.

தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தின் அன்பளிப்பான இக் கார் தற்போது கொழும்பில் உள்ளது.

இதேவேளை, வாகனவசதியற்ற நிலையில் இவ்வளவு காலமும், முதல்வர் நோயாளர் அம்புலன்ஸ் வண்டியை தனது தேவைகளுக்குப் பயன்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-247)

# வெனிசூலாவின் விமானப்படைத் தளபதி ஹெலி விபத்தில் பலி

(கராகாஸ்)

வெனிசூலாவின் விமானபடைத்தளபதி ஜெனரல் லூயிஸ் அசெவீடோ ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இவருடன் மேலும் 9 பேர் மரணமடைந்துள்ளனர்.

சீரற்ற காலநிலையாலேயே மேற்படி விபத்து இடம் பெற்றுள்ளது.

அண்மையில் வெனிசூலாவில் சதிப்புரட்சிஒன்று முறியடிக்கப்பட்டதை தொடர்ந்து இவர் விமானப்படைத்தளபதியாக நியமிக்கப்பட்டிருந்தார். (உ-3)

# பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தல் முதல் கட்ட வாக்கெடுப்பில் பிரதமர் படுதோல்வி

(பாரிஸ்)

பிரான்ஸில் நடந்து முடிந்த ஜனாதிபதிபதவிக்கான முதல் கட்ட வாக்கெடுப்பில் தற்போதைய பிரதமர் லயனல் ரொக்சின் தோல்வியடைந்துள்ளார்.

இதேவேளை, தர்சோர்க், தீவிர வலதுசாரிக் கட்சி தலைவர் ஜீ. மரீ. லோக்கன் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

இதனையடுத்து லயனல் பிரதமர் ரொக்சின் தான் அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். (உ-9)

# இலங்கை நிலைவரம் குறித்து ஜனாதிபதி இந்திய வெளியுறவு அமைச்சரை சந்தித்து விளக்கம்

(புதுடில்லி)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினாலும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனினாலும்கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இந்திய வெளியுறவுஅமைச்சர் ஜஸ்வந்சிங்கிற்கு விளக்கமளித்துள்ளார்.

தனிப்பட்ட விடயமாக இந்தியாவுக்கு நேற்று முன்தினம் விஜயமொன்றை மேற்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா இந்திய வெளியுறவு அமைச்சரை நேற்று சந்தித்தார்.

அச்சந்திப்பின் போது எதிர்வரும் ஜூன் மாதம் தாய்லாந்தில் நடைபெறவிருக்கும்அரசு புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்தும் விளக்கமளித்துள்ளார்.

இதேவேளை இந்தியபிரதமமந்திரி அடல் பிஹாரி வாஜ்பாஜை இன்று சந்திப்பதுடன் குடியரசு தலைவர்கே.ஆர். நாராயணன், எதிர்க்கட்சித் தலைவர்சோனியாகாந்தி ஆகியோரையும் இவர் சந்திக்கவுள்ளார். (உ-8)

சினத்தைப் பொருளென்று
கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழை
யாதற்று
-குறள்

## வலம்புரி

### புத்தரின் கண்ணீர்

இனப்பிரச்சினைக் குச் சமாதானத் தீர்வை எட்டுவதற்கு நோர்வேயின் அனுசரணையுடன் அரசும்-விடுதலைப்புலிகளும் முயற்சி செய்யும் வேளையில் அதனை எதிர்த்து பௌத்த பிக்குகள் கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

நாட்டில் சமாதானமும், அமைதியும், சாந்தியும் நிலவ வேண்டுமெனப் பிரார்த்திக்கவேண்டிய பௌத்த பிக்குகள் சமாதானத்தைக் குழப்பும் முயற்சியில் ஈடுபடுகின்றனரெனில் கௌதம புத்தர் நிச்சயம் கண்ணீர் வடிப்பார்.

இருபது வருட காலமாக போர்த் தீ நாட்டைக் கௌவிக் கொண்டிருக்கும் போது அதில் இருந்து நாட்டை எல்லா இன- மத-மொழி சார் மக்களையும் ஒற்றுமைப்படுத்தி, சம உரிமையுடன் வாழ்வதற்கு வழி தேடிக்கொடுக்க வேண்டிய பௌத்த பிக்குகளே போர்த்தீக்கு எண்ணெய் ஊற்றுவது போல் செயற்படுவது நாட்டிற்கும், மதத்திற்கும் அவ்வளவு நல்லதாக இல்லை.

இனப்போர் என்பது தமிழர்களை மட்டும் பலியெடுப்பதாகவேபௌத்த பிக்குகள் கருதுகின்றனர். வறுமை காரணமாக படையில் சேர்ந்து உயிரிழந்த ஏழைச் சிங்கள இளைஞர்களைப் பற்றி பிக்குகளுக்கு கவலையில்லை. தமது பௌத்த மதம் அரசியலில் செல்வாக்குச் செலுத்த வேண்டுமென்பதே அவர்களின் இலக்கு.

ஒரு நாட்டிலே என்று மதம் அரசியலில் கலக்கிறதோ அன்று முதல் அந்நாட்டில் நிம்மதி கிடையாததொன்றாகி விடும்.

இது நமது நாட்டிற்கு சாலவும் பொருந்தும். பௌத்த மதம் அரசியலில் என்று ஆதிக்கம் செலுத்த முற்பட்டதோ அன்று முதல் நாட்டில் இனக்கலவரமும், உயிரிழப்பும் அராஜகமுமே நடக்கிறது. சமயங்கள் மக்களை நல்வழிப்படுத்தும் பணியில் ஈடுபட வேண்டும். அவ்வாறு நல்வழிப்படுத்தும்போது அரசியல்வாதிகளும் திருந்துவதற்கு ஏதுவாகும். இஃது பௌத்த மதத்திற்கு மட்டுமல்ல இந்து, கிறிஸ்தவ மதங்களுக்கும் பொருந்தும். எந்த மதங்களானாலும் அவை தமது கடமையை-சமயம் கூறும் நற் போதனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

# மக்களாட்சி முறைதான் வாழ்வுக்கு உகந்தது

# அரசுக்கு அழகுதர மக்களின் ஒழுக்கம் அவசியம்

பால் தரும் வரையில் பசு தொழுவத்தில் வைத்துப் போஷிக்கப்படுகிறது. பால் தருவது தீர்ந்ததும் போஸ்டரைத் தின்று பிழைக்கத் தெருவுக்குத் துரத்தப்படுகிறது. அதுபோலத்தான் முதலாளித்துவமுறை. இலாபம் கிடைக்கும் வரையில் தொழிலாளருக்கு வேலை தரும். இலாபம் இல்லையேல் வேலையும் இல்லை என்று கூறிவிடும். சிங்காதனம் என்பது ஒருபாம்புப் புற்று. அதன் மீது அமர்வோரை, எந்த நேரத்திலும் புற்றிலிருந்து கிளம்பும் பாம்பு தன் விஷப் பற்களால் கடித்துக் கொல்லும்.

பேசாமல் இருப்பது வேண்டுமானால் சிரமம். சிந்தையை அடக்கியே சும்மா இருப்பது அரிது. ஆனால் பேசுவது எளிது, பேசுவதை ஒழுங்குக்கும், முறைக்கும் கட்டுப்படுத்துவது தான் மேடைப் பேச்சு. மேடைப் பேச்சு தென்றலாக இருக்க வேண்டுமா அல்லது புயலாக அமைய வேண்டுமா என்ற கேள்வி ஒரு சறுக்கு மேடை. மேடைப் பேச்சுக்குத் தயாராவோர் மிக ஜாக்கிரதையாக ஊன்றி நடக்கவேண்டிய இடம் இது. மக்களின் மதியை மாய்க்கும் ஏடுகளல்ல நமக்குத் தேவை: தமிழரைத் தட்டி எழுப்பும் தன்மான இலக்கியங்களே தேவை. தன்னம்பிக்கை ஊட்டி மதியைப் பெருக்கும் விளக்க நூல்கள் தேவை.

விஞ்ஞானத்தின் விருந்து

இதுவரை விஞ்ஞானத்தின் விருந்தை நாம் சுவைத்தவர்களே தவிர சமைத்தவர்களில்லை. விருந்தை வெளிநாட்டார் படைத்து அழைத்தால் போய் அருந்திவிட்டுப் பிறகு குறையும் கூறியிருக்கிறோமே தவிர, நாமாக எதையும் கண்டு பிடிக்கவில்லை. கதம்பத்தில் மலர்கள் குறைவாகவும், தழை அதிகமாகவும் இருப்பின் மாதர் கொள்ளார். அது போலவே பேசும் பேச்சிலே கருத்து அங்கொன்று, இங்கொன்றுமாகி சுவைக்கு உதவாதன அதிகமிருப்பின் எவரும் கொள்ளார்.

விஞ்ஞானம் குழைத்து வைக்கப்பட்ட வண்ணச் சுண்ணம். அதனைக் கொண்டு அழகான பெண்ணின் உருவையும் தீட்டலாம்-கோரமான குரங்கின் உருவையும் எழுதலாம். குரங்கு எழுதப்பட்டால் குற்றம் கிண்ணத்தின் மீதா? அல்லது எழுதும் ஓவியம் மீதா? வாழைப்பழத்தின் தோலை வழியிலே வீசி எறிந்தால், அதன் மீது கால் வைப்பவரை வழுக்கிவிட்டுவிடும். அது போல, நாடகத்தை தவறான வழியில் பயன் படுத்தினால் அது பயங்கரமாக, மக்களைப் படுகுழியில் தள்ளிவிடும்.

ஒழுக்கம் அவசியம்

தமிழ்ப் புலவர்களே ஒரு வார்த்தை! தாராளமாக இலக்கியங்களை ஆராய்ச்சி செய்யுங்கள். ஆனால் ஆராய்ச்சியிலேயே மூழ்கிவிடாதீர்கள். அடிக்கடி வெளியே வந்து, ஆராய்ச்சியில் கண்ட முடிவுகளைக் கூறி மக்கள் வாழ்வை வளமாக்க வேண்டியது உங்கள் கடமை. பாட்டா

## அறிஞர் அண்ணா

ளியின் உடலிலே சேறு இருக்கும். பாடுபடாதவன் உடலிலே சந்தனம் இருக்கும். மலருக்கோ தோட்ட வளம் தேவை, மாலைக்கு மலர் தேவை, அரசுக்கு அழகுதர மக்களின் ஒழுக்கம் தேவை. மக்கள் ஒழுக்கமுள்ளவர்களாக வாழ சமதர்ம முறையில் அமைந்த வாழ்க்கைப்பாதை தேவை.

தோழமை சமபலமுள்ள இருவருக்குத் தான் இருக்க வேண்டும். சுரண்டும் பாகம், சுரண்டப்படும் பாகம் இரண்டும் ஒன்றாக இருந்தால் தொல்லையும், துயரமும், துவேஷமும் வளருமேயொழிய தோழமை எங்கிருந்து முளைக்கும்? அமெரிக்காவிலே ஹறிசன்-முதலியார் எனக் காண முடியுமா? லண்டனிலே கிரிப்ஸ் செட்டியார் உண்டா? விஞ்ஞானத்தோடு போட்டியிட்டு நாள்தோறும் பலவித அற்புதங்களைக் கண்டு பிடித்து வரும் மேல்நாட்டவர்க்கு சாதிவித்தியாசமும், சாதிப்பட்டங்களும் அவசியமானதென்று தெரிந்தால் அவர்கள் நம்மைவிட அதிக சாதிகளை உண்டாக்கி இருக்க மாட்டார்களா?

அறிவுத்தெளிவு தரும்நூல்கள்

பொதுவாகவே மக்களின் அறிவுக்குத் தெளிவும் ஆண்மைக்கு உரமும், ஒழுக்கத்துக்கு வலிவும், தரத்தக்க நூல்கள் இருக்க வேண்டுமேயொழிய, வாழும் இடத்தை வகையற்றது என்று கூறி, வான வீதிக்கு வழிகாட்டும் நூல்களும், மாயாவாதத்தையும், மனமருட்சியையும் தரும் ஏடுகளும், தன்னம்பிக்கையைக் கெடுத்து, விதியை அதிகமாக வலியுறுத்தி, பெண்களை இழித்தும் பழித்தும் பேசிடும் நூல்கள் இருத்தலாகாது. உலகம் உழைப்பாளிகளுக்கே உலுத்தர்களுக்கு அல்ல. வாலிபர்கள் ஆசிரியர்களாக வேண்டும். உலகத்தைக் கிராமத்தாருக் காட்டவேண்டும். வாலிபர்கள் வைத்தியர்களாக வேண்டும். உடல், உள்ளம் இரண்டிலும் உள்ள நோய் தீர்க்கும் மருந்தளிக்க வேண்டும்.

வாலிபர்கள்பழமையின்பிடியிலிருந்து மக்களைப் பக்குவமாக விடுவித்து, புதுமையின் சோபிதத்தைக்காட்டிப் புத்துலகு அமைக்க வேண்டும். புத்துலகச் சிற்பிகள் ஆக வேண்டும். இதற்கான திறமும், தீரமும் தேவை. இதற்கான ஆராய்ச்சி தேவை. இதற்கான வெளி உலகத்தொடர்பு தேவை. மதுரம் தரும் பழமாயிற்றே. நமது கோட்டத்தில் கிளைத் தாயிற்றே இதிலே நெளியது புழுவாக இருக்க முடியாது. பழத்திலே சுவை இருக்கும். புழு எப்படியிருக்கும் என்று யாராவதுவாதாடுவார்களா? பழம் அழுகுவது போல், மலர் கசங்கி மணத்தை இழந்த பிறகு கெட்டவாடை கொள்வது போல, தழை, சருகு ஆவது போல கட்டடங்கள் குப்பை மேடாவது போலப் பலப்பலதத்துவங்களும், ஏற்பாடுகளும் காலச்சிறையிலே கிடந்து கெடுவதும், பல கேடுகளை உற்பத்தி செய்வதும் இயற்கையாக ஏற்படும் ஒரு நிகழ்ச்சி இதனை உணர மறுப்பது உலகை அறியாதவர் போக்கு.

ஒற்றுமைக்குச் சுருதிஞானம்

நல்ல மாந்தோப்பு அமைய- நல்ல களம்-விளை நிலம் எப்படி முக்கியமாகிறதோ அதே மூலமாகிறதே அப்படியே தான் மனிதன் தரமும், பண்பும் படைத்தவனாக நல்ல வாழ்வு- நாகரிக வாழ்வு வாழ வேண்டுமானால், மனிதன் வாழ்ந்திடும்களம்-நிலம், சமுதாயம் சமுதாயத்தின் நிலை, சூழ்நிலை முக்கியமாகிறது மூலமும் ஆகிறது வீணைஉயர் தரமானதால், வித்வானும் தேர்ந்தவர் தான். ஆனால், ஒரு நரம்புமட்டும் ஓரிடத்தில் தளர்ந்து இருக்கிறதுஎன்றால் வீணையின் நாதமும் கெடும். வித்வானின் உழைப்பும் பாழ்படும். ஒரு நிறுவனத்தின் ஒற்றுமை சங்கீதத்துக்கு உள்ள சுருதி ஞானத்தைப் போன்றது. மிக மிகஜாக்கிரதையாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

வானத்தில் வட்ட மிடும் பறவை இரையும் இருப்பிடமும் தேடி, பல வற்றைக் கண்டு ஏதேனும் ஒன்றினைக் கொண்டு மகிழ்தல் போலச் சிந்தனைத் திறம் படைத்த மனிதன் சுகவாழ்வுக்கான சாதனங்கள் யாவை என்று தேடிய வண்ணம் இருந்து வந்திருக்கிறான். பல தவறுகளை இழைத்திருக்கிறான். வட்டமிடும் பறவையைக் கொத்த வரும் வல்லூறு போலச் சுகவாழ்வு தேடின மனிதனைக் கொடுங்கோலர் வதைத்துமிருக்கிறார்கள். பல கஷ்டங்களுக்குப் பிறகு மக்களாட்சி முறையே, சுகவாழ்வுக்குச் சரியானசாதனம் என்று முடிவு செய்கின்றான்.

வண்ணக் குழம்பு

சிற்பியிடம் கற்பாறைதரப்படுகிறது. அதன் வேலைக்கான மூலப் பொருள், இனி அவனுக்குத் தேவை. சிறிய உளியும், பெரிய உள்ளமும், சுதந்திர இந்தியாவிலே இது போலவே, வாலிபர்களுக்குப் பகுத்தறிவும், சுயமரியாதை உணர்ச்சியும் தேவை -புது வாழ்வு பெற முழு வாழ்வு பெற, வண்ணக் கலயங்களில் உள்ள சிவப்பும், பச்சையும், நீலமும், மஞ்சளும், கறுப்பும் பிறவுமான வண்ணங்களும் தூரிகை கொண்டு ஓவியம் வரைவோனின் திறமையினால் வானமாகி, வாவியாகி, மலராகி மாதாகி, கனியாகி, கிள்ளையாகி, அருவியாகி, அல்லியாகி விடுகிறது. கலயத்திலிருந்த போது வெறும்வண்ணக் குழம்பு, ஓவியமான பிறகோ புத்தம் புதிய வடிவங்கள், வண்ணக் குழம்பின்றி ஓவியமில்லை, உண்மை, எனினும ஓவியமான பிறகு, வண்ணக் குழம்பு என்னால் தான் இவை யாவும் என்று உரிமை கொண்டாடவா முடியும்?

துணிக் கடைக்குச் சென்றால் கண்ணுக்குப் பிடித்தமான எல்லாத் துகளுமா வாங்குகிறோம்? அது போலத்தான் மனித வாழ்விலும் மனம் நாடுவதோ பல, கிடைப்பது ஏதோ ஒன்று, மத்தாப்புக் கொழுத்தும் போது எவ்வளவு வண்ணம், எத்துணை ஒளி, ஆனால் எவ்வளவு சீக்கிரத்தில், தீர்ந்து போய் விடுகிறது. தான் ராசதந்திர முறை காரணமாக உபசாரம் தரும் ஒளி, சிறு அகல் விளக்கானாலும் பரவாயில்லை. மத்தாப்பூ போல் அல்ல-நின்று நிதானமாக ஒளிவிட்டு இருளை அகற்றும், அழகு ஓர் ஆபத்தான ஆயுதம், அதனால் ஆளப்படுவார்கள் ஆண்கள், ஆள்பவர்கள் பெண்கள். காலம மாறக்கக் கூடியது. மாறிக் கொண்டு தான் இருக்கும். காலத்திற் கேற்ப கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்து விடும். நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்ட பருவம், அச்சம், தயை, தாட்சண்யம் அற்ற பருவம், ஊக்கமும் உற்சாகமும நிறைந்து காரிய மாற்றும் கருத்துள்ள பருவம் மாணவப் பருவம்.

## தினசரி தியானம்

### பூஜை

உள்ளுறையில் என்னாவி நைவேத்தியம்
ப்ராணன் ஓங்குமதி தூப தீபம்
ஒருகாலமன்றிது சதாகால பூஜையாய்
ஒப்புவித்தேன் கருணைகூர்.

- தாயுமானவர்

இறையே, போற்றிப் பாராட்டுதற்குரிய பொருள் உன்னையல்லாது வேறு ஒன்றும் கண்டிலேன்.

தெய்வத்தின் பெருமையை எண்ணுமளவு மனது தெய்வப் பெற்றி பெறுகிறது. எதைப் போற்றுகிறதோ அதன் பாங்கெல்லாம் மனதுக்குச் சொந்தமாகிறது. கீழ்மையில் மகிழ்வடைகிற மனது உண்மையில் கீழ்மையைப் பூஜிக்கிறது. பின்பு அம்மனதே கீழ்மையின் சொரூபமாகி விடுகிறது. நல மனைத்தின் திரட்சி தெய்வ சொரூபம். தெய்வத்தை வணங்குதலும் நலத்தை வணங்குதலும் ஒன்றே, யாண்டும் நலத்தை நினைந்து நலத்திலே நிலைபெற்றிருப்பதே தேவ பூஜையாகிறது.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

## நிபுணர் நியமிப்பு

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவிற்கு சத்திரசிகிச்சை நிபுணராக அன்றியாகாசர் எம்.எஸ்.எவ் சர்வதேச அமைப்பினால் நியமிக்கப்பட்டுள்ளார்.


எதிர் வரும் 27ஆம் திகதி இவர் தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். எ2ூ




அன்னை தொழிலகம், இணுவில்

மில்க்வைற்


மில்க்வைற் சோப் இன்டஸ்றியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541

## காரைநகரிற்கு நாளை விசேட பஸ்சேவை

(காரைநகர்)

காரைநகர் போசுட்டி முருக மூர்த்தியாலய மகா கும்பாபிஷேகம் நாளை இடம் பெறுவதையிட்டு விசேட பஸ்சேவை ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

யாழ் பஸ் நிலையத்திலிருந்து நாளை அதிகாலை 5.30 மணி முதல் காரைநகரிற்கான பஸ் சேவை நடைபெறும்.

இதே வேளை காரைநகரிற்கான அனைத்து பஸ் சேவைகளும் வியாவில் வரை இடம் பெறும் என்றும் காரைநகரில் இருந்து மாலை 7.00 மணிவரை பஸ் சேவை இடம் பெறும் என்றும் ஆலய நிர்வாகிகள் அறிவித்துள்ளனர். (ந)

## வடக்குக் கிழக்கு...

ஒப்படைப்பதன் மூலம் அந் நிய சக்திகளின் ஊடுருவல்களைத் தடுத்து நிறுத்த முடியும்.

தற்போது வடக்குக் கிழக்கில் நிர்வாகம் இல்லாத நிலைமையே காணப் படுகின்றது. இச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி அந்நிய சக்திகள் ஊடுருவல்களை மேற் கொண்டால் அது ஆபத்தானதாகவே அமையும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.(த)

## தலைவர் பிரபாவின் அணுகு முறை...

வேலுப்பிள்ளை பிரபாகரன் காத்திரமான அரசியல் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடக் கூடியவர் என்பதை அவருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் மூலம் உணர்ந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

அவர் போரியல் நுட்பங்களில் மட்டுமல்ல பேச்சுவார்த்தைகளிலும் திடகாத்திரமான பங்களிப்பை வழங்கக் கூடியவராக உள்ளார்.

இதேவேளை ஜனாதிபதியும் பிரதமரும் இரண்டு வேறுபட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு அரசியல்த் தீர்வு காண்பதற்கு அவர்கள் காட்டி வரும் அக்கறை வரவேற்கத் தக்கதாகும்.

எனவே அனைத்துத் தரப்பினரும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு அக்கறை காட்டிவருவதால் இனப்பிரச்சினைக்கு சுமூகமான ஒரு தீர்வு கிட்டுமெனத் தான் கருதுவதாகவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (த)

## சட்ட ஆலோசனை...

களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வை பேச்சு வார்த்தைகளின் மூலம் எட்டுவதற்கு இந்தியா தொடர்ந்தும் பூரண ஆதரவு வழங்கும் என்றும் அவர் உறுதி கூறினார். இதேவேளை அரசுக்கும் புலிகளுக்கு மிடையில் யூன்மாதம் தாய்லாந்தில் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைக்கு முன்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லி சென்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய், வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுக்களில் ஈடுபடுவார் என்று பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அங்கு தெரிவித்துள்ளார். (த)



இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தினைச் சேர்ந்த வர்த்தகப் பிரமுகர்களும், யாழ்ப்பாணத்து வர்த்தகப் பிரமுகர்களும் யாழ் வணிகர் கழகத்தில் சந்தித்து கலந்துரையாடும் காட்சி.

## அரசு விடுதலைப் புலிகளிடம்...

தாங்கியவாறும் சென்றனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பிற்பகல் 4மணியளவில் கொழும்பு ஹைபார்க் வரை ஊர்வலமாகச் சென்று அங்கு கண்டனக் கூட்டத்தை நடத்தினர்.

ஜே.வி.பியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த எதிர்ப்புக் கூட்டத்தில் முன்னாள் சபாநாயகரும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சந்திரிகாவின் சகோதரருமான அனுரா பண்டாரநாயக்க உரையாற்றினார்.

அனுரா பண்டார நாயக்கா அங்கு உரையாற்றுகையில்:

ஐக்கிய தேசிய முன்னணி அரசு புலிகளிடம் நாட்டை ஒப்படைக்கத் தயாரக உள்ளது. புலிகளின் கையில் நாட்டின் அதிகாரம் கிடைத்தவுடன் ஒப்பந்தம் முறிவடைந்து பன்னிரண்டு மணிநேரத்துக்குள் நாட்டை அழிப்பதுடன் மட்டுமல்லாமல் கொழும்புக்குள் நுழைவதற்கான ஆறு பாதைகளும் அழிக்கப்பட்டு விடும்.

விடுதலைப்புலிகள் கொழும்பு நகருக்குள் ஆயுதங்களை பெருமளவு கடத்தி வந்துள்ளனர் இது பற்றி நான் ஏற்கனவே கூறியுள்ளேன் இந்த ஆயுதங்களை அனுரா பண்டாரநாயக்கா வேண்டுமானால் தேடிக் கண்டு பிடிக்கட்டும் என்று அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் புலிகளின் தலைவர் பிரபாகரன் கூறியுள்ளார். அவர் வெள்ளவத்தையில் குவித்து வைத்திருக்கும் ஆயுதங்களை கண்டு பிடிக்கக்கூடியளவு என்னிடம் படைவசதி இல்லை என்பதை பிரபாகரனுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்நிலையில் நாட்டைக்காப்பாற்றுவதற்கு அனைத்து மக்களும் ஒன்றிணைய வேண்டும் என்றும் அனுரா பண்டாரநாயக்கா அங்கு கூடியிருந்த மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இக் கூட்டத்தில் திருமதி பேரியல் அஷ்ரப், முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர, தினேஷ் குணவர்த்தனா விமல் வீரவன்ச ஆகியோரும் உரையாற்றினர்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவோ மற்றும் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களோ இக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## விபத்தில் காயம்

நேற்றுக் காலை 6.30 மணியளவில் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு அண்மையில் இடம்பெற்ற விபத்துச் சம்பவமொன்றில் மூன்று வயதுக் குழந்தை ஒன்றும், பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மாணவன் ஒருவரும் காயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது பின்னால் வந்த வ.பி.போ.சபை பஸ் மோதியதாலேயே இவ் விபத்து இடம் பெற்றது. இச்சம்பவத்தில் மனோகரன் ஜனகன், சுபவாசினி (வயது 3) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். இவர்கள் உடனடியாக மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ந-5)

## கொக்குவில் வைரவர்...

யினுள் அலரி விதைகள் காணப்படுவதுடன் அதன் அருகில் நான்கு சில்லு வாகனம் ஒன்று வந்து சென்றதற்கான அடையாளமும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-19,6,124)


மீண்டும்..
எமது மண்ணில் புதுப்பொலிவுடன்
லாலா நீல சோப்
கூடிய கெதியில் மாணவர்களுக்காகிய லாபகரமான திட்டத்தை எதிர்பாருங்கள்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி
[C/4003]

கணனி மூலம்
CD RECORDING
140/= BLANK CD இலவசம்
150 பாடல்கள் அடங்கிய
MP-3 CD-190/=
அபிநயா மல்ரி எலெக்ரோனிக்ஸ்
யாழ் வீதி சந்தையடி மானிப்பாய்
[C/4002]

ராஜா
(யாழ்ப்பாணம்)
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
TAMILAN
தினசரி 10.30, 2.30, 5.30
[C/3953]

எமது புதிய வீடியோ ஓடியோ CD வெளியீடு
VCD - உன்னிக்கிருஷ்னன், பாலமுரளிகிருஸ்ணா, சௌமியா, மற்றும் பல கர்நாடக விற்பன்னர்களின் கச்சேரிகள்: ஓடியோ CD
1) அபிராமி அந்தாதி.
2) சமஷ்கிருத வேத, சோஸ்த்திரம்.
3) நித்தியஸ்ரீயின் கர்நாடகக் கச்சேரிகள்.
4) நித்தியஸ்ரீயின் பக்திப் பாடல்கள்.
5) பழைய, புதிய, சினிமாப்பாடல்கள் வாத்திய இசையில்
(புல்லாங்குழல், வீணை, வயலின், கிற்றார், சக்ஸ்சஸ், போன்ற)
குறிப்பு:- மலிவு விலையில் பழைய, புதிய வீடியோ, ஓடியோ CDக்கள், M.P-3 CDக்கள் அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
ITN வீடியோ ஓடியோ மியூசிக் சென்ரர்
305 பலாலி வீதி [C/4004] பரமேஸ்வராச்சந்தி

உ
வில்லூன்றி புனித தீர்த்தம்
சித்திரா பூரணைப் பெருவிழா
26.04.2002 வெள்ளிக்கிழமை
★ தீர்த்தோற்சவம்
காலை 6.45மணி வசந்த மண்டபப் பூசை
காலை 8.00மணி தீர்த்த வாரி
காலை 9.30மணி வரை தீர்த்தக்கட்டடத்தில் அனுக்கிரகம்
காலை 9.30மணி சுவாமி கோயிலுக்கு எழுந்தருவல்
★ பிதிர்க்கடன்கள்
காலை 8.15மணிக்கு தீர்த்தவாரி முடிந்தவுடன் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
வில்லூன்றி. தர்மபரிபாலனசபை, வில்லூன்றி தேவஸ்தானம் பரிபாலனசபை, வில்லூன்றி புனித தீர்த்தம்
[5017]

அன்பு என்னும் நல் உணர்வினையே
குழந்தை அடைவதும் தாய்ப்பாலால்
அன்னை தருகின்ற தாய்ப்பாலால்
குழந்தை அடைவதோ ஆனந்தம்
[C/4004]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.04.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர் **Sankunathan** பக்கங்கள் - 16

# சங்கு நாதம்

சங்கு:- 03 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி:- 27 புதன்கிழமை (24.04.2002) தொலை பேசி 3378 நாதம்:- 08

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# அரசு – புலிகள் சமாதானப் பேச்சு ஜனாதிபதி மௌனம் காப்பது ஏன்?



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் வாரமலர்

# தென்பகுதி வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்திற்குப் படையெடுப்பு

# அரசு - புலிகள் சமாதானப் பேச்சு ஜனாதிபதி மௌனம் காப்பது ஏன்?

போரினால் பாதிக்கப்பட்டு பொலிவிழந்து போன யாழ்ப்பாணம் இப்




போது தென்னிலங்கை உல்லாசப் பயணிகளின் காட்சியகமாக மாறியுள்



ளது. வழமையாக, இயற்கையின் வனப்பு எழிலாடும் இடங்களையே மக்கள் பார்வையிடுவது வழக்கம். ஆனால், எழிலாக இருந்து நொந்து போய் முதுமைப்பட்டுக் காட்சி தரும் யாழ்ப்பாணத்தைப் பார்வையிடுவதற்கும், நொந்து கெட்டுப்போயுள்ள யாழ்ப்பாணத்தில் முதலிட்டு வளம் பெருக்கவும் முண்டியடிப்போர் ஏராளம்

இதற்குக் காரணம் யுத்தம் சூழ்ந்தும் யாழ்ப்பாணம் வளம் குன்றாத் திருநாடாகவே தென்னிலங்கையரால் கருதப்பட்டு வருகிறது.

இருபது வருடகால யுத்தத்திற்கு முகங்கொடுக்கும் யாழ்ப்பாணத்திற்கு புனரமைப்பாளர்களும், நிவாரணப்பணியாளர்களும் வந்திறங்கவில்லை. மாறாக வர்த்தகப் பிரமுகர்களும் நிதி முதலீட்டாளர்களுமே வந்து செல்கின்றனர். இவர்களின் வருகைக்கு செங்கம்பளம் விரிக்க வணிகர் கழ



கங்களும் வர்த்தக சங்கங்களும் முனைப்புடன் போட்டி போடுகின்றன. சில ஊடகங்களும் வர்த்தகப் பிரமுகர்களுக்கு தங்குமிடம் கொடுத்து உணவு ஊட்டி விடுமளவுக்கு மிகவும் சுறுசுறுப்பாகச் செயற்படுகின்றனர். இதிலிருந்து யாழ்ப்பாணத்து மக்கள் ஓர் முடிவுக்கு வரமுடியும். அதாவது யாழ்ப்பாணத்தில் எத்தனை கல்வியாளர்கள் இருப்பினும் யாழ்ப்பாணத்தின் எதிர்காலத்தை- திட்டமிடலை- வர்த்தகர்களே தீர்மானிக்கின்றனர். கல்வியாளர்கள் வாழ்கின்ற இப் பிரதேசத்தில் அதன் அபிவிருத்தித் திட்டமிடலை வர்த்தகர்கள் தீர்மானிப்பதனால் முதலாளித்துவ வர்க்கம் காணி, வீடு வாங்கும் வர்க்கமாகவும், தனியார் தொழிலாளர் வர்க்கம் காணி, வீட்டை விற்கும் வர்க்கமாகவும், அரச தொழிலாளர் வர்க்கம் எடுக்கின்ற சம்பளத்தை சமாளித்து உண்பதும் உறங்குவதுமாக காலத்தை நகர்த்துகின்றனர்.

### மக்கள் நிலை வேறு

யாழ்ப்பாணத்து அமைப்பு பாண்டவர்களுக்கு கௌரவர்கள் கட்டிக் கொடுத்த அரக்கு மாளிகை போன்றது. பிரதான வீதிகளில் நின்று பார்த்தால் தெரிகின்ற வசதிகளும் வாய்ப்புகளும் உள்ளிறங்கிப் பார்க்கும் போது தெரிவதில்லை. இதற்குக் காரணம் வளம் குறைந்த பிரதேசத்தை அபிவிருத்தி செய்யாமல் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களுக்கு வசதியானவர்கள் நகர்ந்து செல்வதே காரணமாகும். இந்நிலையில் பின் தங்கிய மக்கள் மேலும் மேலும் பின் தங்கிச் செல்கின்றனர். குடியிருந்த வீட்டிற்கு கூரைபோட முடியாமல் மக்கள் திண்டாடுவது ஒருபுறம். எந்தப் பொருளை யாழ்ப்பாணத்தில் விற்றால் அதிக இலாபம் கிடைக்குமெனச் சிந்திப்போர் மறுபுறம் இதுவே யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலை.

### யுத்தத்தின் ஓய்வு நிலை

யாழ்ப்பாண வர்த்தகர்களைப் பொறுத்தவரையில். யுத்த சூழ் நிலையிலேயே அவர்களின் இலாபம் உச்சநிலையைக் காட்டியது. எனினும் அவர்கள் பெரும் ஆபத்தை எதிர்கொண்டே தமது பணியை மேற்கொண்டனர். இதனால் பெருமளவு முதலீட்டை அவர்கள் மேற்கொள்வதற்கு முன்வரவில்லை. ஏதோ குறிப்பிட்ட எல்லைக்குள் நின்று, குறைந்த முதலுடன் கூடிய இலாபத்தைப் பெற்றுக் கொள்வதே அவர்களின் இலக்காக இருந்தது. ஆனால் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் சுமுகநிலையை ஏற்படுத்தியதன் விளைவாக, தென்னிலங்கை வர்த்தக நிறுவனங்கள் போட்டா போட்டி போட்டுக் கொண்டு யாழ்ப்பாணம் வருவதால் யாழ்ப்பாண வர்த்தகர்களும் தம்மை உஷார்ப்படுத்தத் தொடங்கிவிட்டனர். இதனால் வர்த்தகர்கள் மத்தியில் கலகலப்பும் சுறுசுறுப்புமாகவேயுள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம், ஓர் நிரந்தர சமாதானத்தின் முடிவல்ல. அது சமாதானப் பேச்சுவார்த்தைக்கான ஓர் அடித்தளம் எனினும் அந்த அடித்தளம் பல சிக்கல்களையும் இடைஞ்சல்களையும் நீக்கி இருப்பதால் மக்கள் அதனை நிரந்தரத் தீர்வாகவும், யுத்தம் இனிமேல் நடக்கவேமாட்டாது எனவும் முடிவு கட்டி விட்டனர். இம் முடிவை எடுத்தவர்களில் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் உள்ளடங்கமாட்டார்கள். ஏனெனில் காலாகாலமாக சிங்கள அரசுகள் சமாதானம் என்று கூறிப் பேச்சு நடத்திய போதிலும் எந்தத் தீர்வையும்- உரிமையையும் தமிழ் மக்களுக்கு வழங்குவதற்கு முன்வரவில்லை, ஏதோவொருவகையில் பேச்சுக்களை முறியடித்ததாகவே வரலாறுண்டு. இதனால் நடந்தால் மட்டுமே உண்மை, மற்றும்படி சிங்கள அரசுகளை நாம் நம்பத்தயாரில்லை என்பது வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் மக்களின் நிலைப்பாடு

### அதிகாரம் யாரிடம்

அரசு- புலிகள் பேச்சில் இடைக்கால நிர்வாகம் என்பது முன்வைக்கப்படப்போகும், முக்கிய விடயங்களில் ஒன்றாகும். வடக்குக் கிழக்கு மாகாண சபையின் இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கும் போது அதற்குரித்தான அதிகாரங்களும் வழங்கப்படவேண்டும். இதற்கு அரசு எந்தளவு தயார் என்பது கேள்விக்குரியது. அதற்கு முன்னதாக வடக்குக் கிழக்கு மாகாண சபையின் இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பதாயின் பரந்து விரிந்து கிடக்கின்ற இராணுவம் மூலையில் முடங்குவது அவசியம், இடைக்கால நிர்வாகத்தோடு இராணுவம் முகாம்களுக்குள் முடங்குவதுதான் முடிவெனில் தீவகத்தின் அல்லைப்பிட்டியிலும், வடமராட்சியின் வல்லையிலும் பொதுமக்களை சோதனையிடுவது தேவையற்றதொரு விடயமாகும். நிலைமை சீரடையும் வரை இராணுவம் தனது பணியைத் தொடரவே செய்யும் என்ற வாதம் ஒரு புறத்தில் நியாயமாகத் தெரிந்தாலும், விடுதலைப் புலிகளை யாழ்ப்பாணத்தில் நடமாட அனுமதித்துவிட்டு, அவர்கள் அரசியல்துறை அலுவலகம் அமைத்து செயற்படும் போது வல்லை வெளியிலும் தீவகத்திலும் உள்ள படையினர் பொது மக்களின் அடையாள அட்டைகளைப் பார்த்து யாரைத் தேடுகின்றனர். சிலவேளைகளில் பழக்கதோஷம் அவ்வாறு செய்கிறதோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

### சோதனை என்பது தனிப்பட்ட முடிவு

விடுதலைப் புலிகளை யாழ்ப்பாணத்தில்- இராணுக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடமாடுவதற்கு அனுமதித்த பின்னர் பொது மக்களின் அடையாள அட்டைகளை பரிசோதிப்பது பொருத்தமற்றது. இராணுவ சோதனைச் சாவடிகளில் அடையாள அட்டைகளைப் பரிசோதிக்கப்படுகிறதெனில் அதற்கு அந்தப் பகுதிப் பொறுப்பதிகாரியின் தனிப்பட்ட முடிவே காரணமாகும். பொதுமக்கள் விடுதலைப் புலிகளோடு அன்னியோன்யமாகப் பழகிவருவதைப் பொறுக்க முடியாத படையினர் சோதனை நடவடிக்கைகளை முடுக்கிவிடுவதன் மூலம் விடுதலைப் புலிகளோடு மக்கள் கொண்டுள்ள நெருக்கத்தைக் குறைக்க முடியும் எனக் கருதுகின்றனர் இதன் வெளிப்பாடே புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னர் இடம்பெறும் சோதனை நடவடிக்கையாகும்.

### ஜனாதிபதியின் மௌன நிலை

நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தற்போதைய சமாதான சூழ்நிலையில் மௌனத்தையே கடைப்பிடித்து வருகின்றார். இது அவரின் அரசியல் சாணக்கியம் என்றே கருத வேண்டும். பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்த போது ஜனாதிபதி சந்திரிகாவிடம் இல்லாத அரசியல் சாணக்கியம் இப்போது



வேலை செய்யத் தொடங்கியுள்ளது. அரசும், புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி நிரந்தர யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வரும்போது, சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயாராகும் நிலையில் தேவையில்லாமல் வாயைத் திறப்பது ஒரு வருட காலத்திற்கு நல்லதல்ல என்பது ஜனாதிபதியின் முடிவு. சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதியாக சந்திரிகா இருக்கின்ற போதிலும் பாராளுமன்ற ஆட்சி இன்னொரு கட்சியிடம் இருக்கும் போது, சக்தியில்லாத சிவன் போல ஜனாதிபதியின் வல்லமை வலுவிழந்து போகிறது. ஆயினும் இந்நிலைமை பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடந்து புதிய அரசு பதவியேற்று ஒரு வருட காலம் வரையுமே நீடிக்கும் அதன் பின்னர் ஏதோவொரு சாட்டுக் கூறி பாராளுமன்றத்தைக் கலைத்து விடும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடைத்துவிடும் அதுவரையே ஜனாதிபதி மௌனமாக இருக்கிறார்.

### புயலுக்கு முந்திய அமைதியா?

இனப்பிரச்சினையைத் தீர்ப்போம் என்று வாக்குறுதியளித்தே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியைக் கைப்பற்றியிருந்தது



எனினும், 1995 இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முற்பட்ட ஜனாதிபதியின் போக்கு விடுதலைப் புலிகள் மத்தியில் கடும் ஆத்திரத்தை உண்டு பண்ணியிருந்தது. இதன் காரணமாக, ஜனாதிபதியின் சமாதான முயற்சிகள் வெற்றியளிக்க முடியாது போயிற்று.

இச் சந்தர்ப்பத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தகுந்த முறையில் பயன்படுத்திக் கொண்டார். இஃது ஜனாதிபதிக்கு பெரும் ஆத்திரம் ஊட்டும் செயலாக அமைந்துவிட்டது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக பாராளுமன்றத்தில் கொண்டு வந்த உத்தேச அரசியல் யாப்பு தமிழர்களுக்கு அதிக உரிமையை வழங்குவதாகக் கூறி அதன் நகலைப் பாராளுமன்றத்திலேயே வைத்து தீயிட்டுக் கொளுத்திய ஐக்கிய தேசியக் கட்சி இப்போது விடுதலைப் புலிகளோடு இணைந்து கொண்டு செயற்படுகிறது. இதற்குத் தகுந்த பாடம் தகுந்த நேரத்தில் புகட்ட வேண்டும் என்பது ஜனாதிபதியின் நிலைப்பாடு, ஆயினும் அவசரப்பட்டு அறிக்கைகளைக் கொட்டிக் குழறி விட்டால் அது சர்வதேச ரீதியில் தனது செல்வாக்கை, மதிப்பைக் குறைத்து விடும் என்ற உண்மையையும் ஜனாதிபதி நன்கு உணர்ந்து வைத்துள்ளார்.

### ஜனாதிபதியின் அதீத நம்பிக்கை

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்று வரும் சமாதான முயற்சிகளின் போது ஜனாதிபதி அமைதியாக இருப்பதற்குக் காரணம் சமாதானப் பேச்சுக்கள் நிச்சயம் தோல்வியடையும் என்ற நம்பிக்கையேயாகும். சமாதான முயற்சிகள் நடைபெறும் போது அது பற்றி விமர்சிக்காமல் அமைதியாக இருந்து விட்டு சமாதான முயற்சிகள் குழம்பும் போது அதனைச் சாட்டாகக் கொண்டு ஜனாதிபதி சந்திரிகா ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு குறித்து முக்கிய முடிவுகளை விஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம எடுக்க முடியும். அந்த

**விதுரன்**

முடிவை ஐ.தே. முன்னணியின் ஒரு வருட ஆட்சி முடிவில் எதிர் பார்க்க முடியும்.

### ஜனாதிபதி இந்தியா பயணம்

அரசுக்கும் புலிகளுக்கும் இடையே தாய்லாந்தில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுவதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அவசர அவசரமாக இந்தியாவுக்குப் பயணமாகியுள்ளார். இந்திய அரசைப் பொறுத்தவரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை விட ஜனாதிபதி சந்திரிகா மீது கூடிய நம்பிக்கை கொண்டுள்ளது.

அரசும் புலிகளும் இந்தியாவில் சமாதானப் பேச்சை நடத்துவதற்கு அனுமதி மறுத்த இந்திய மத்திய மாநில அரசுகள் ஜனாதிபதி சந்திரிகாவின் இந்திய வருகையை வரவேற்றுள்ளன. இது விடுதலைப் புலிகள் மீது இந்தியா கொண்டுள்ள காழ்ப்புணர்வை ஜனாதிபதி சந்திரிகாவைக் கொண்டு தீர்ப்பதாகக் கூட இருக்கலாம். இதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைது செய்ய வேண்டும் எனக் கூறும் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவையும் ஜனாதிபதி சந்திக்க இருப்பது சான்றாக அமைகிறது.

# மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

இருபதாம் நூற்றாண்டு எத்தனையோ கவிஞர்களைத் தந்த நூற்றாண்டாகும். அந்த நூற்றாண்டின் முற்பகுதியில் பல கவிஞர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களை கடவுளைப் பாடியவர்கள், மன்னர்களின் புகழ் பாடியவர்கள், மக்களைப் பற்றிய யதார்த்த உண்மைகளைப் பாடியவர்கள் என மூன்று வகையாக நோக்கலாம். மனிதனைப் பாடிய கவிஞர்கள் தான் நிலைத்து நிற்க முடிகிறது. அவர்களது பாடலகளே காலத்தால் அழிக்க முடியாத ஜீவவரிகளாகச் சிந்தனையிலே பதிந்துவிடுகிறது.

அந்த வகையில் பாட்டின் திறத்தாலே வையத்தைப் பாடப் பிறந்தவர்பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். மக்கள் கவிஞர். ஏழை, எளிய மக்களுக்காகவே பாடினார். தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டைவட்டம், செங்கப்படுத்தான்காடு எனும் கிராமத்தில் 13.04.1930 ஆம் ஆண்டில் பிறந்தார். கிராமம் என்றதும் ஆச்சரியத்தோடு பார்க்கிறவர்கள் உண்டு. பேச்சு வழக்கில் ``காட்டுப்பயல் உனுக்கென்ன தெரியும்'' என்பார்கள். கிராமம் இந்தியாவின் இதயமென காந்தியடிகள் கூறியதை அறிவோம். அனுபவம் மட்டுமே சாதாரண கிராமத்துப் படிப்பாகும். அத்தகைய அனுபவப் பள்ளியில் மக்கள் கவியாய் திகழ்ந்தவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

“மக்கள் கவிஞனுக்கு புத்தக அறிவு புட்டிப்பால் அனுபவ அறிவோ தாய்ப்பால்” என பொதுவுடைமைக் கட்சியின் மூத்த தலைவரான ப.ஜீவானந்தம் அவர்கள் குறிப்பிடுகிறார். பட்டுக்கோட்டை அவர்கள் தனது 29 ஆண்டு வாழ்வில் பல துறைகளுக்கும் சென்று வந்தவர். அதனால் பல்வேறுபட்ட மனிதர்களை எல்லாம் சந்தித்திருப்பார். அத்தோடு சிந்தித்துமிருப்பார். அனுபவக் கல்வி போன்று ஒரு தூய்மையான அகக்கல்வியைத் தரக்கூடியது வேறு ஒன்றுமில்லை எனலாம்.

அவ்வாறான சிந்தனையையும் அனுபவத்தினையும் எடுத்தியம்புகின்ற கவிஞரின் பாடல்கள் சிலவற்றை நோக்கலாம்.

“தேடிவந்த செல்வம்” என்ற சினிமா படத்திற்குப் பாட்டு எழுதுவதற்காக கவிஞரிடம் பல முறை இலட்சிய நடிகர் எஸ். எஸ்.ராஜேந்திரன் சென்று வந்தாராம். கட்சி வேலைகள் அதிகம். பட்டுக்கோட்டையாரைப் பிடிப்பதே கடினமாக இருந்ததாம். இருந்தாலும் ஒரு நாள் கவிஞரை சந்தித்தார் எஸ்.எஸ்.ஆர் அவர்கள்.“அண்ணே இன்றைக்கு உங்களை விடமாட்டேன்; பக்கத்திலே இருப்பேன்; நீங்கள் பாட்டை எழுதித் தந்திடணும்” என்றபோது கவிஞர் சிரித்துக்கொண்டே ஒரு கடதாசியை எடுத்து பாட்டை எழுதத் தொடங்கினார்.

*‘‘பக்கத்திலே இருப்பே நான்*
*பாத்துப் பாத்து ரசிப்பேன்*
*வெக்கத்திலே முழிப்பே - நான்*
*விஷயம் தெரிஞ்சு சிரிப்பேன்’’*

இலட்சிய நடிகர் எஸ். எஸ்.ஆர். அவர்களுக்குத் தூக்கி வாரிப்போட்டதாக அவர் தெரிவித்தார்.

அவரது பாடலிலே இரண்டு கூறுகளைக் காண்கிறோம். ஒன்று நாடோடிப் பரம்பரை (folk Tradition) அதாவது வழிவழி மரபு. மற்றொன்று நவீன முறையில் வெளியிடுதல் (Mordern Expression) ஆனால் இன்று வழி மரபையும், நவீன உணர்வையும் இணைத்து பாட்டுத் திறம் காட்டுவது மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

சாமானிய மனிதர்களின் விருப்பு, வெறுப்புக்களை அவர்களது உணர்ச்சிகளை, உயிர்த் துடிப்புகளை, சிக்கல் நிறைந்த நிகழ்கால வாழ்க்கைத் தோற்றத்தை புரியும் விதத்தில் எழுதக்கூடிய ஆற்றல் பட்டுக்கோட்டையாரிடம் காணப்பட்டது. அவரது கவிதைகளில் கிராமிய மண் வாசனை வீசத்தான் செய்தது.

சமுதாயத்தின் கட்டமைப்புக்குள் உந்து சக்தியாக அரசியல், மொழி, சமயம் இருக்குமென நினைத்த மானிட சமூகம் இன்று வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலைமைக்குப் போய்விட்டது. வெவ்வேறு திசைகளில் இருந்து அருவிகள் கீழ் நோக்கி வந்தாலும் கடலுடனேயே கலக்கின்றன. ஆனால் மனிதனோ சமுதாயம் என்ற கடலோடு கலப்பதில்லை. உயர்வு தாழ்வு வளர்கிறான். அதனைக் கவிஞர்

*“உச்சி மலையிலே ஊறும்*
*அருவிகள் ஒரே வழியிலே*
*கலக்குது*
*ஒற்றுமையில்லா மனிதகுலம்*
*உயர்வும் தாழ்வும்*
*வளர்க்குது”*

என்று பாடுகிறார். கவிஞர் அவர்கள் பொதுப்பணி உலகத்தில் வேண்டிய எல்லாம் ஒருங்கமையாத, அமைத்துக் கொள்ள முடியாத, பொருந்தாச் சூழ்நிலையை பின்வரும் பாடல் கொண்டு விளக்குகிறார். சிலரிடத்தில் ஆற்றல் இருக்கிறது, ஆனால் உண்மையில்லை. சிலரிடத்தில் உண்மை இருக்கிறது, ஆனால் ஆற்றல் இல்லை. இவ்விரண்டும் இருந்தால் சமுதாயம் அவனை ஏற்றுக் கொள்வதில்லை. இந்தப் பொருந்தாத வேறுபாடுகளை கவிஞர் தன் ஜீவ வரிகளால் நமக்கு நினைவுபடுத்துகிறார்.

**இலக்கிய நயம்**

*“எல்லோரும்*
*நம்பும்படிசொல்லும்*
*திறனிருந்தால்*
*சொல்லிலே உண்மையில்லை*
*உள்ளதை உள்ளபடி சொல்லும்*
*மனிதனிடம்*
*உணர்த்திடும் திறமையில்லை*
*உண்மையும் நம்பவைக்கும்திற*
*னும் அமைந்தவனை*
*உலகமேற்பதில்லை”*

என்று பொருந்தாத வேறுபாடுகளை நாசூக்காக காட்டுகிறார்.

பட்டுகோட்டையின் பாடல்களில் மண்வாசனை, கிராமிய மக்களது வாழ்க்கைப் போக்கு, அவர்களது துன்பம் என்பன உணர்வு பூர்வமாகவும் தெளிவாகவும் எடுத்துரைக்கப்படுகிறது.. ஆதாரமாக கீழ்வரும் பாடல் வரிகளைக் குறிப்பிடலாம்.

மனைவி ஒருத்தி கேட்கிறாள்

*“வாழை நிலைக்குது சோலை*
*தழைக்குது*
*ஏழைகளுக்கதில் என்ன*
*கிடைக்குது?*
*கூழைக் குடிக்குது; நாளைக்*
*கழிக்குது*
*ஓலைக்குடிசையிலே ஒட்டிக்*
*கிடக்குது*
*காடுவெளைஞ் சென்ன*
*மச்சான் - உழைப்போர்க்கு*
*கையுங்காலுந்தானே மிச்சம்?*
*மாடா உழைச்சவன்*
*வீட்டினிலே - பசி*
*வந்திடக்காரணம் என்ன*
*மச்சான்?”*

மச்சான் பாடுகிறான்

*“அவன் தேடிய செல்வங்கள்*
*சீமான் வீட்டினிலே*
*சேர்ந்ததினால் வந்த*
*தொல்லையடி”*

திரும்பக் கேட்கிறாள்

*“நல்லவர் ஒன்றாய்*
*இணைந்துவிட்டால் - மீதம்*
*உள்ளவரின் நிலை என்ன*
*மச்சான்”*

மச்சான் கூறுகிறான்

*“நாளை வருவதை எண்ணி*
*எண்ணி- அவர்*
*நாழிக்கு நாழி தெளிவாரடி”*

வாழ்க்கையில் நொந்துபோன தொழிலாளத் தோழர்களுக்கு உறுதியான நம்பிக்கையை தன் பாடலால் பதிய வைத்த கவிஞர். தனது பாடல்களால் தமிழகத்தில் ஒரு நடிகன் நாடாளும் வாய்ப்பைப் பெற்ற பெருமைக்குரியவரானார்.புரட்சித் தலைவன் எம்.ஜி. ஆர் உச்சக்கட்டத்திற்குப் போவதற்கும்,மக்கள் அவர்மேல் அதிக பற்றினை வைப்பதற்கும் கவிஞர் பாடல்கள் முக்கிய காரணமாக அமைந்தன.

கடவுளின் பெயரால் நடக்கும் அநீதிகளை கடவுள் பொறுத்துக் கொள்ளமாட்டான் என்ற முறையில் ஆதிக்கம் கொண்டோருக்கு கவிதை வடித்தார்.

*“காசு தந்தால் உன்னை*
*காணும் வழிகாட்டு வதாய்*
*கதவு போட்டுப் பூட்டி*
*வைத்துக்*
*கட்டாயம் பண்ணுவதைப்*
*பார்த்தாயா?”*

தூய பக்தியற்ற கடவுளறிவும், சிந்தனையும் பிரயோசனமற்றதென்று கூறினார். “பக்த ஜனங்கள் கவனமெல்லாம் தினமும் கிடைக்கும் சுண்டலிலே, பசியும் சுண்டல் ருசியும் போனால் பக்தியில்லை, பஜனையில்லை”

கடவுள் பற்றிக் கதைத்துக் கதைத்து மக்களுக்குச் செய்ய வேண்டியதில் கவனமெடுக்காமலிருப்பது தவறு என்றார். சிறார்களை வழிநடத்துவது மதம் என்பது சிலரது கருத்து. இன்று உலக நாடுகளில் எங்கு பார்த்தாலும் மதக்கலவரங்கள் நடந்து கொண்டே இருக்கிறது. மத போதனைகள் வழிகாட்டுமென்றால் மனிதன் ஏன் போர்க்கோலம் கொள்ளவேண்டும்.

நல்ல சமூகம் உருவாக சிறுவர்களை நன்கு வளர்க்க வேண்டும் என்பதிலே கவிஞர் மிகவும் உறுதியாக இருந்தார்.

*“இந்த மாநிலத்தைப் பாராய்*
*மகனே - உந்தன்*
*வாழ்க்கைதனை உணர்வாய்*
*மகனே - இளம்*
*மனதின் வலிமைதனை*
*ஏற்றடா - முக*
*வாட்டமதை உழைப்பால்*
*மாற்றடா”*

என்ற பாடலூடாக தன்மான உணர்ச்சி கொண்டபிள்ளைகளை உருவாக்க வேண்டும் என்கிறார். தன்மான உணர்ச்சிபற்றி எம்மால் சொல்ல முடியுமா?

சிறாருக்குக் கூறுகிறார் கவிஞர்,

*“ஆளும் வளரணும் அறிவும்*
*வளரணும்*
*அதுதாண்டா வளர்ச்சி*
*ஆசையோடு ஈன்றவர்க்கு*
*அதுவே - நீ*
*தரும் மகிழ்ச்சி*
*நாளும் ஒவ்வொரு பாடம்*
*கூறும்*
*காலந் தரும் பயிற்சி - உன்*
*நரம்போடுதான் பின்னி*
*வளரணும்*
*தன்மான உணர்ச்சி”*

சிறுவன் படிக்கத் தெரியும் போதே அவன் பெரியவர்களின் இடத்திற்கு வந்துவிடுகிறான். அதனால்தான் கவிஞர் வருங்கால சந்ததியில் நம்பிக்கை வைத்துள்ளார்.

*“வேப்பமர உச்சியில் நின்னு*
*பேயொன்று ஆடுதின்னு*
*விளையாடப் போகும்போது*
*சொல்லி வைப்பாங்க - உன்*
*வீரத்தை கொழுந்திலேயே*
*கிள்ளிவைப்பாங்க*
*வேலையற்ற வீணர்களின்*
*மூளையற்ற வார்த்தைகளை*
*வேடிக்கையாகக் கூட*
*நம்பிவிடாதே - நீ*
*வீட்டுக்குள்ளே பயந்துகிடந்து*
*வெம்பிவிடாதே - நீ*
*வெம்பிவிடாதே”*

சிறுவரிற்கு வீரங்கூறுவதோடு மட்டும் நின்றுவிடாத கவிஞர் நற்பழக்கத்தையும் சுவாரசியமாகக் கூறிவிடுகிறார். அதாவது வறுமையில் வாடினாலும் திருடக்கூடாது என்கிறார்.

*“திருடாதே பாப்பா திருடாதே*
*வறுமை நிலைக்குப்*
*பயந்துவிடாதே*
*திறமை இருக்கு*
*மறந்துவிடாதே!”*

வேறொருபாடலிற் கூறுகிறார்

*“கொடுக்கிற காலம்*
*நெருங்குவதால் - இனி*
*எடுக்கிற அவசியம் இருக்காது*
*இருக்கிறதெல்லாம்*
*பொதுவாய்ப் போனால்*
*பதுக்கிற வேலையும்*
*இருக்காது*
*ஒதுக்கிற வேலையும்*
*இருக்காது*
*உழைக்கிற நோக்கம்*
*உறுதியாயிட்டா*
*கெடுக்கிற நோக்கம் வளராது*
*- மனம்*
*கீழும் மேலும் புரளாது”*

அவர் சொன்னதில் ஏதாவது நம்பிக்கை தெரிகிறதா?

படித்த பிள்ளைக்கு சொல்லும் ஜீவ வரிகள் இவை

*“ஏட்டில் படித்ததோடு*
*இருந்துவிடாதே! - நீ*
*ஏன் படித்தோமென்பதையும்*
*மறந்துவிடாதே”*

மிக விசாலமான பார்வையோடு அவரது கவிதைகள் விதைக்கப்பட்டன. மக்கள் கவிஞன் பாடினான், பாடியபடி வாழ்ந்தான். பேசினார், பேசியபடி வாழ்ந்து காட்டினார். சீன - இந்திய யுத்தத்தின்போது இந்திய நாட்டின் பிரசாரப் பீரங்கியாக மாறி கிராமம் கிராமமாய் சென்று பகல் இரவென்று பாராது பேசினார். ஏர் பிடித்து உழுத அந்த மக்களுக்காக கவிஞன் தனது நோயைக் கூடப் பொருட்படுத்தாது மூக்கால் இரத்தஞ் சிந்தி மண்ணிலே 1959 ஆம் ஆண்டு ஐப்பசி 8ஆந் திகதி மறைந்தான். மக்கள் கவிஞனின் அழியா கவிதைகளும், அவனது அற்புதமான சிந்தனைகளும் என்றோஒரு நாள் செயல் வடிவம் பெறும் என்பதில் ஐயமில்லை.

**அன்பன் ஆர்பி**

## நம்பிக்கை ஊன்றி நட



ஏ
எந்திர மனிதா

இன்று முதல்
சிரிக்கப் பழகு

கண்ணீர் சுண்டிக்
கடலில் எறி

எரிமலைக் குழம்பா?
இரும்பு காய்ச்சு

பூகம்பமா?
பூச்செடிகளை மாற்றி நடு

தாடி சோகம்
இரண்டையும்
ஒரே கத்தியால்
மழித்து வீடு

பத்திரிகை முதல் பக்கம்
அத்தனையும் ரத்தமா?

தலைப்புச் செய்தியில்
தேசமே காணோமா?
தேநீர் குடி

ஓசோன் கூரையில்
ஓட்டையா?
குடைபிடி

எந்தக்காலத்தில்
பூமி
தலைசுற்றாமல் சுற்றியது?

பல் முளைக்கையில்
ஈறுவலிக்கும்
மாற்றம் முளைக்கையில்
வாழக்கை வலிக்கும்

வலியெடுத்தால்
வழிபிறக்கும்
வழிபிறந்தும் வலியிருக்கும்

பூமி பொதுச் சொத்து
உன் பங்கு தேடி
உடனே எடு

ஒவ்வொரு மேகத்திலும்
உன் துளி உண்டு

ஒவ்வொரு வீடியலிலும்
உன் கிரணம் உண்டு

வானம் போலவே
வாழ்க்கையும்
முடிவதில்லை

முதற்காதல்
முற்றும் தோல்வியா?

இன்னொரு காதலி?
இல்லையா என்ன?

பூமியை நோக்கி
அழிவுக் கோளா?

இன்னொரு கிரகம்
இல்லையா என்ன?

சிரி
நம்பிக்கை ஊன்றி
நட

ஆனால் மனிதா
அவசரப்படாதே

மண்ணின் பொறுமை தான்
மலை

கரியின் பொறுமைதான்
வைரம்


தாயின் பொறுமைதானே
பிரவரியின்
ஒரு நாள் உயர்வு?

ஏ
எந்திரா மனிதா
இன்று முதல்
சிரிக்கப் பழகு

இந்த பூமி
சிரிப்பவர் சொர்க்கம்
அழுபவர் கல்லறை

உன் உதடு
கல்லறையா? சொர்க்கமா?

# கைரேகை சாஸ்திரம்



பெரிய படம்—1

1. ஆயுள் ரேகை
2. புத்தி ரேகை
3. இருதய ரேகை
4. விதி ரேகை
5. திருமண ரேகை
6. ஆரோக்கிய ரேகை
7. செவ்வாய் ரேகை
8. சூரிய ரேகை
9. சுக்கிர வளையம்
10. ஞான ரேகை
11. சுங்கண ரேகை
12. சக்கரம்
13. சங்கு
14. பருவ ரேகை
15. யவ ரேகை

## ஞான ரேகை

### ஞான ரேகை இருக்குமிடம்

சந்திர மேட்டிற்கும், புதன் மேட்டிற்கும் இடையில் வளைந்து காணப்படும் ரேகைக்கு ஞான ரேகை எனப்பெயர். (பெரிய படம்-1)

ஞான ரேகை பொதுவாக எல்லோருடைய கைகளிலும் அமைந்திருக்காது. தெய்வீகசக்தி அமையப் பெற்ற சில ஆண், பெண்களின் கைகளில் மட்டுமே இந்த ரேகை அமைப்பைக் காணலாம். இந்த ரேகையுள்ளவர்கள் சாதாரணமாகப் பிறருடன் பழகமாட்டார்கள். தீர்க்க தரிசனம், சொப்பன தரிசனம் போன்ற தனிப்பட்ட தெய்வீகக் குணங்கள் பொருந்தியவர்களாகக் காணப்படுவார்கள்.

இந்த ரேகையுடைய சிலர் மது வர்க்கங்களை உபயோகிக்கும் எண்ணமுள்ளவர்களாக இருப்பார்கள்.

### சுக்ர வளையம் (THE GIRDLE OF VENUS)

*சுக்ர வளையம் இருக்குமிடம்*

சுக்ரவளையம் ஆள் காட்டி விரலுக்கும், நடுவிரலுக்கும் மத்தியில் தோன்றி மோதிர விரலுக்கும், சுண்டு விரலுக்கும் மத்தியில் முடியும் ரேகையாகும். இது ஓர் அரைவட்டம். (பெரிய படம்1)

சுக்ரவளையம் நன்கு அமையப் பெற்றவர்கள் உற்சாகத்தின் உச்சாணியை அடைந்தவர்களாகவும், காம உணர்ச்சி மிகுந்தவர்களாகவும் காணப்படுவார்கள். மற்றும் இத்தகையவர்கள் தம்முடைய உணர்ச்சி வேகத்தால் தொடங்கிய வேலைகளில் வெற்றியைக் காணாமல் மன வருத்த முறுவார்கள் என்பது திண்ணம்.

## "புதுமனை புகுதல்" ஆகாத மாதங்கள்!

நாம் கட்டிய வீடாயினும் சரி, அல்லது வாடகை வீடாயினும் சரி, வியாபார, தொழில் ஸ்தாபனம் ஆயினும் சரி, ஆடி, மார்கழி, புரட்டாதி, பங்குனி மாதங்களில் கிரகப்பிரவேசம் செய்திடல், குடி புகுதல் ஆகாது என்பர்.

ஊர் விட்டு ஊர் போகும் சூழ்நிலையும், மனச் சஞ்சலம் கொண்டு துன்பப்படுவார்களாம்.

- ஆடி மாதம் இராவணன் துன்பம் கொண்டான்.
- மார்கழி மாதம் பாரத யுத்தம் உண்டானது.
- புரட்டாதி மாதம் இரணியன் வதைபட்டான்
- பங்குனி மாதம் பிரம்மா முடி இழந்தான்.

என்பதால், மேற்கண்ட மாதங்கள் நாம் "குடிபோக" ஆகாதென்பது சான்றோர் வாக்கு.

## செல்வம் நீங்காதிருக்க....!

*உணவு உண்ணும்போது...*

- கிழக்கு — தனம் (செல்வம்)
- தெற்கு ~ஆயுள் (வயது)
- மேற்கு ~கீர்த்தி (புகழ்) ஏற்படும்.

*உறங்கும் போது....*

- தன் மனையில் (வீட்டில்) கிழக்கும்
- பந்துக்கள் மனையில் தெற்கும்
- சுற்றுலா அல்லது பிற இடங்களில் ~ மேற்கும் படுத்து உறங்கச் செல்வம் நிலைத்திருக்கும் என்பர்.

வடக்குத் திசையை அனைத்திற்கும் விலக்குதல் நல்லது. எளிய இம்முறையை வாழ்வில் 'கடைபிடித்து எல்லோரும் எல்லாமும் பெறுவோமாக.

# சலரோகம் (DIABETES MELLITUS)

## அறிமுகம்

சலரோகம் எனும் நோய் இன்று எம்மத்தியில் ஒரு பிரச்சினையாக உள்ளது. இந்நோயினை ஆரம்பத்திலேயே இனங்காண்பதன் மூலம் இந்நோயைக் குறைக்கவோ அல்லது தடுக்கவோ அல்லது பிற்போடவோ முடியும். இதன் மூலம் இந்நோய்க்குட்பட்டவரின் தேகஆரோக்கியம் பேணப்படுவதுடன் வாழ் நாளையும் நீடிக்கச் செய்யலாம்.

## சலரோகம் என்றால் என்ன?

மனித உடலிலுள்ள கலங்கள் உயிர்வாழவும், தொழிற்பாடுகளைஆற்றவும் சக்தி தேவை. இச்சக்தி பிரதானமாக காபோவைதரேற்று சமிபாடடைந்து உருவாகும் குளுக்கோசில் (GLUCOSE) இருந்து பெறப்படுகின்றது. சாதாரண மனிதனின் குருதியிலுள்ள குளுககோசின் அளவு 80-120 mg/dl. குருதியில் குறித்த மட்டத்தில் இதன் அளவு பேணப்பட வேண்டும். குளுக்கோஸ் கலங்களுள் உள்ளெடுக்கப்படுவதை சதையி (PANCREAS) என்னும் சுரப்பியிலிருந்து சுரக்கப்படுகின்ற இன்சுலின் (INSULIN) என்னும் ஓமோன் கட்டுப்படுத்துகின்றது. எனவே உடலினுள் சுரக்கப்படும் இன்சுலினின் அளவு குறைவாக உள்ள பொழுது அல்லது சுரக்கப்படும் இன்சுலின் சரியான முறையில் தொழிற்பட முடியாத பொழுது குருதியில் குளுக்கோசின் அளவு உயருகிறது. இதுவே சலரோகம் எனப்படும்.

சலரோகத்தின் போது குருதியில் உள்ள குளுக்கோசின் மட்டம் சாதாரண அளவை விட (>120 mg/dl) உயருகின்றது. 100ml குருதியில் குளுக்கோசின் அளவு 180mgக்கு மேற்படும் போது (>180mg/dl) சிறுநீரில் குளுக்கோஸ் வெளியேறும் நிலை ஏற்படுகின்றது. இதனால் சிறுநீரின் செறிவு அதிகரிக்கின்றது. இதன் காரணமாக மேலதிகநீர் குருதியில் இருந்து அகத்துறிஞ்சப்படுகின்றது. இதனால் அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டி ஏற்படுகின்றது. இதனால் சலரோக நோயாளி ஒருவர் ஒரு நாளைக்கு 5-6l சிறுநீரை வெளி யேற்றுவார். (சாதாரண மனிதனால் ஒரு நாளைக்கு 1-11/2 லீற்றர் சிறு நீர் வெளியேற்றப்படும்) எனவே தான் சலரோகம், நீரிழிவு நோய் எனவும் அழைக்கப்படுகின்றது.

## சலரோகத்தின் வகைகள்

சலரோகம் முக்கியமாக இரண்டு வகைப்படும்.

1. இன்சுலினில் தங்கியுள்ள நீரிழிவு (insulin Dependent Diabetes Mellitus - IDDM) [Type I]

☆ இது சதையில் உள்ள இன்சுலின் சுரக்கும் கலங்கள் முற்றாக அல்லது குறிப்பிடத்தக்க அளவு அழிக்கப்படுவதனால் உருவாகும்.

☆ இது அதிகளவில் சிறுவயதில் தோன்றுவதால் Juvenile Diabetes Mellitus எனவும் அழைக்கப்படுகின்றது.

☆ இந்நோயாளிகள் உயிர்வாழ்வதற்கு வாழ்க்கைக் காலம் முழுவதும் இன்சுலின் ஏற்றுதல் அவசியமாகும்.

2. இன்சுலினில் தங்கியிராத நீரிழிவு (Non -Insulin Dependent Diabetes Mellitus - NIDDM) [Type II]

☆ இது இன்சுலின் சுரக்கும் தன்மையில் ஏற்படும் குறைபாடு காரணமாகவும், இன்சுலின் ஏற்புகளில் (RECEPTOR) ஏற்படும் குறைபாட்டினாலும் ஏற்படுகின்றது.

☆ இது அதிகமாக வயது வந்தவர்களில் வரும் நீரிழிவாகும். இதனால் பாதிக்கப்படும் நோயாளிகள் அனேகமாக உடற்பருமன் கூடியவர்களாக இருப்பார்கள்.

### இவை தவிர வேறுவகையான நீரிழிவு வகைகளும் உண்டு.

3. கர்ப்பகாலங்களில் ஏற்படும் நீரிழிவு (Gestational Diabetes Mellitus)

4. போசாக்கின்மையால் ஏற்படும் நீரிழிவு (Malnutrition related Diabetes Mellitus)

5. வேறு காரணிகள் (உ-ம் தொடர்ச்சியாக ஸ்ரீரொயிட் (Steroid) மாத்திரைகளை உள்ளெடுப்பதால்)

## நீரிழிவுநோயின் அறிகுறிகள்

அடிக்கடி சிறுநீர் கழித்தல் குறிப்பாக இரவில் நித்திரைக்கு சென்ற பின்னரும் இடையிடையே எழுந்து சிறுநீர் கழிக்க வேண்டியிருத்தல்.

☆ அளவுக்கு மிஞ்சிய தாகம், வாய் உலர்தல்.

☆ அசாதாரண பசி

☆ குறைந்து கொண்டு வரும் நிறை

☆ எளிதில் கோபங் கொள்ளும் தன்மை.

☆ தளர்ச்சி / களைப்பு

☆ சிலரில் - மயக்ககுணம், கண் பார்வை மங்குதல், அவயவங்களில் விறைப்புத் தன்மை ஏற்படல், பின்கழுத்திலும் உடலின் பின் பகுதிகளிலும் பருக்களும் கட்டிகளும் தோன்றுதல், நாட்பட்டு மாறும் புண்கள் ஆகியன அவதானிக்கப்படும்.

## சலரோகநோய் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு கூடியவர்கள்.

☆ உயரம், வயது என்பவற்றிற்கு இருக்க வேண்டியதை விட மேலதிகமான உடல் நிறையும் பருமனும் உடையவர்கள்.

☆ அளவிற்கதிகமாகவும் அடிக்கடி உணவு (சீனி, இனிப்பு, கிழங்கு வகைகள்) உண்ணும் பழக்கம் உடையவர்கள் .

☆ பரம்பரையில் சலரோகம் இருப்பவர்கள்.

☆ அதிகளவு மதுபானம் பாவிப்பவர்கள்.

☆ கர்ப்பவதிகள்.

☆ அதிகளவு ஸ்ரீரொய்ட் மாத்திரை பாவிப்பவர்கள்.

எனவே இத்தகையோரும் 40 வயதுக்கும் மேற்பட்டவர்களும் வருடமொருமுறை சல, குருதிப் பரிசோதனை செய்து கொள்வது விரும்பத்தக்கது.

## நீரிழிவு நோயை அறிவதற்கான பரிசோதனைகள்.

**A** சிறுநீரில் குளுக்கோசின் அளவை அறியும் முறை:-

தேவையான பொருட்கள்:-

1. பரிசோதனைக் குழாய் (TEST TUBE)
2. கவ்வி (TEST TUBE HOLDER)
3. 2.5ml சிறிஞ்ச் (SYRINGE)
4. மை நிரப்பி (INK FILTER)
5. பெனடிக்ற் கரைசல் (benedict solution) 125ml
6. மெழுகுதிரி.

*செய்முறை:-*

காலை எழுந்தவுடன் சிறுநீர் முழுவதையும் வெளியேற்றிய பின் இரண்டாம் முறை வெளியேற்றப்படும் சிறுநீரை பரிசோதனைக்கு பயன்படுத்தவும்.

☆ சிறிஞ்சில் 2.5.ml அளவிற்கு பெனடிக்ற் கரைசல் எடுத்து, பரிசோதனைக் குழாயினுள் விடவும்.

☆ போத்தல் ஒன்றினுள் சேகரிக்கப்பட்ட சிறுநீரில் 4 துளிகள் மை நிரப்பியின் உதவியால் பெனடிக்ற் கரைசலைக் கொண்ட பரிசோதனைக் குழாயினுள் விடவும்.

☆ பரிசோதனைக்குழாயை சிறிது, சரித்துப் பிடித்து எரியும் மெழுகுதிரியில் அல்லது மதுசார விளக்கில் (SPRIT LAMB) கொதிக்கும் வரை வெப்பமேற்றவும்.

☆ கரைசல் கொதித்த பின் பரிசோதனைக்குழாயின் வெளிப்புறத்தை உலர்ந்த துணியால் துடைத்த பின் நிறமாற்றத்தை அவதானிக்கவும்.

*முடிவு:-*

நீலநிறம் காணப்படின் சிறுநீரில் குளுக்கோஸ் இல்லை. குளுக்கோஸ் இருப்பின் நிறம் அவற்றின் செறிவுக்கு, ஏற்ப பச்சை, பச்சைமஞ்சள், மஞ்சள், இளம் சிவப்பு, செங்கட்டிச்சிவப்பு என மாற்றமடையும். ஒவ்வொரு முறையும் செய்யும் பரிசோதனையின் நிறமாற்றத்தை ஒரு குறிப்புக் கொப்பியில் குறித்து அடுத்தமுறை வைத்தியரைச் பார்க்கச் செல்லும் போது காட்டலாம்.

*குறிப்பு:-*

பரிசோதனையில் நீல நிறம் தோன்றின் அது சிறுநீரில் குளுக்கோஸ் இல்லை என்பதையே உறுதிப்படுத்தும். ஆனால் குருதியில் சிலவேளைகளில் குளுக்கோஸ் மட்டம் உயர்வாக இருக்கலாம். எனவே வேறு சில குருதிப்பரிசோதனைகள் மூலமே இதனைக் கண்டுபிடிக்கலாம். இதனை மட்டும் பாவித்து தீர்மானமாக சலரோகத்தைக் கண்டுபிடிக்க முடியாது. சிறுநீர்ப் பரிசோதனையில் நீலநிறம் தவிர மற்றைய நிறங்கள் தோன்றின் அவர் வைத்திய ஆலோசனை பெற்றுக் கொள்ளுதல் அவசியமாகும்.

☆ ☆ சிறுநீரில் குளுக்கோசின் அளவை அறியும் முறை மிகவும் இலகுவானது. மேற்கூறிய பொருட்களை மருந்துக்கடைகளில் ஏறத்தாழ 150 ரூபாவை செலவு செய்வதன் மூலமே வாங்கி வீட்டிலேயே மேற்படி பரிசோதனையைச் செய்து பயனடைய முடியும்.

**B.** குருதியில் குளுக்கோசின் அளவை அறிதல்.

இதனைக் கொண்டு சலரோகத்தைக் கண்டு பிடிக்கலாம்.

☆ **FBS - FASTING BLOOD SUGAR** இரவு 10 மணிக்கு பின்னர் எதுவும் சாப்பிடாது மறுநாள் காலை குருதியில் உள்ள குளுக்கோசை அள்க்கும் போது 120mg/dlக்கு கூடுதலாக இருந்தாலோ.

☆ **PPBS - POST PRANDIAL BLOOD SUGAR** அதன் பின்னர் 75g குளுக்கோசை 250ml நீரில் கரைத்துக் குடித்துவிட்டு 2 மணித்தியாலங்களில் குருதியில் குளுக்கோஸ் 180mg/dlக்கு கூடுதலாக இருந்தாலோ

சலரோகம் உண்டு என்று தீர்மானிக்கப்படுகிறது. இதன்போது குருதியிலுள்ள குளுக்கோசின் அளவை உடனடியாகக் கண்டு பிடிக்கக்கூடிய உபகரணங்கள் (GLUCOMETER) அதிகமாகப் பாவிக்கப்படுகின்றன.

(13 பக்கம் பார்க்க)

# வியாசரின் பதில்கள்

## வியாசர் ஐயாவே யாழ்குடா இப்போது கல்வியில் பாரிய வீழ்ச்சி கண்டுள்ளதே. காரணம் யாதாக இருக்கும்?

*த. அஜந்தகுமார் வதிரி*

★ வியாசர் ஐயாவே! யாழ்குடா இப்போது கல்வியில் பாரிய வீழ்ச்சி கண்டுள்ளதே.காரணம் யாதாக இருக்கும்?



● **விடிய விடிய ரீவி பார்ப்பதும், கற்றதை வீட்டிலிருந்து மீட்காமல் ஓடி ஓடி ரியூட்டரி செல்வதும் தான் காரணம்.**

*வே. சஞ்சீவன் ஒட்டுமடம்*

★ எனது நண்பர்கள்மாலை நேரங்களில் குளக்கரைக்கு சென்று புகை விடுகிறார்கள். அவர்களுக்கு நான் கூறக் கூடிய அறிவுரை என்ன?

● **விரைவாக கங்கையில் கரைவதற்கு புகைத்தல் காரணமாகிவிடும் எனப் போதிக்க வேண்டியது தானே.**

*தே. தங்கன் நீராவியடி*

★ வியாசர் மாமா! நான்தேடி போகாமல் என்னைத்தேடி பல தொல்லைகள் வருகின்றன. இதிலிருந்து தப்பிக்க என்ன வழி?

● **மருமகனே தங்கா! என்னை மாமா என்று அழைத்தது போல் எத்தனை பேரை மாமா என்றழைத்து தொல்லையைத் தேடிக் கொண்டாயோ யாரறிவார்.**

*சி. திருச்செந்தூரன் மிருசுவில்.*

★ வியாசர் அவர்களே! போருக்குத் தயாராக இல்லாத அர்ஜீனனைப் போரில் ஈடுபடுத்துவதற்காக சில வாதங்களைத் தொகுத்துக் கொடுத்ததே பகவத் கீதை என்று கூறலாமா?

● **தர்மத்தை நிலை நாட்டும் போர் தொடங்கி விட்டது. அருச்சுனன் தயங்குகிறான். பார்த்த சாரதியாக இருந்த கண்ணபரமாத்மா, அர்ச்சுனனுக்குப் போர் செய் என்று கூறவில்லை. நீயார்? நின் கடமை என்ன? உன்கடமையை சரியாகச் செய் பேசுவோனும் நானே! பேசப்படுவோனும் நானே! என்ற முக்காலத்து உண்மையை பகவத் கீதை போதிக்கிறது.**

*அன்ரனி திபன் மாகியப்பிட்டி*

★ கொழும்பில் இடம் பெறுவது போல் நமது யாழிலும் இந்தியக்கலைஞர்களை அழைத்து இசை நிகழ்ச்சி வைக்கிறார்களே. அதே போல் கொழும்பு திரை அரங்குகளிலும் ''வயது வந்தவர்களிற்கு மட்டும்'' திரையிட்டால் எப்படி இருக்கும்?

● **வயது வராதவர்கள் முந்தியடிப்பார்கள்.**

*ப. சுதர்சன் இத்தாவில்*

★ எதிர் வகுப்பில் இருக்கும் பெண் என்னைப்பார்த்து சிரிக்கிறாள் என்ன செய்ய?

● **தம்பி சுதர்சா ! முதலில் புத்தகத்தைப்பார், ஆசிரியரைப் பார், ஆசிரியர் கரும்பலகையில் எழுதுவதைப்பார், பக்கத்து வகுப்பை பாராதே.**

*எஸ். கவிதரன் சண்டியூர்*

★ உண்மைக் காதலர்களுக்கு சாதி என்ற தடை ஏற்படுமாயின் என்ன செய்ய வேண்டும்?

● **சாதி இரண்டொழிய வேறொன்றுமில்லை எனச் சாற்ற வேண்டும்.**

*எம். சொப்னா செட்டியூர்*

★ வியாசரே! குள்ள நரியாக மாறும் நண்பரகளைப் பற்றி.....?



● **குள்ள நரிகளை நண்பர்கள் என்று சொல்வதில்லையே.**

*வ. ரூபி பருத்தித்துறை*

★ அமைதியாக இருப்பவர், அதிகம் கதைப்பவர் இவர்களில் யாரை நம்பலாம்?

● **அதிகம் கதைப்பவரை**

*த. றொபேட் நாவாந்துறை*

★ டியர் வியாசரே! இனி A/L பரீட்சை ஏப்ரலில் தானா நடக்கும்?

● **சுற்றி திரிவதற்கு மூன்று மாதம் மேலதிகமாகத் தந்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியிலா கேட்கிறீர்.**

*ஜோ. ஜெ. டி கொழும்புத்துறை*


★ பெண் புத்தி பின் புத்தி என்றால் ஆண் புத்தி...?

● **திருமணமாவதற்கு முன்னர் ~ முன்புத்தி திருமணமாகிய பின்னர்~ பின் புத்திக்குப் பின் புத்தி**

## சீறும் பாம்பை நம்பு! சிரிக்கும் பெண்ணை நம்பாதே! இந்தப் பழமொழி சரியா?

*திலீபன் சித்தங்கேணி*

★ சீறும் பாம்பை நம்பு! சிரிக்கும் பெண்ணை நம்பாதே! இந்தப் பழமொழி சரியா?



● **பாம்பு கோவிக்கப் போகிறது. பெண்ணை கொண்டுவந்து தன்னோடு ஒப்பிட்டதற்காக.**

*ரவிவர்மன் உரும்பிராய்*

★ காதல் புனிதமானதாமே?

● **அதிலென்ன சந்தேகம். துறவிகளையும், சித்தர்களையும், தவயோக ஞானிகளையும் காதல் தோல்வி தானே தந்தது.**

*றமணன் புங்குடுதீவு*

★ பசிவந்தால் பத்தும் பறந்து போகும். பதவி வந்தால்....?

**பத்தும் பறந்துவரும்.**

*ரதி வேலணை*


★ பெண்கள் அன்னம் போல இருக்கவேண்டுமா? மயில் போல இருக்க வேண்டுமா?

● **கணவனைத் தெரிவு செய்யும் விடயத்தில் அன்னம் போலவும் குடும்ப சுமையில் மயில் போலவும் இருக்க வேண்டும்.**

## நம் நாட்டுப் பெண்கள் வெளிநாடு, வெளிநாடு என்று ஓடுகிறார்களே ஏன் உள்ளூர் கசக்கிறதா?

*பொன். குணரத்தினம் நாவலர்வீதி*

★ நம் நாட்டுப் பெண்கள் வெளிநாடு, வெளிநாடு என்று ஓடுகிறார்களே ஏன் உள்ளூர் கசக்கிறதா?




● **உள்ளூரில் இருப்பவர்கள் 15,20 இலட்சம் கேட்டால் அவர்கள்தான் என்ன செய்ய முடியும்.**


*இ. சுலோஜனா பருத்தித்துறை.*

★ பெண்களைத் துரத்தித் துரத்தி ஊரறியக் காதலிக்கும் ஆண்கள் பெற்றோர் ஏசுகின்றனர், என்னை மறந்துவிடு என்று கூறிவிட்டு வேறு பெண்ணைக் காதலிக்கின்றனரே. இவ்வாறு தாவித் திரியும் அசுத்த ஆவிகளைப் பெண்கள் எவ்வாறு அடையாளம் காண்பது?.

● **மகளே சுலோஜனா, அசுத்த ஆவிகளுக்கு அடையாள அட்டைகளா உண்டு. பெண்கள் கட்டு மீறாமல் இருப்பதுதான் ஒரே வழி.**

## வியாசரே! குள்ள நரியாக மாறும் நண்பர்களைப்பற்றி.....?

# வாசகர் இதயநாதம்



உலகெங்கும் ஒலித்திடுவாய்
ஆக்கங்கள் பல தந்திடுவாய்
இனிய நற் புதிர்கள் தந்திடுவாய்
நாட்டின் இணையற்ற வாரமலராய்

உயரட்டும் உன்புகழ் நாடெங்கும்
எண்ணற்ற பிரசுரங்களில்
அளித்திடுவாய்।
ஏணிப்படி போல் நடந்திடுவாய்
ஒளிமயமான எதிர்காலம் உனக்காக
ஓங்கி வளர்ந்து மலர்ந்திடுவாய்.
நாட்டின் அரிய சேவை புரிந்திடுவாய்
நாதமே வாழ்க।

*யோ. சுதர்சினி,*
*உடுவில் மகளிர் கல்லூரி.*

தெள்ளு தமிழ் தேன்மொழியில்
புதன்தோறும் பூக்கும் பூவே!
பூவில் தேன் குடிக்கும்
வண்டென நான் உன்னில்
அறிவைக் குடிக்கிறேன்
தொடர்கதை எம் மனதைத்
தொட்டுச் செல்கிறது.
கவிதைக் கலசத்தில் புதிய
கவிஞர்களிற்கு கவசம் அளிக்கிறாய்
மௌனத்தின் தேடலிலே மனித
உணர்வுகளைத் தட்டி எழுப்புகிறாய்
இலக்கிய நயத்திலே இனிமை
தருகிறாய் அரசியலிலே
வேட்டு வைக்கிறாய்
இன்பநாதமே - சங்குநாதமே
உன் புகழ் ஓங்கட்டும்!

*சி. திருச்செந்தூரன்*
*வடக்கு மிருசுவில்*

அரசியல் விமர்சனத்தில்
ஆழ்ந்து சிந்திக்க வைக்கும்
இலக்கிய நயத்தில் ~ யாம்
இன்புற்றிருக்கக் கூடிய
ஈழத்தமிழர் பால் வல்லரசு
நாடொன்று
ஈடுபாடு கொண்டிருக்கும்
தகவலையும்
உள்ளங்களின் சங்கமத்தில்
சிறுகதையில்
ஊறி உள்ளத்தை
பறிகொடுத்து
எல்லா விடயங்களையும்
ஏற்று இன்முகத்துடன் கற்றிட
ஒவ்வொரு இதழின்
விடயதானமும்
ஓயாமல் படித்திட
தூண்டிடும்
ஔடதம் போல் எமக்கு
கிடைத்த
அரும் பெரும் பொக்கிசமேயூ
ஓங்குக உன் பணி
உளமார வாழ்த்துகிறேன்யூ

*ஞா. சுதர்சினி*
*கைதடி மேற்கு*

உள்ளத்தில் உல்லாசம் தந்திட
உயரிய ஆக்கம் தந்தே-புதனிலே
அள்ளியே உனை நாம் குடிக்க
அவனியிலே பவனிவரும்
சங்குநாதமே!

பரபரப்பும் சுறுசுறுப்பும்
புதனிலே நீ தருகின்றாய்! - உன்
வரவினிலே எம்மோடு தினம்
வசந்தம் கைகோர்த்து நிற்குதே

வந்த சில வாரங்களில்
வாசகரை நீ கவர்ந்திட்டாய்!
சிந்தையிலே ஒளியேற்றி
சீரிய பணியாற்றுகின்றாய்!

''நித்தம் நித்தம் நீண்டு ஒலித்து
சித்தம் மகிழ வைக்கட்டும்
சங்குநாம்''

*த. அஜந்தகுமார்*
*வதிரி*

வாரம் தவறாமல் வாஞ்சையுடன்
வலம்வரும் வலம்புரியின் சங்குநாதமே
வாசகர் உளம் தனை ஈர்த்து
வருகின்றாய் வரவேற்போம் உன்னை.

மூளைக்கு வேலையாய் குறுக்கெழுத்துப்
போட்டியும்
அரசியல் அலசலை குருசேத்திரத்திலும்
நற்கவிதைகளை கவிதைக் கலசத்திலும்
சிந்திக்கவும் சிரிக்கவும் வியாசர் பதிலையும்

நல்ல தரமான சிறு கதையையும்
இலக்கிய இலக்கணத்திற்கு இலக்கிய நயமும்
இளைஞர்தனை கவரும் சினிமாச் சிதறலையும்
பெண்மணிகளையும் விடாது மகளிர் உலகமும்.

அனைத்தையும் ஒருங்கே தந்து
முக்கனியின் சாறு எடுத்து அதனை
பருகும் சுவைக்கு ஈடாக
வலம் வரும் வலம்புரியின் சங்கு நாதமே

பலரது ரசிப்பினையும் நீ தருகின்றாய்
பல்லாண்டு புகழ் பரப்பி பாரினிலே
பல காலம் நீ வளர உளமார
பலகோடி வாழ்த்துக்களை நவில்கின்றேன்.

*நா. மகேந்திரலிங்கம்,*

# அர்த்தமுள்ள இந்து மதம்



கவிஞர் கண்ணதாசன்

எப்போது நீங்கள் நினைத்து நடக்கவில்லையோ அப்போது உங்கள் நினைவுக்கு மேல் இன்னொன்று இருக்கிறது என்று அர்த்தம்.

அதற்கும் நம் மூதாதையர் சூட்டிய பெயரே விதி" கேள்வியாளர் கேட்டார்:

''அந்த விதி எப்போது நிர்ணயிக்கப்படுகிறது? எங்கிருந்து தொடங்குகிறது?''

ஞானியார் சொன்னார்:

''சூன்யத்தில் நிர்ணயிக்கப்படுகிறது? ஜனனத்தில் தொடங்குகிறது.

தான் நினைத்தபடியெல்லாம் வாழ்க்கையை நடத்தி முடித்தவர்கள் எத்தனை பேர்?

வீரன் வெற்றி பெற்றால், அது வீரத்தால் வந்தது.

கோழை தோல்வியுற்றால், அது கோழைத்தனத்தால் கிடைத்தது.

ஆனால் வீரன் தோல்வியுற்றாலோ, கோழை வெற்றி பெற்றாலோ, அவை விதியால் நிர்ணயிக்கப்பட்டவை!

வரலாற்று நதியைத் தனி மனிதனின் சாகசங்கள் இழுத்துச் செல்வதில்லை.

விதியே அழைத்துச் சென்றிருக்கிறது.

கோவலனை மதுரைக்கு அழைத்ததும், பொற் கொல்லனைச் சந்திக்க வைத்ததும் விதி.

மாதர்களாலேயே ஆரம்பமான பிரஞ்சு சாம்ராஜ்யம், மாதர்களாலேயே அழிவுற்றதற்குக் காரணம் விதி!

ஒன்று நடைபெற்ற பின்னால், 'கொஞ்சம் அப்படிச் செய்திருந்தால் நடந்திருக்காதே'

பிரவாகம்

என்று மதி சிந்திக்கிறது!

மதி ஏன் தாமதமாகச் சிந்திக்கிறது?

விதி முந்திக்கொண்டு விட்டது! ''

கேள்வியாளர் கேட்டார்:

''அப்படியானால் மனிதனின் மதியால் ஆகக்கூடியது ஒன்றுமே இல்லையா?''

ஞானியார் சொன்னார்:

'' இருக்கிறது!

பள்ளம் என்று தெரியும் போது, அதில் விழாதே என்று எச்சரிப்பது மதி.

அதைப் பள்ளம் என்று தெரியவைத்தது விதி.

விதி வாசலைத் திறந்து கொடுத்தால் மதி மாளிகைக் குள்ளே நுழைகிறது.

விதி வாசலை மூடி விட்டால், மதி அதிலே மோதிக் கொண்டு வேதனை அடைகிறது.

விதி என்னும் மூலத்திலிருந்து முளைத்த கிளையே மதி.

தந்தையைக் கொன்று சாம்ராஜ்யத்தை கைப்பற்றிய இளவரசர்களைப் போல் மதி சில நேரம் விதியை வென்றிருக்கலாம்.

ஆனால் விதி அந்த மதியின் குழந்தையாக மறுபடியும் பிறந்து தந்தையை கொன்று விடுகிறது.

நியமிக்கப்பட்ட தர்மங்கள் சலனமடைவதும் நியமிக்கப்படாதவை உறுதி பெறுவதும், நமக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியினாலே.

அதை என்ன பெயர் வைத்து அழைத்தாலும், அதுதான் நம்மை அழைத்துச் செல்கின்றது.

சாமியாக இருந்தவன் யோகியாக மாறுவது அனுபவத்தால் வந்த மதி.

யோகி சாமியாக மாறுவது ஆசையின் மூலம் வந்த விதி.

தொடக்கம் பலவீனமானால், முடிவு பலமாகிறது.

தொடக்கம் பலமானால், முடிவு பலவீனமாகிறது. தொடக்கமும் முடிவும் ஒரே மாதிரி இருந்தால் விதி வேலை செய்யவில்லை என்று அர்த்தம்.

அப்படியாராவது இருக்கிறார்களா?''

ஞானியாரின் கேள்வி, கேள்வியாளரைச் சிந்திக்க வைத்தது. கண்களை மூடிக் கொண்டு சிறிது நேரம் யோசித்தார்.

மண்டபத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

ஞானியார் அமைதியாகக் கேட்டார்:

''உங்கள் மதிவேலை செய்யவில்லையா?'' கேள்வியாளர் அமர்ந்தார்.

ஞானியார் சொன்னார்:

''ஜனனத்திற்கு முன்பும் மரணத்திற்கு பின்பும், நாம் எங்கிருந்தோம், எங்கு போகிறோம் என்று தெரியும் வரை நமக்கு அப்பாற்பட்டது ஒன்று இருக்கிறது.

இடைப்பட்ட வாழ்க்கைய அது நடத்துகிறது.

நான் துறவியானதும் நீங்கள் சம்சாரிகள் ஆனதும் நமது விருப்பத்தால் மட்டும் விளைந்தவை அன்று.

காலை வெயிலில், நமது நிழல் நம் உயரத்தை விடப் பன்மடங்கு உயரமாக இருக்கிறது.

மதியத்தில் நம்மை விட அது கூனிக்குறுகிக் காலடிக்குள் ஒண்டிக் கொள்கிறது.

மாலையில் அது மீண்டும் உயரமாகி விடுகிறது.

ஆனால், நம் உருவம் என்னமோ ஒரே மாதிரி இருக்கிறது.

நம் உருவமே விதி; நம் நிழலே மதி!''

மண்டபமே அதிரும்படி கையொலி கேட்டது.

சபை கலைந்தது.

கேள்வியாளர் மட்டும் வெளியே நின்றுகொண்டிருந்தார்.

''உங்கள் கேள்வியும் என் பதிலும் விதியல்ல; மதியே!

மதியால் விதியை ஆராய்ச்சி செய்யலாம், ஆட்சி செய்ய முடியாது'' என்றபடி ஞானியார் நடந்தார்.

கேள்வியாளர் பின் தொடர்ந்தார்.

(தொடரும்)

# எள் என்னும் அரிய மருந்து

எள் இந்தியாவில் ஏராளமாக பயிராக்கப்படுகின்ற ஒரு செடி. இதன் காயிலிருக்கின்ற ஏராளமான விதைகளைச் சேகரித்து உலர்த்தி நல்லெண்ணெய் எடுக்கிறார்கள். இதில் வெள்ளை, கருமை, செம்மை என மூன்று பிரிவுகள் உண்டு. மேலும் காட்டெள்ளு, சிற்றெள்ளு பேரெள்ளு எனப் பல ரகம் உண்டு.

இதன் இலை, பூ, காய், விதை எல்லாவற்றிற்கும நோய் தீர்க்கும் தன்மை உண்டு.

## தீரும் நோய்கள்.

இரணம், கட்டிகள்,காசம், உதிரச்சிக்கல், இரத்த மூலம், காது நோய், தலைக்கொதிப்பு, சொறி-சிரங்கு, இருமல், பரு, கண்வலி, கண்சிகப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் கூசல், மண்டைக் குத்தல், தீப்புண், சுண்ணாம்பு வேக்காடு புண், தினவு, சீதக்கழிச்சல்,ஐயம் மற்றும் பல, கண் ஒளி பெறவும், உடல் வலிமை பெறவும், புத்தி தெளிவடையவும் எள் பயன்படுகிறது.

## இலை.

ஒன்றிரண்டு பச்சை இலைகளை எடுத்துக் குளிர்ந்த நீரில் அலசினால் பச்சை இறங்கும். இது இரணம் பட்ட கண்களைக் கழுவ உதவும்.

இலைகளை ஓர் ஆழாக்கு அளவு எடுத்து, குளிர்ந்த நீர் விட்டு ஊறவைத்து தினம் இரு வேளையாக ஒரு வாரத்திற்குக் கொடுத்து வர, சீதக் கழிச்சல் குணமாகும்.

இலையைப் பதமாக வாட்டி கட்டிகளுக்குக் கட்ட அவை சீக்கிரம் பக்குவமடைந்து உடையும்.

## பூ.

எள்ளுப் பூக்களைப் பறித்து சுத்தம் செய்து பல்லில் படாமல் வாயில் போட்டு விழுங்கவேண்டும். அவ்வாறு எத்தனைப் பூக்கள் உண்கிறீர்களோ, அத்தனை வருடங்களுக்கு கண்கள் சம்பந்தப்பட்ட நோய்கள் வராது என்று சித்த வைத்திய சாஸ்திரத்தில் கூறப்படுகிறது.

## காயும் தோலும்:

காயையும் தோலையும் உலர்த்திச் சுட்டுச் சாம்பலாக்கி, புண்களுக்குத் தூவ, அவை நீங்கும்.

## விதை:

இவ்விதையை ஊறவைத்த தண்ணீரை உதிரச் சிக்கலுக்குக் கொடுக்கலாம். இதைப் பெரும் அளவில் சாப்பிட்டால் கருச்சிதைவு உண்டாகுமென்று கருதப்படுகின்றது.

பொதுவாக இது மருந்தை முறிக்கும். வெம்மை, காசம், ஐயம் இவற்றைப் பெருக்கும். தொண்டையைக் கட்டும். கண்ணுக்கு ஒளியையும் உடலுக்கு வன்மையையும் தரும் இரத்தப் பெருக்கை உண்டாக்கும்.

விதையின் விழுது ஒரு சுண்டைக்காய் அளவு வெண்ணெயில் சேர்த்து சாப்பிட்டால் இரத்த மூலம் போகும்.

விதையை அரைத்துக் கொதிக்க வைத்துக் கட்டிகளுக்குக் கட்ட, அவை நாளடைவில் பழுத்து உடையும்.

## உடல் வன்மை பெறவும், வளித்தீக்கூட்டு நோய்களுக்கும்:


தேவையான எள்ளை எடுத்து நன்கு கல், மண் இல்லாமல் அரித்து, சாதத்துடன் சேர்த்து சாப்பிட்டால் வளித்தீக் கூட்டு நோய்கள் விலகும். ஐயம் பெருகும், உடல் வன்மை உண்டாகும்.

## நீரிழிவிற்கு:

ஆழாக்கு எள்ளை எடுத்துக் கொண்டு, கல், மண் இல்லாமல் நன்றாக அரித்து வைத்துக்கொண்டு, சிறிது பனை வெல்லம் அதில் சேர்த்து அம்மியில் வைத்து இடித்து, தினம் இருவேளை (காலை-மாலை நெல்லிக்காய் அளவு சாப்பிட்டு வரும் பட்சத்தில், நீரிழிவு குணமாகும். ஒரு சமயம் நீர் இறங்கத் தாமதிக்கும் பட்சத்தில் நாட்டுச் சர்க்கரை உட்கொள்ள, நீர் தாராளமாக வரும்.

## தக்க வயதில் ருது ஆகாத பெண்களுக்கு:

தேவையான எள்ளை எடுத்துக்கொண்டு கல், மண்



இல்லாமல் நன்கு அரித்து சுத்தம் செய்து எள்ளு கால் படி எடுத்து, ஒரு பாத்திரத்தில் போட்டு மாலையில் தண்ணீர் ஊற்றி ஊறவைத்து, காலையில் எடுத்து வறுத்து வடிகட்டி சுமார் ஆழாக்கு நீர் இருக்கும் படி செய்து காலை எழுந்த பிறகு பல் துலக்கி விட்டு வெறும் வயிற்றில் அருந்தவும். இந்த விதமாக எள்ளு கழுவிய நீரை மூன்று நாட்கள் கொடுக்க, பெண்கள் ருதுவாவார்கள்.

## பித்த வாயுவினால் ஏற்படும் மார்பு வலிக்கு:

தேவையான. எள்ளும் முருங்கைக் கீரையும் சேர்த்து அவித்து உண்பதால்,

## பித்தவாயுவினால் ஏற்படும் மார்பு வலிக்கு:

தேவையான எள்ளும் முருங்கைக் கீரையும் சேர்த்து அவித்து உண்பதால் பித்த வாயுவினால் ஏற்படும் மார்புவலி நாளடைவில் நீங்கும்.

## சூதக வாய்வு நீங்க:

சூதக வாய்வு என்னும் நோய்க்கு எள்ளும் வெல்லமும் சேர்த்துப் பிசைந்து சாப்பிட நாளடைவில் குணமாகும்.

## முட்கள் வெளிவர:

முள் குத்திய இடத்தில் எள்ளை அரைத்துக் கட்ட நாளடைவில் முள் அழுகி வெளிப்படும்.

## நீர்க்கோவை நீங்க:

எள்ளைப் பொடி செய்து நெருப்பில் தூவி, அதிலிருந்து வெளிப்படும் புகையைச் சுவாசித்தால் நீர்க்கோவை அகலும்.

## தாய்ப்பால் சுரக்க:

நன்கு அரித்த எள்ளு, கேழ்வரகு, வெல்லம் இவை மூன்றையும் சேர்த்து இடித்துச் சாப்பிட நாளடைவில் பெண்களுக்கு தாய்ப்பால் சுரக்கும்.

*ஊட்டச்சத்து உணவை வீட்டிலேயே எளிதாகத் தயாரிக்கலாம்.*

| | |
|---|---|
| எள்ளு | 50 கிராம் |
| வேர்க்கடலை | 200 கிராம் |
| பொட்டுக்கடலை | 200 கிராம் |
| கேழ்வரகு | 200 கிராம் |
| கோதுமை | 200 கிராம் |

மேற்கண்ட அனைத்துத் தானியங்களையும் 250 கிராம் வெல்லத்துடன் கலந்தால், சத்துமாவு தயார். இச்சத்து மாவைக் கொண்டு பலவிதத்தின்பண்டங்களைத் தயாரிக்கலாம். இத் தின்பண்டங்களைத் தொடர்ந்து உண்ணக் கொடுத்தால் உங்கள் குழந்தைகள் ஆரோக்கியமாகவும் அறிவாளிகளாகவும் வளர்வார்கள்.

## மூலநோய் நீங்க:

சுத்தப்படுத்தப்பட்ட எள்ளை 12கிராம் எடுத்து அரைத்து, அரைத்த விழுதை 200மி.லி ஆட்டுப் பாலில் போட்டுக் கலந்து, 6கிராம் சர்க்கரையைச் சேர்த்துக் கலக்கி அருந்திவரும் பட்சத்தில், மூல நோய் அகலும் என்பது உறுதி.

குறிப்பு: காலை வேளையில் அருந்தவும்.

## இரத்தக் காயங்களுக்கு:

சதையுடன் பெயர்ந்து இரத்தக் காயங்கள் ஏற்படுமானால், தேவையான எள்ளை எடுத்து அரைத்து, அவ்விழுதுடன் தேனையும் நெய்யையும் கலந்து தடவிவரும் பட்சத்தில் நாளடைவில் நலம் பெறலாம்.

## இரவில் படுக்கையில் நீர் கழிக்கும் குழந்தைகளுக்கு:

சுத்தம் செய்த எள்ளை எடுத்துக் கொண்டு அதனுடன் தேவைப்பட்ட முள்ளங்கியை எடுத்துத் துருவி இரண்டையும் கலந்து குழந்தைக்குச் சாப்பிடச் செய்தால், நாளடைவில் இரவு வேளைகளில் படுக்கையில் நீர் கழிக்கும் பழக்கம் நிற்கும்.

## உடல் பலத்துக்கும், பல் வலிமை பெறவும்:

இரண்டு படி எள்ளை எடுத்துக் கொண்டு கல் , மண் இல்லாமல் நன்கு அரித்து, சுத்தம் செய்து, எடுத்து ஒரு பெரிய போத்தலில் சேமித்து வைத்துக்கொள்ளவும்.

காலையில் பல் துலக்கிய பிறகு ஒரு கைப்பிடி சுத்தமான எள் எடுத்து வாயில் போட்டு நன்றாக மென்று சாப்பிட்டு வரவும்.

தொடர்ந்து சாப்பிட்டு வரும் பட்சத்தில் உடலுக்குப் பலமும் ஆரோக்கியமும் தருவதுடன் பல் வலிமை பெறுவதோடு, பல்லின் வீழ்ச்சியையும் இது அகற்றும்.

நன்றி : நல்வழி

# அண்ணல் காந்தியின் கஸ்தூரி திலகம்

08

இந்தக் கதையைச் சுருக்கமாகச் சொல்லி முடித்தார் காந்தி.

"இதுதான் கஸ்தூரி நடந்தது. சத்தியம்தான் என்னைக் காப்பாற்றியது. உண்மையை மறைப்பது கூட சத்திய நெறிக்கு இழுக்காகும் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

கதையைக் கேட்டுக் கொண்டிருந்த கஸ்தூரியின் கண்கலங்கியது. கூடவே குறுநகை ஒன்றும் அவள் உதட்டில் படர்ந்தது. அதில் குறும்புத்தனமும் நெளிந்தது.

மோகன்தாசுக்கு ஆத்திரம் பொங்கியது.

"ஆமாம் நீ என்ன ஜடமா? ஆயிரம் மைல்களுக்கு அப்பால் எங்கோ ஓர் ஊரில் முன்பின் தெரியாத ஒருத்தியுடன் இத்தனை நெருங்கிப் பழகினேன் என்று சொல்லுகிறேன், உனக்குப் பொறாமையே ஏற்படவில்லையா? என் மீது துளி சந்தேகம் கூடத் தோன்றவில்லையா.....?

அவளுடைய குறுநகை, பெருநகையாக மாறியது.

மோகன்தாசின் கண்ணில் கனல் தெறித்தது.


"என்னுடையது ஒரு தலைபட்சக் காதல்! உனக்கு என் மீது ஆசையில்லை, அன்பு இல்லை, பாசம் இல்லை, பரிவு இல்லை..... அதனால் தான் என் மீது உனக்குப் பொறாமையோ, சந்தேகமோ ஏற்படவில்லை" விளையாட்டுப் பேச்சு வினையாக உருமாறியது.

கஸ்தூரி வாய் மூடி மௌனியாக நின்றாள்.

அவள் படித்தவளல்ல. கணவனிடம் அன்பு காட்ட வேண்டும் என்று பாடம படித்துத் தெரிந்து கொள்ளவில்லை அவள். ஒரு மனைவி எந்த நிலையிலும் கணவனிடம் மாறாத அன்பு கொண்டிருக்க வேண்டும் என்று உள்ளுணர்வு அவளுக்கு கூறியது. அன்பு மட்டும் இருந்து விட்டால் போதாது. ஆழ்ந்த நம்பிக்கையும் இருக்க வேண்டும். நம்பிக்கையற்ற அன்பு, ஆணிவேரற்ற மரம் என்பது அரிச்சுவடி கூட அறியாத அவளுக்குப் புரிந்திருந்தது. அந்த நம்பிக்கை இருந்து விட்டால் பொறாமைக்கும், சந்தேகத்திற்கும் இடமேது? கணவன் என்று சரண்புகுந்தவனைத் தெய்வமாக நம்பினாள் அவள். அவனில்லாமல் தனக்கென்று தனி வாழ்வு கிடையாது என்பதையும் உணர்ந்திருந்தாள். அதுதான் இந்த மனவளத்தின் மகிமை! நம் பெண்குலத்தின் பெருமை!

அவள் மௌனத்தில் இத்தனை பெரிய தத்துவம் புதைந்திருந்தது என்பதை காந்தி புரிந்து கொள்ளவில்லை. அவளுக்கு ஒன்றும் தெரியாது என்றல்லவா அவர் நினைத்துக் கொண்டிருந்தார். அவளுக்கு நாலு எழுத்து சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று மீண்டும் ஒரு முயற்சி செய்தார். முன்போலவே அம்முயற்சியில் தோல்வியே கண்டார். அவள் மீது அவருக்கிருந்த மோகம் அவர் திட்டத்தை குலைத்தது. இங்கிலாந்திலிருந்து திரும்பும் போது கஸ்தூரியிடம் எப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டு வந்தாரே அதெல்லாம் சிதறிச் சின்னாபின்னமாகி விட்டது. அவர் சிந்தையில் குடியேறியிருந்த சிற்றின்பப் பேய் குடிபோதையால் தலைக்கேறி அவரை அலைக்கழித்தது. மூன்றாண்டுகளாக் கணவரின் 'அன்புத் தொந்தரவு' இல்லாமல் நிம்மதியாக இருந்த கஸ்தூரி, இப்போது திண்டாடினாள். மீண்டும் பழையபல்லவி தான்! வீண் பொறாமை, அர்த்தமற்ற சந்தேகங்கள், சில்லறைச் சச்சரவுகள், சிந்தனையற்ற பேச்சுக்கள்! ஒரு நாள் கடுமையான கோபம் வந்து விட்டது காந்திக்கு. மனைவியைப் பிறந்தகத்துக்கு அனுப்பி விட்டார். ஆறுமாதத்துக் கெல்லாம் அவளை வரச் சொல்லி அழைப்பும் விடுத்தார். கஸ்தூரிக்கு இது பழகி விட்டது. பொறுத்துக் கொண்டாள். வேறு என்ன செய்வாள்? பெண் பிறவி எடுத்து விட்டாளே!

குடும்பம் என்றால் கணவன் - மனைவி சச்சரவுடன் நின்று விடுகிறதா? அதுவும் எல்லோரும் சேர்ந்து ஒன்றாக வாழும் குடும்பம் என்றால் எத்தனையோ விதத் தொல்லைகள், பிரச்சனைகள்! குடும்பத் தலைவர் போய்விட்டார். அவருடன் அவருடைய பென்ஷன் வருமானமும் போய் விட்டது. பிறகு தாயார் உயிரோடு இருந்தவரை எப்படியோ சமாளித்துக் கௌரவமாகக் குடித்தனத்தை நிர்வகித்து வந்தாள். இதனிடையே மோகன்தாசின் படிப்புக்காக வாங்கிய கடன் வேறு ஏறி விட்டது. குழந்தைகள் வேறு வளர வேண்டியிருந்தது.



குடும்பச் சுமை பூராவும் லட்சுமிதாசும், கர்ஸன்தாசும் தான் தாங்கினார்கள். மூத்தவர் ஒரு சிறு வக்கீல். அதாவது வக்கீல் குமாஸ்தா என்று சொல்ல வேண்டும். இளையவரோ ராஜ்கோட் சமஸ்தான காரியாலயத்தில் ஒரு சிறு குமாஸ்தா. ஆகவே தான் லட்சுமிதாஸ், தம்பியின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். "தம்பி வருவான், கை நிறையைச் சம்பாதிப்பான், கஷ்டமெல்லாம் விடிந்து விடும்" என்று கோட்டை கட்டிக் கொண்டிருந்தார்.

தம்பி வந்தார். ஆங்கில பாணி உடையுடன் வந்தார். ஆங்கில பாணியிலேயே சில மாற்றங்களையும் செய்தார். 'கப்பும் ஸாசரும், ஓட்ஸ்கஞ்சியும் கொக்கோவும் மாறுதலின் சின்னங்களாக அமைந்தன. குழந்தைகள் எல்லாம் ஆங்கிலேயக் குழந்தைகள் போலவே வலுவும் பொலிவும் பெற்று விளங்க வேண்டும் என்று தினமும் அவர்களுக்குத் தேகப்பயிற்சி அளிப்பதில் மும்முரமாக ஈடுபட்டார் காந்தி.

இந்த வேடிக்கைகளையெல்லாம் கண்டு கஸ்தூரி, ரசித்தாள். ஆனால் ஓரகத்திகள்முணு முணுத்தார்கள். "எங்கள் கணவர்கள் சம்பாதித்துக் கொண்டு வரட்டும். உன் கணவர் 'தாம்தூம்' செலவு செய்யட்டும்" என்று அவர்கள் சொல்லாமல் சொன்னார்கள். அவர்களுடைய கடுகடுத்த பார்வை அதைத்தான் கூறியது. பாவம், கஸ்தூரி என்ன செய்வாள்?.

மோகன்தாஸ் காந்தியும் சம்பாதிக்கத் தயார்தான். ஆனால் அவரிடம் வழக்குகளை ஒப்படைக்க ஒருவரும் தயாராக இல்லையே! பாரிஸ்டர் பட்டம் பெற்றுக் கொண்டு வந்துவிட்டாரே தவிர, அவருக்கு இந்தியச் சட்டத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. இனி மேல் தான் படிக்கவேண்டும். ஆகவே பம்பாய்க்குச் சென்று, நம் நாட்டில் வழக்கறிஞராகப் பணியாற்றுவதற்கு என்னென்ன படிக்க வேண்டுமோ அதையெல்லாம் படித்தார். நடு நடுவே கோர்ட்டுக்குள்ளும் போனார். ஆனால் எழுந்து பேசத் துணிவு இல்லை. படித்ததை எடுத்துச் சொல்லப் பக்குவம் போதவில்லை. நீதி மன்றத்தில் நிம்மதியாகத் தூங்கிவிட்டு வந்தார். வீட்டு வாசலில் வக்கீல் போர்ட்டு தொங்கியது. 'யாராவது நம்மைப் பார்க்க மாட்டார்களா?' என்று அது ஏங்கியது. வக்கீல் தொழிலை விட்டு விட்டுப் பள்ளி ஒன்றில் ஆங்கில ஆசிரியராகப் பணி புரிவதென்று முடிவு செய்தார். ஆனால்,'பி.ஏ' இல்லையே! அங்கும் ஏமாற்றமே. சரி, இனி ராஜ்கோட்டுக்கே திரும்பிவிட வேண்டியது தான்.

ராஜ்கோட்டில் நான்கு வயது கரிலால் வளர்ந்து கொண்டிருந்தான். கஸ்தூரியின் வயிற்றில் மற்றொரு சிசு வளர்ந்து கொண்டிருந்தது. பொதுவாகப் குடும்பம் வளர்ந்து கொண்டிருந்தது. வருமானம் மட்டும் வளரவில்லை. லட்சுமிதாஸ் கவலைப்பட்டார்? தம்பி இப்படியோர் அதிர்ஷ்டக் கட்டையாக இருப்பான் என்று அவர் நினைக்கவேயில்லை.

தன்னாலான உதவியெல்லாம் செய்தார். தெரிந்தவர்களுக்கெல்லாம் அவரை அறிமுகப் படுத்தி வைத்தார். விண்ணப்பத்தாள் எழுதுவது, மனுத்தாள் எழுதுவது, மகஜர் தயாரிப்பது போன்ற சிறு சிறு வேலைகள் கிடைக்க வழி செய்தார். 'இத்துடன் வாய்தா வாங்குவது' போன்ற வழக்குகளும் வந்தன. மாதம் முன்னூறு ரூபாய்க்கு வழி செய்து கொண்டார் காந்தி.

ஆனால் அது போதுமா? மகன் திவானாக வேண்டும் என்று தாயார் நினைத்தாள். அண்ணனோ, தம்பி பெரிய நீதிபதியாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். அந்தக் காலத்தில் கத்தியவாரிலிருந்த சில்லறைச் சமஸ்தானங்களுக்கிடையே நிலவிய போட்டியும் பூசல்களும் காந்தியைக் கவலையில் ஆழ்த்தின. அந்தச் சூழ்நிலையில் திவானாகும் எண்ணத்தையே துறந்தார். 'இதென்னடா நம் கதி இப்படியாயிற்றே!' என்று ஒரு நாள் காந்தி சோர்ந்து உட்கார்ந்திருந்தபோதுதான் தென் ஆபிரிக்காவில் பெரும் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த முஸ்லிம் நண்பர் ஒருவர், தங்களுடைய வழக்கு ஒன்றில் உதவி புரிய காந்தியை அனுப்பும்படி லட்சுமிதாஸிடம் கேட்டுக் கொண்டார். குடும்பச் செலவுக்குப் போதிய பணம் கொடுப்பதாகவும் சொன்னார். லட்சுமிதாஸ் தம்பியின் முகத்தைப் பார்த்தார். அதில் நம்பிக்கை ஒளி பிறந்தது.

கஸ்தூரியின் மடியில் கைக் குழந்தை மணிலால், இமையைப் பாதி திறந்தும் பாதி மூடியும் மயக்க நிலையில் உறங்கிக் கொண்டிருந்தான். அவன் முகத்தின் அழகைப் பலகோணங்களிலிருந்து ரசிக்கத் துடிப்பதுபோல் ஈ ஒன்று அவனைச் சுற்றிச் சுற்றி பறந்து கொண்டிருந்தது. அதை விரட்டுவதாக நினைத்துக்கொண்டு அவள் தன் கையை வீசிக்கொண்டிருந்தாள். ஆனால் அவள் பார்வை முழுவதும் மூலையில் படுக்கை கட்டிக் கொண்டிருந்த கணவர் மீதே படிந்திருந்தது. அவள் சிந்தனையோ எங்கெல்லாமோ பறந்து கொண்டிருந்தது. மதலையின் முகத்தைப் பார்த்தாள். "சாது மாதிரி தூங்குவதைப் பார்! அண்ணனும் தம்பியும் சேர்ந்து சதி செய்தா என்னை அழவிடுகிறீர்கள்?... அவன் பிறந்தான். அப்பாவை இங்கிலாந்திற்கு விரட்டினான். நீ பிறந்தாய் அவரை வேறு எங்கோ கண்காணாத இடத்திற்கு ஓட்டுகிறாய். உங்களுக்கென்ன! அப்பனும் பிள்ளையும் குஷியாக இருக்கிறீர்கள். நானல்லவா நடுவில் சிக்கித் தவிக்க வேண்டியிருக்கிறது!" இப்படி அர்த்தமில்லாமல் ஓடிக்கொண்டிருந்த சிந்தனையைச் 'சடக்'கென்று இழுத்துக் கட்டிப் போட்டாள். கூடத்தில் விளையாடிக் கொண்டிருந்த மூத்த மகன் ஹரிலாலின் மீது அவள் கவனம் திரும்பியது.

"டேய் ஹரி! இங்கே வா, அப்பா ஊருக்குப் போகிறாராம்! உன்னைக் கூப்பிடுகிறார்!"

"போகட்டும்.. எனக்கு வேலை இருக்கு..."

"டேய் இங்கே வரப் போறயா, இல்லையா?"

"என்னம்மா..?"

"அப்பாவுக்கு ஒரு முத்தா கொடுடா...."

"போம்மா... அவரைக் கண்டால் எனக்குப் பிடிக்கலே.."

"சீ! ஏண்டா அப்படிச் சொல்றே! உன் மேலே அவர் எத்தனை ஆசையாயிருக்கிறார் தெரியுமா? பம்பாயிலேருந்து வர போது, உனக்குச் சட்டையெல்லாம் வாங்கி கொண்டு வந்தாரே!"

"பெரியப்பா கூடத்தான் வாங்கிக் கொடுக்கிறார். அப்பா அசடு அம்மா! உன்னை ஏன் சும்மா அழ விடறார்?

"நீ கூடத்தான் என்னை அழ விடறே! சாப்பிடுவதற்கும் தூங்குவதற்கும் என்ன பாடுபடுத்தறே?"

பரணீதரன்

"ஆமா! நான் குழந்தை. அழ விடலாம். அவர் பெரியவர் ஆச்சே அப்படிச் செய்யலாமா?"

தாய்க்கும் பிள்ளைக்குமிடையே நடந்த இந்த சுவாரஸ்யமான பேச்சை காந்தி ரசித்துக் கேட்டதைக் கஸ்தூரி கவனித்தாள்.

"நீங்கள் இப்படிக் கொஞ்சம் வாருங்கள். ஹரிலால் சொல்வதைக் கேட்டீர்களா? அவனிடம் அன்பா ரெண்டு வார்த்தை பேசுங்களேன். அவன் ஏங்கிப் போறான்" என்றாள்.

காந்தியோ அவள் பக்கம் திரும்பாமலே "ஆமாம், எல்லாம் நீ கொடுக்கிற இடம்தான்! பிள்ளைகளை கட்டுப்பாட்டுடன் வளர்க்க வேண்டும். வெள்ளைக் காரப் பசங்கள் இப்படியெல்லாம் அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசுமா?" என்று கேட்டார். வார்த்தைகளில் தான் கடுமை இருந்தது. தொண்டை தழுதழுத்தது.

"அட ராமா! ஏதோ குழந்தை இவ்வளவாவது பேசுகிறதே என்று சந்தோஷப்படாமல், அவனுக்குச் சரியா நீங்களும் எதிர்வாதம் செய்கிறீர்களே!"

காந்தி திரும்பினார். அவரையும் அறியாமல் அவர் கண்களிலிருந்து நீர் முத்துக்கள் உதிர்ந்திருந்தன. கஸ்தூரி பார்த்துவிடக் கூடாதே என்று கண்களைத் துடைத்துக் கொண்டார். ஆனால் அதைக் கஸ்தூரி கவனித்துவிட்டாள். ஊருக்குப் புறப்படும் வேளையில் அவர் மனம் நோகும்படி ஏதேதோ பேசிவிட்டோமோ என்று தன்னை நொந்து கொண்டாள்.

(தொடரும்)

## சிந்தனையாளரின் சுவையான அனுபவங்கள்

### கதாநாயகர்கள் - கதாநாயகிகள்

ஒரு தடவை கல்கி அவர்கள் சென்னை அரசினர் கல்லூரியில் சொற்பொழிவாற்றுவதற்காகச் சென்றிருந்தார்.

பேராசிரியர் ஒருவர் கல்கியை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் கீழ்க்கண்டவாறு பேசினார்.

கல்கி அவர்களை உங்களுக்கெல்லாம் தெரியும். அவரது நாவல்களைப் படிக்காதவர் யார்? கல்கி அவர்களுக்கு யோசனை ஒன்றுகூற விரும்புகிறேன். தமது கதைகளுக்குக் கதாநாயகர்களையும் கதாநாயகிகளையும் அவர் எங்கும் தேடிப் போக வேண்டாம். எங்கள் கல்லூரி வராந்தாக்களில் எண்ணற்ற கதாநாயகர்களையும் கதாநாயகிகளையும் (மாணவ, மாணவிகள்) காணலாம்.''

அடுத்து கல்கி அவர்கள் பேச எழுந்தார்கள். ''இந்துக் கல்லூரி வராந்தாக்களில் உலாவும் கதாநாயகர்களே, கதாநாயகிகளே।'' என்று அவர் பேச்சைத் தொடங்கினார்.

அவ்வளவுதான் கல்லூரியே இடிந்துவிழும் போல மாணவ மாணவிகளிடமிருந்து கைத்தட்டல் ஆரவாரம் எழுந்தது.

### கவிஞரின் சாதுரியம்

இரண்டாம் சார்ள்ஸ் மன்னர் தம்மை ஒரு பெரிய கவிஞராக எண்ணிக் கொண்டிருந்தார். தம் மனத்தில் தோன்றியதையெல்லாம் எழுதி, அற்புதமான கவிதையைத் தாம் எழுதிவிட்டதாகக் கூறிப் பலரிடம் காட்டித் தம் திறமையைத் தாமே வியந்து கொள்வார்.

ஒரு நாள் மன்னர், சிறந்த கவிஞர் ஒருவரைத் தம்மிடம் அழைத்திருந்தார். அவர் சிறந்த கவிஞர் மட்டுமல்ல, நேர்மையான மனிதருங்கூட, உண்மையென்று பட்டதை அப்படியே சொல்லி விடக் கூடியவர்.

மன்னர் அக்கவிஞரிடம் தாம் எழுதிய கவிதைகளைக் கொடுத்து அவற்றைக் குறித்துக் கவிஞரின் கருத்தை வினவினார்.

கவிஞர் மன்னரின் கவிதைகளைப் படித்தார். அத்தனையும் ஒன்றுமில்லாத சரக்கு என்பதும் பேத்தல் என்பதும் தெரிய வந்தது. அரசரிடம் தம் கருத்தை அப்படியே அறிவித்துவிட முடியுமா? அதற்காக அவர் பொய் சொல்லவும் விரும்பவில்லை.

என்ன சொல்வதெனச் சற்று நேரம்தான் சிந்தித்தார். உடனே 'பெருமைமிக்க மன்னர் அவர்கள் விரும்பினால் எந்தச் செயலைத்தான் திறமையாகச் செய்து முடிக்க முடியாது? தரக்குறைவான கவிதைகளை எழுத வேண்டுமென்று தீர்மானித்து அப்படியே எழுதியும் விட்டீர்களே!' என்றார்.

மன்னரின் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே!

# மௌனத்தின் தேடல்கள்

**சிந்தனை அலை!**

கட்டிய கணவனோ சுடுகாட்டில்
பெற்ற பிள்ளையோ வெளிநாட்டில்
சொந்த பந்தமோ தன்பாட்டில்
சிந்திக்கின்றேனே என்பாட்டில்

*சி. ஆரணி*

## எங்கே?

நாதியற்ற தாயே! - உன்
நன்றி கெட்ட பிள்ளைகள்
எங்கே? - உன்னை
நடுக் கடலில் துரும்பாக விட்டு
செல்லடியில் செத்து
விட்டார்களா? இல்லை
வெளிநாடுதான் சென்று
விட்டார்களா?

*தமிழ்ப்பித்தன்*
*வராத்துப்பளை.*

## தொண்ணூறு வயதினிலே....!

கண்ணிலே சோகம்!
மண்ணிலே பாரம்!
தொண்ணூறு வயதினிலே
எண்ணுவது யாதோ?
விண்ணிலே கலப்பதற்கு-
இன்னும்
விண்ணப்பம்
கிடைக்கவில்லையா?

*மதி*
*மிருசுவில்*

## அனுபவ பெட்டகம்!

ஆசையால் ஒருவர்த்தை
அன்புடன் பேச
பாசம் கட்டி வளர்த்த
பிள்ளை ஏதுமில்லாது
தனிமையில் இருந்து
சிந்தை கலங்கியிருந்தார்
அனுபவ பெட்டகமொன்று
அமைதியாய்!

*-ராதி-*

## போதுமையா!

"கைகட்டி காலின்னி
ஏகாந்தமாய்
கவலைகள் நெஞ்சை சுட
தவிக்கின்றேன்
இறைவா பட்டது போதுமையா
இந்தப் பாழுடல்
விழ்வதெப்போ."

*தி.சாந்தினி*
*திருநெல்வேலி மேற்கு*

## சுமை!

உறவுகள் உன்னை ஒதுக்கி
விட்டதனால்
உனக்கு இன்று இந்த நிலையா?
உடல் வீட்டு உயிர் போகும்
வேளையிலும்
உள்ளத்தில் இன்னும் சுமை
தானோ?

*தனு*
*கல்வியங்காடு*

## வேண்டுகிறாய்!

உறைவிடம் உடைந்து போக
உறவினரும் உனைவிட்டுப்
போக
இருவிழியிரும் வற்றிப் போக
பொய்யுடலை நீக்க
மெய்யிறையை,
வேண்டுகிறாய் போலும்!

*ச. முகுந்தன்,*
*இணுவில் கிழக்கு*

**ஏக்கப் பெருமூச்சு!**

மூத்தவனோ இலண்டனில்
நடுவிலானோ பிரான்சில்
இளையவனோ கனடாவில்
மூத்தவளோ சுவிஸில்
இளையவளோ நோர்வேயில்
கணவனோ மேலுலகில்
நானோ அகதி வாழ்வில்....!

*ம. நாகமுனி*

## புலம் பெயர மறுக்கிறாள்!

அகத்தினிலே பிள்ளைகளை
எண்ணி
முகத்தினிலே வாட்டங்
கொண்டு
செகத்தினிலே தனது
வீட்டினிலே
பிரியம் கொண்டு தானோ
பாட்டி புலம் பெயர
மறுக்கிறாள்.

*S.S. திரு*
*யா/தெ/ம/ம/வி*

## காத்திருப்பு...!

அன்பற்ற இவ்வுலகில்
அடவியின் மத்தியிலே
நடைதளர்ந்து, வலுவிழந்த
இந்த முதுமைப் பருவத்திலும்-
நீ
உற்றுநோக்கி காத்திருப்பது?...
கைவிட்டுச் சென்ற-உந்தன்
உதிரத்து உறவுகளையா-
அன்றேல்
உன்னதமான
சமாதானத்தையா?

*ஜெ. கஜேந்தினி*
*யாழ்ப்பாணம்*

**எதைத் தேடுகிறாய்!**

ஏ! பாட்டி
எதைத் தேடுகிறாய்
இப்பூவுலகில் கந்தல் உடையுடன்
மனிதத்தையா
அது எப்போதே அழிந்து விட்டதே

*ம. அழகரசன்*
*யாழ் இந்துக் கல்லூரி*

## ஆலமரம்!

நீ ஆலமரமாகி எல்லோருக்கும்
நிழல் கொடுத்தாய் உனைத்தாங்க
ஒரு விழுது கூடவா இல்லை.

*கு. செந்தினி*
*சிறுப்பிட்டி*

## புரிந்துணர்வு!

புலப்பெயர்வின் அவலத்தில்
பிரிந்து சென்ற அருமை மகனே
புரிந்துணர்வின் பின் தன்னும்
எனைப் பார்க்க வரமாட்டாயா?

*கு. பாலா*
*இணுவை*

## தளர்வுற்றுப் போயினையோ!

பாச உறவுகளைப் பாரினிலே
இழந்து,
பாவப் போரின் பிடியினிலே
சிக்கி,
தள்ளாத வயதினிலே,
தாமரை போன்ற உன்முகமும்
தளர்வுற்றுப் போயினதோ?

*செ. செல்வநிகேதன்*
*யாழ். இந்துக் கல்லூரி*

## என்றும் அழியா உறவு!

இன்று உறவு நாளை பிரிவு
மனிதன் வாழும் ஏட்டிலே
என்றும் அழியா உறவு உண்டு
இறைவன் வாழும் வீட்டிலே.

*ம. கொன்சன்*
*உரும்பிராய்*

**கலங்காதே!**

அன்னையே
கைகட்டி ஏன்
கலங்குகிறாய்
காலனின் வருகையை எண்ணியா
கலங்காதே இவ்வுலகைவிட
அவ்வுலகம் மேலானது காரணம்
அங்கு மனிதர்கள் இல்லை.

*அன்பு*
*பொலிகை*



## சோகம்!

காடு இருக்குது
காட்டில் விறகிருக்குது
உடம்பிலே உயிர்
இருக்கின்றது.
முகத்திலே சோகம் இருக்குது
ஆனால் உண்பதற்கு
உணவில்லை.

*கவிதைக் கயன்*

## யார் சொந்தம்!

உறவுகளைத் தொலைத்து
வயோதிபத்தின் தள்ளாத
நிலையில்
இருக்கும் இந்த தாய்க்கு
ஓலைகளும் சருகுகளும்
தான் சொந்தமா?

*ப.சுரேஜினி*
*கோண்டாவில் மேற்கு*

## முதுமை!

முதுமை என்னும் பருவம்
உன்னை அணுகியதால்
சொந்தம் என்னும் உறவு
உன்னை தவிக்கவிட்டு
விலகியதோ!

*சூர்யா.P*
*இணுவில்*

## எதுவுமேயில்லை!

உணவு மட்டுமல்ல
உறவுகளுமில்லை!
தண்ணீர் மட்டுமல்ல
தங்குமிடமுமில்லை!
உண்டென்று சொல்வதற்கு
ஊசலாடும் உயிர் தானுண்டு.

*இ. சசிகுமார்*
*வேலணையூர்*

## தனிமரம்!

குன்றான என் வீடு
குப்பையாய் இன்று
மாறியதோ!
குணமான என் குடும்பம்
குண்டு வீச்சில்
போயிற்றோ!
குதூகலமிழந்து
குவலயத்தில்
நானும் பட்ட
தனிமரமாய்...

*சு. பர்ணா*
*கரணவாய் மத்தி*

## தாயே!

உன் இரத்தத்தை
பாலாக்கி புகட்டிய பாலகரே
உன் பாரம் என நினைத்து
பாதையோர குப்பையுடன்
போட்டு விட்டனரோ
உன்னை!

*கு. ராஜ்குமார்*
*வண்ணார்பண்ணை*

## ஏக்கம்!

கால் பட்ட பூமி
கண் விழிக்குதில்லை
நான் பெற்ற பிள்ளை
கனாவில் இல்லை
பாழ்பட்ட சீவன்
பறிபோகுதில்லை
நாள்(ப்) பட்ட பிணமாய்
நான் இன்னும் எத்தனை
நாள்.

*லட்சுமி புத்திரன்*

## ஏன்!

விழிகளே ஏக்கமதில்
மனதோ யோசனையில்
எண்ணமோ கற்பனையில்
ஓ... பாட்டியே
உனக்கேன் இந்நிலை?

*சாம்பவி*
*சங்கத்தானை*

## நிரந்தரங்கள்!

பத்து மாதம் சுமந்து
பவ்வியமாய் வளர்த்தெடுத்த
மகவுகளே என்னை
அநாதையாக்கிய போதும்
பிச்சைப் பாத்திரமும்
கந்தலுடையும் – என்றும்
என்னுடன் நிரந்தரமாகவே!

*யோ. பிரஷாந்தி*
*நல்லூர்*

**கவிஞர்களே!**

யுத்த உலகினிலே
மகனுக்கு கொள்ளி வைத்தேன்
பேரனுக்கு கொள்ளி வைத்தேன்
பூட்டனுக்கு கொள்ளி வைத்தேன்
யார் வைப்பார் எனக்கு
கூறுங்கள் கவிஞர்களே!

*ஜெ. சுதி*
*கா. சாவகச்சேரி இந்துக்கல்லூரி*

## இழந்தும் இழக்காமல்!

உறவுகளைப் பிரிந்து
உடைமைகளை இழந்து
உருக்குலைத்து போனாலும்
உரிமையுடன் நீ இருப்பது
உன் மண்ணில் தான்.

*வசந்தா*
*புலோலி மேற்கு*

## கவலைப்படாதே!

கட்டிய கணவனின்றி
பெற்ற பிள்ளைகளுமின்றி
குடியிருக்க வீடுமின்றி
கூடிவாழ உறவுமின்றி
வானத்தில் தனிநிலவாய்
வாடியிருக்கும் பாட்டி உனக்கு
கடவுள் துணையிருப்பான்
கவலைப்படாதே.

*சா. மேரிசாளினி*
*யா. கன்னியர் மடம் மகா வித்தியாலயம்*

## குறியீடு!

உயர்ந்து வரும் விலைவாசியையும்
உதிரம் குடிக்கும் போரையும்
பறைசாற்ற முடியாது
உன்னைப் போல் எவராலும்!

*ஷோபனா.இ*
*வேலணை*

## காட்சி!

கண்களில் சோகம்
கரைபடிந்த கந்தல் உடை
சிக்குண்ட நரை கூந்தல்
பின்னிய கைகள்
இடம் மாறிய கால்களின்
கோலம்
தடம் புரண்டு போன
உன் வாழ்க்கையைக் காட்டுகிறது.

*ராகுல்*

## மௌனத்தின் தேடல்கள் – 09



அன்பின் வாசகர்களே, உங்கள் எண்ணத்தில் தோன்றும் உன்னத வெளிப்பாடுகளை மிகச்சிறிய கவிதைகளாக்கி தாபல் அட்டையில் சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

முடிவுத்திகதி :– 28.04.2002

அனுப்ப வேண்டிய முகவரி:– மௌனத்தின் தேடல்கள் – 09
சங்குநாதம்,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# கவிதைக் கலசம்




## ஓங்கட்டும் கரங்கள்!

விடிவெள்ளி வந்தது என
விரிந்த செவ்வாய்கள்
மனதில் பதிந்த சுவடுகளை
மனதார கூற ஓங்கட்டும் கரங்கள்

சந்திக்குச் சந்தி நின்று
சண்டித்தனம் என சேஷ்டைகள் செய்த
சண்டாளர்களின் அடாவடித்தனம் குறைந்தது என
கூறி மகிழ ஓங்கட்டும் கரங்கள்

மாலையானதும் வீதிகளில் செல்ல
மாது கொண்ட அச்சம் ஒழிந்தது என
மனமுவந்து கொண்டாடி மகிழ
மகிழ்வுடன் ஓங்கட்டும் கரங்கள்.

செ.குகன்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## சந்திப்பு!

மீண்டும், மீண்டும் உனது கண்களும்
எனது கண்களும் சந்திக்கின்றன
சந்தித்த மறுகணமே உனது கண்கள்
திசை மாறிப் போகின்றன
அது என்மேல் கொண்ட வெட்கமா?
அல்லது என்மேல் கொண்ட வெறுப்பா?

-ராகுல்-

## வேலையற்ற பட்டதாரிகள்....!

பட்டம் பெற்றவுடன் பதவியும் பெற்றிடலாம்
என்றெண்ணி பல்கலையில் புகுந்தது ஓர்காலம்
புது முகங்கள் வருகுதென்று, பூரிப்புடன்,
வந்ததிலே ஒன்றிரண்டை வம்புக்கு இழுத்தது ஓர்காலம்

பாட்டியிலே போட்டி போட்டுக் கொண்டு
'பாட்டில்' அடித்ததும் பாட்டுப் படித்ததும் ஓர்காலம்.
மாலை மயங்கையிலே மணிபார்த்து ஓடிவந்து
சாலை வரும் குமரிகளை சைட் அடித்ததும் ஓர்காலம்

எக்சாம் வருகுதென்று எவர்கண்ணிலும் படாது
பக்குவமாய் பாடம் படித்ததும்
பட்டம் அளிப்பென்று பகட்டாக கோர்ட் அணிந்து
பவனி வந்ததும் படம் எடுத்ததும் ஓர்காலம்

இவை எல்லாம் நம் இறந்த காலம் -ஆனால் இன்று
வேலை அற்றபட்டதாரிகளின் திண்டாட்டம்
அதனால் இன்று வீதியில் இறங்கிப் போராட்டம்
இதுதான் நமது நிகழ்காலம்.


தபால்காரன்,
உடுப்பிட்டி.

## என்னைக் கலைஞன் ஆக்கியவள்!

என் மூச்சாய் என் பேச்சாய்
என்னுள் என்றும் உறவாடும்
என் காதலியே-உன்னை
நேசிக்கத் தொடங்கிய
நாட்களில் தான் என்னை
நானும் அறியாத கவிஞனானேன்
உன் அழகு மொழிகளை
உச்சரிக்கத் தொடங்கிய போதுதான்
சின்னஞ் சிறிய அறிஞனானேன்
உன் அழகு மேனியை
என் கரங்கள் தொடுவதாக
கனவுகண்ட போது தான்
என்னையறியாமலே
யானொரு ஓவியனானேன்
உன் எண்ணங்களின் அலைகளில்
துள்ளிய பொன் வார்த்தை மீன்களைப்
பிடிக்க நினைத்த போதுதான்
நான் வலைஞனானேன்
தமிழ்ப் பெண்ணே உன்
ஆடற் கலையை நினைத்த போதே
தலைசிறந்த கலைஞனானேன்.

S. மோகன்
கோப்பாய்

## தமிழன் எங்கே செல்கிறான்?





திருமண எழுத்தென்று
அழைப்பிதழ் தந்தார்கள்!
அழைப்பிதழ்களில் ஆங்கிலமே
முதலிடத்தைப் பெற்றதன்றோ!
எழுத்து நடந்தஇடம்
எழிலாக அலங்கரித்து
'வெல் கம்' , என்றெழுதி
விட்டொழித்தார் செந்தமிழை!
அங்கே பார்க்கையிலே
அழகான மணமகனும்
ஆங்கில உடைஉடுத்து
அருந்தமிழன் அதை மறந்தான்!
எழுத்து எழுதியபின்
இட்டார் கையெழுத்தை
எம் இனிய தமிழில் அல்ல
இங்கிலீசு மொழியிலேதான்!
கையெழுத்துக் குதவாத
கவின் தமிழாய்ப் போச்சுதது!
தமிழனெனக் காட்டிடவும்
மனமில்லாத் தமிழனிவன்!
எங்கே செல்கின்றான்?
ஏன் தமிழை மறக்கின்றான்?

ஏ. சிவமூர்த்தி
இணுவில்

## காதலின் தவிப்பு!



உனக்கு பிடித்த
நானும்
எனக்கு பிடித்த
நீயும்
நமக்கு பிடித்த
காதலும்
யாருக்கும் பிடிக்காததால்
உன்னைப் பிரிந்து
நானும்
என்னைப் பிரிந்து
நீயும்
நம்மைப் பிரிந்து
காதலும் தவிக்கிறது!



இணுவை
எஸ்.கே

## உறவுகள்!

இதயத்துப் பதிவேட்டின்
ஒவ்வொரு பக்கங்களிலும்
ஒவ்வொரு இனியமுகங்கள்!
பக்கமும் கண்களும்
கலக்கும் பொழுதுகள்.....
வசந்தகாலத் தேன் நிலவுகளாய்.....
பருவத்திற்கேற்ற பழக்கங்கள்
பழங்கதைகள் பேசி பசுமை விரிக்கும்!
ஆனாலும்.........
சிந்தனைப் பறவை சிறகடிக்கும் வேளை...
வெறுமையாக விரியும்
என் மனது!
ஏன்? புரியவில்லை!

சி. வாணி.

## இன்றைய காதல்!

கண்ணுக்கு அழகாய்
கண்டதும் மோகம் - பின்
கண்களால் யுத்தம்
காமமும் மெருகேற
காட்டுவார் சைகை
காடோ......கடற்கரையோ
கண்ணே வந்திடு - எம்
காதலை வாழவை

காதல் மாய்ந்திடுமோ...
ஏக்கம் பிறக்கையிலே
ஏகுவார் உரைத்தவிடம்
எல்லை கடக்கையிலே -
மெலிதாய்
ஒட்டியிருப்பு.....பின்
கட்டியணைப்பு

தொடர்ந்து.....
சிற்சில குறும்புகள்
சிநேகப் போர்வைகள்
சினப்பான செய்கைகள்
உரைக்கிறார் அதற்கு
உண்மைக் காதலாம்....!

சி.சிறிதர்,
திக்கம்.

## தேடல்கள்!



தேடல்கள் மலிந்ததேசம
இது...!
அப்பப்பாஎத்தனை தேடல்கள்?

தொலைத்துவிட்டபுன்னகையின்
பறிகொடுத்த நிம்மதியின் தேடல்
இடிந்துவிட்ட இருப்பிடத்தின்
தேடல்
மூடிய விழிக்குள் தூக்கத்தின்
தேடல்

கணவனைப் பிரிந்த
மனைவியின் தேடல்
தாயினைத் தொலைத்த
குழந்தையின் தேடல்
வாழ்க்கையை ஓட்ட
வழிகளின் தேடல்
வயிற்றுப் பசிக்கு உணவின்
தேடல்

மறைந்துபோன முகவரியின்
தேடல்
எங்கும் தேடல் எதிலும் தேடல்

ஷோபனா. ச
வேலணை

# துன்பத்தின் சுமைகளோடு



அன்றிரவு முழுக்க சோபனாவால் தூங்கமுடிய வில்லை.விடிந்தால் சேகர் போய் விடுவான். என்ற ஆதங்கம் அவளுக்கு. திருமணமாகி ஒரு கிழமை கூட ஆகவில்லை. தன் கணவன் தன்னை விட்டுச் செல்வதை நினைக்கும்போது அவளால் எப்படித் தூங்க முடியும். தூக்கமின்றித் தவித்த கண்களிற்கு ஆறுதல் அளிக்கும் வகையில் வெளியே வந்தவள் முற்றத்தில் உட்கார்ந்து கொண்டு இருண்டு கிடந்த வானத்தை வெறித்துப் பார்த்தபடி மௌனமாகக் கண்ணீர் வடித்தாள். அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத சில நிகழ்வுகளைக் கற்பனையில் நினைத்தபோது சோபனாவிற்கு ஓவெனக் கத்தவேண்டும் போல் இருந்தது.

மறுநாள் நேரத்துடனேயே எழும்பிவிட்ட சேகர் எதையுமே சிந்திக்காதவனாய் யாரைப் பற்றியும் கவலைப்படாதவனாய் தன் பயண நினைவுடன் அவசர அவசரமாகக் குளித்துவிட்டு சாப்பிடவந்தபோது அவனருகில் அமர்ந்து அன்போடும் ஆதரவோடும் உணவைப் பரிமாறிக் கொண்டு "என்னங்க..... என்றவள் மீதியை எப்படிச் சொல்வது எனத் தெரியாமல் திண்டாடினாள். "என்ன சோபா? நீ ஒண்டுக்கும் யோசிக்காதை. கொஞ்ச நாளைக்கு இப்படித் தான் இருக்கும். பிறகு எல்லாம் சரியாகிவிடும். நான் போய் எப்படியும் ஆறுமாதத்தில் உன்னைக் கூப்பிடுவன். நீ என்னைச் சந்தோஷமா வழியனுப்பு" என்று அவள் கன்னத்தில்செல்லமாகக் கிள்ளி அவளை சமாதானப்படுத்தினான். சோபனாவால் எதுவும் கூற முடியவில்லை.அன்று காலையே சேகர் எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு விட்டான்.

ஏழாலை என்ற அழகிய கிராமத்தில் கந்தையாவிற்கும் கனகத்திற்கும் மூத்த பிள்ளையாகப் பிறந்தவள் சோபனா. சோபனாவிற்குப் பின் நான்கு பெண் பிள்ளைகள் இருந்தார்கள். சோபனா க.பொ.த உயர்தரம் வரையும் படித்தவள். ஐந்து பிள்ளைகளையும் வளர்ப்பதற்கு கந்தையா மிகவும் கஸ்ரப்பட்டார். அவர் ஒரு கூலித் தொழிலாளியாக இருந்தாலும் கூட அக்கிராமத்திலே அவருக்கு "கஸ்ரத்திலும் கௌரவமாக வாழ்பவன்"என்ற நற்பெயர் கிடைத்திருந்தது. கந்தையாவைப் போலவே அவனுடைய பிள்ளைகளும் வாழ்ந்தனர். குறிப்பாக அழகிலும் அடக்கத்திலும் சோபனாவிற்கு நிகராக அக்கிராமத்திலேயே யாரும் இருக்கவில்லை.

அன்றொருநாள் அக்கிராமத்துக் கோயிலில் நடைபெற்ற திருவிழாவிற்கு சோபனா தன் தங்கையுடன் சென்றிருந்தார். பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் திருவிழா பார்க்க வந்திருந்தனர். அந்தளவிற்கு அங்கே சனக் கூட்டம் நிறைந்திருந்தபோதும் அக்கூட்டத்தினுள்ளே இருந்து அழகுதேவதையாக வந்திருந்த சோபனாவை இரண்டு கண்கள் பார்த்துக்கொண்டேயிருந்தன. ஆனால் சோபனா அதைப் பொருட்படுத்தவில்லை. திருவிழா முடிந்து வீட்டிற்குச் சென்று கொண்டிருக்கையில் "அக்கா யாரோ உங்களைக் கூப்பிடீனம்" என்ற தங்கையின் குரல் கேட்டுத் திரும்பினாள். கோயிலில் அவளைப் பார்த்துக் கொண்டிருந்த அதே இளைஞன் அவளருகே வந்துவிட்டான். ஹலோ... உங்கட பேரென்ன? என்று கேட்டவனை கோபத்துடன் பார்த்து விட்டு விறுக்கென்று சென்று விட்டாள் சோபனா.

வீட்டிற்குச் சென்றவள் இதைப் பற்றி எதுவுமே சொல்லவில்லை. ஆனாலும் அன்று முழுக்க அவளுடைய மனதில் அந்த இளைஞனின் ஞாபகம் தான். மறு நாள் வீட்டு வாசலில் யாரோ பெல்லடிக்கும் சத்தம் கேட்டு விரைந்து சென்றாள் சோபனா. வாசலில் அவளை முதல் நாள் கோயிலில் சந்தித்த அதே இளைஞன் மெல்லிய புன்னகையுடன் நின்றிருந்தான். படாரெனப் படலையைச் சாத்தி விட்டு போனவேகத்திலேயே திரும்பி வந்து விட்டாள். ஆனாலும் அவள் அதைப் பெரிது படுத்தாமல் மீண்டும் பெல்லை அடிக்கவும் சோபனாவின் தாய் கனகம் படலையைத் திறக்கவும் சரியாக இருந்தது.

## சிறுகதை

"வாரும் தம்பி.... என்ன வேணும்? யாரையாவது தேடுகிறீரோ?" எனக் கேட்டவளை "உங்களோட கொஞ்சம் கதைக்க வேணும்" என்றவனைப் புரியாதவள் போல பார்த்தவள் அவனை உள்ளே அழைத்துச் சென்று சாய்மானக் கதிரையில் உட்காரவைத்தாள். அந்த நேரம் கந்தையா இல்லாததால் "இருங்கோ தம்பி இவர் கடைக்குப் போனவர் இப்ப வந்திடுவார்." என்று சொல்லி விட்டு அடுக்களைக்குள் சென்று விட்டாள். கனகம் தேநீருடன் வரவும், கந்தையா கடையினால் வரவும் சரியாக இருந்தது. "இஞ்சேருங்கோ உங்களைத் தான், யாரோ தம்பி உங்களோட ஏதோ கதைக்க வேணுமாம்" என்று கனகம் சொல்லவே கந்தையா திண்ணையில் வந்து "அ..ப்..பா..டா என்ன.. வெய்யில்" என்றவாறு அமர்ந்து கொண்டார்.

கந்தையா சிறிது நேரம் வந்தவனை உற்று நோக்கி விட்டு "எட தம்பி நீ குரும்பசிட்டிப் பொன்னையரின்ற மோன் எல்லே என்ன கனகாலத்துக்குப் பிறகு இஞ்சாலப் பக்கம்" என்றவர் சிறிது இடைவெளியின் பின் மீண்டும் "நீ பள்ளியில படிச்ச நேரத்தில பள்ளிக் கூடப் பொடியளோட சேர்ந்து செய்த அட்டகாசம் கொஞ்சமே. என்ர தோட்டத்தில ஒரு மிளகாய்ப் பிஞ்சக் கூட விடமாட்டாங்களே. கண்டையே வேரோட பிடுங்கிவிடுவாங்கள்" எனப் பள்ளிக்காலத்தில் சேகர் செய்த குழப்படிகளை கந்தையா கூறிய போது வெட்கத்தினால் தலையைக் கவிழ்ந்து கொண்டான். ஒரு புன்சிரிப்புடன் "சரியடா தம்பி என்ன விசயமாய் இஞ்ச வந்தனீ..... எனக் கந்தையா இழுத்த போது தான் வந்த விடயத்தை மிகவும் சாதுர்யமாக வெளிப்படுத்தத் தொடங்கினான் சேகர். "ஐயா.... நான் உங்கட மகள் சோபனாவை விரும்புறன்." என்றவன் மிகவும் பணிவாக "நான் முந்தி மாதிரி இப்ப குழப்படியில்லை. கனடாவில நிரந்தரமா வேலை கிடைச்சிற்று. இப்ப வீட்டுக்காரரைப் பாத்திட்டுப் போகலாமெண்டு தான் வந்தனான். அதோட என்ர கல்யாண விசயமாயும்..... என்றவன் "எனக்கு உங்கட மகளச் செய்து தந்தா நான் கண்கலங்காம வைச்சுப்பாப்பன்" இதுக்குமேலேயும்ஏதும் தேவைப் பட்டா அல்லது உங்களிற்கு சம்மதம் எண்டா எங்கட வீட்டுக்கு வந்து கதைக்கலாம்" என்று சொல்லி விட்டு விடை பெற்றுச் சென்று விட்டான்.

சேகரின் குடும்பம் மிகவும் வசதியான குடும்பம். குரும்பசிட்டியில் சொந்த வீடு, காணிகள் என ஏகப்பட்ட சொத்துக்கள். சேகரும் இரண்டு தம்பிமாருமே பிள்ளைகள் சேகர் சிறுவயதில் சரியான குழப்படி என்பதால் படிப்பையும் 'இடைநிறுத்தி 14 வயதில் கனடாவிற்குச் சென்றவன். 14 வருடங்களின் பின்னர் பெற்றோரின் வற்புறுத்தலில் தன் திருமணத்திற்காக தன்னூருக்கு வந்திருக்கிறான். நல்ல கட்டுமஸ்தான உடல்வாகைகள் கொண்டிருந்த சேகரை ஒரு ஆணழகன் என்று கூடச் சொல்லி விடலாம்.

வெளிநாடு என்றவுடன் சோபனாவிற்குச் சற்றும் விருப்பமில்லை. இருந்தாலும் பெற்றோர் எதைச் சொல்கிறார்களோ அதையே தான் செய்வதாகத் தீர்மானித்தாள். இதை விட வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு ஏற்ற சீதனமும் பெற்றோரிடம் இருக்கவில்லை. ஆனால் தாய் கனகமோ சேகர் போய் மறுநிமிடமே "இஞ்சேயப்பா பெடியனைப் பாத்தா நல்ல பெடியன் போல இருக்கு. நல்ல வசதியான குடும்பம் போல தெரியுது. கனடாவாமெல்லே!" எனக் கண்களை அகல விரித்துக் கொண்டாள். கந்தையா சற்று அமைதியாக "இஞ்சபார் கனகம் நீ நினைக்கிறது போல இல்ல. வெளிநாட்டு மாப்பிள்ளை எண்டாச் சும்மாவே. இனி இந்தக் காலத்தில பெடியன் சொல்லுறதை நம்பேலுமே. நாலுபேரிட்ட விசாரிக்க வேணாமே. சரி அப்படியெண்டாலும் எவ்வளவு சீதனம் கேப்பாங்கள்........" என்று நீட்டிக் கொண்டே போனார் கந்தையா. அதற்கு கனகமோ நீங்க இப்பயிருந்து கற்பனை பண்ணாம பெடியன்ர வீட்ட போய் ஒருக்காக் கதைச்சுப் பாருங்கோவன். என்று ஒரேயடியாகக் கூறிவிட்டாள்.

கந்தையா சேகரின் வீட்டை ஒருவாறு கண்டு பிடித்துச் சென்ற போதுசேகரின் பெற்றோரிடமிருந்து அமோகமான வரவேற்பிருந்தது. கந்தையா சேகரினதும் சோபனாவினதும் திருமண விடயம் பற்றிக் கதைத்த போது சேகரின் அப்பா பொன்னையா "என்ர மகனுக்கு உங்கட மகளப் பிடிச்சுப் போட்டுதாம் அவன் செய்தா உங்கட மகளத்தான் செய்வன். இல்லையெண்டாத் திரும்பிப் போறன் எண்டு ஒற்றக்கால்ல நிக்கிறான். அவனும் கனடாவிலயிருந்து பதினாலு வரியமாக் கஸ்ரப்பட்டுப்போட்டு வந்திருக்கிறான். அதால ஏதோ அவன்ர விருப்பப்படியே செய்யட்டும்." என்றவரை நிமிர்ந்து பார்த்தார் கந்தையா. உடனேயே சேகரின் அம்மா "நீங்கள் சீதனம் எண்டு ஒண்டும் தர வேணாம். சந்தோசமா உங்கட பிள்ளைக் கெண்டு இரண்டு லட்சத்தக் குடுங்கோவன். மற்றது நகநட்டுக்கள் எண்டு பத்துப்பவுணாவது வேணாமே இதவிட நாங்க ஒண்டும் பெரிசா எதிர்பாக்கேல்ல" என்று கூறியதைக் கேட்ட போது கந்தையாவிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மௌனமாக இருந்து விட்டு விடை பெற்றார் கந்தையா.

மறு நாள் இது பற்றி கந்தையா பக்கத்து வீட்டுப் பரமசாமியிடம் கேட்ட போது "இஞ்சபார் கந்தையா இது வலிய வந்த சம்பந்தம் அதுவும் கனடா மாப்பிள்ளை. இப்படி இனி வராது. நான் வேணுமெண்டா கொஞ்சக் காசு வட்டிக்கெடுத்துத்தாறன். மாறிச்சாறியெண்டாலும்செய்துவை" என்று கூறி விட்டார். இது பற்றி சோபனாவிடம் கேட்டபோது "நீங்க சரியெண்டா எனக்கும் சரியப்பா" என்று அவளும் கூறிவிட்டாள்.

கந்தையா ஊரெல்லாம் கடன்பட்டு தானிருந்த வீட்டையும் விற்று ஒருவாறு 3 இலட்சம் சேர்த்து விட்டார். ஒருவாறு சேகருக்கும் சோபனாவிற்கும் திருமணம் நடந்தது. திருமணம் நடந்து ஒரு கிழமை கூட ஆகவில்லை. சேகர் சோபனாவை விட்டு விட்டு கனடாவிற்குச் சென்று விட்டான்.

சேகர் போய் 3 மாதங்களாகி விட்டன. அவனிடம் இருந்து ஒரே ஒரு கடிதம் வந்தது. கடிதம் கண்ட சோபனாவிற்கு மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. இரவிரவாகக் கடிதம் எழுதி மறுநாளே போட்டுவிட்டாள். ஆனால் அதன் பின் அவளிற்கு ஏமாற்றமே பதிலாக அமையுமென அவள் எதிர்பார்க்கவில்லை.

சேகர் போய் ஒரு வருடங்களும் ஆகிவிட்டன. சோபனா ஒரு குழந்தைக்கும் தாயாகி விட்டாள். ஆனால் சேகரைப் பற்றி எதுவும் தெரியாமல் யோசித்துக் கொண்டேயிருந்தாள். முன் வீட்டிற்குப் புதிதாகக் குடிவந்த முகுந்தாக்காவின் கணவர் கனடாவில் இருப்பதை அறிந்து அவரிடம் இது பற்றி தொலைபேசியினூடாக விசாரித்த போது மறைந்திருந்த உண்மைகள் பல வெளிவந்தன. சேகர் முதலிலேயே திருமணமாகி இரண்டு பிள்ளைகளும் இருக்கிறார்கள். பிறகும் ஒரு திருமணம்செய்திருக்கிறான் என்றும், தான் வேலை செய்யும் கொம்பனியிலேயே சேகரும் வேலை செய்வதாகக் கூறிய போது சோபனா செய்வதறியாது திகைத்தாள்.

ஜீ. சுபத்திரா

சேகரின் பெற்றோரிடம் இது பற்றிக் கேட்ட போது அவர்கள் மௌனமாக நின்றார்கள். தன் தலைவிதியை நொந்தவராக வீடு வந்த கந்தையா கடன் கொடுத்தவர்கள் சூழ்ந்து கொண்டவர்கள். ஒருவாறு கடன்காரரிடம் தவணை சொல்லி தப்பித்து உள்ளே வந்தவர் மேலும் நடக்க முடியாதவராக மயக்கமடைந்துவிழுந்து விட்டார். அன்று விழுந்த கந்தையா திரும்பி எழும்பவேயில்லை.

கந்தையா இறந்து மூன்று நாட்களாகி விட்டன. கனகம் செய்வதறியாது திகைத்து நின்றாள். தன் 4 பெண் பிள்ளைகளையும் எப்படி வளர்ப்பது எனத் தெரியாமல் முழித்த வேளையில் சோபனா ஒரு மூலையில் கண்ணீரும் கம்பலையுமாக குழந்தையுடன் இருப்பதைப் பார்த்த போது அவளின் பெற்ற வயிறு பற்றி எரிந்தது. கனகம் மௌனமாக வெளியே வந்து வானத்தை அண்ணாந்தபடி அப்படியே நிலத்தில் குந்தி விட்டாள்.

சோபனாவின் கடைசித் தங்கை தீபா சோபனாவின் பக்கத்தே சென்று அக்கா இனிப் பழசை நினைச்சு மனதைக் குழப்பாம நடக்கப் போறதப் பற்றி யோசியுங்கோ. நீங்க அவர மறந்திற்று பிள்ளைய வளர்க்கிற வழியைப் பாருங்கோ" என்று கூறிவிட்டு வெளியே. சென்று விட்டாள்.

ஆனாலும் சோபனாவால் சேகர் அப்படிச் செய்திருப்பான் என நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. அவன் என்றோ ஒரு நாள் தனக்காக வருவான் என்ற நம்பிக்கையில் காத்திருக்கின்றாள்.

(முற்றும்)

## ஜோக்ஸ்

கணவன்:- "இது என்ன, காப்பியா....... கழுநீரா...........?"

மனைவி:- "இன்னொரு தடவை சொல்லுங்க.......!"

கணவன்:- "எத்தனை தரம் வேண்டுமானாலும் சொல்லுவேன்.... இது காப்பி அல்ல, கழுநீர் கழுநீர் என்று!"

மனைவி:- "இப்பத்தான் என் நெஞ்சு குளிர்ந்தது...... இது நான் போட்டதில்லே......... உங்கம்மா போட்டது!"

மனைவி:- என்னங்க நேற்று நான் போட்டியில பேய்க்கு வேஷம் போட்டு மூன்றாம் இடம் பெற்றிருக்கேன்.

கணவன்:- ஏண்டி வேஷம், கீஷம் எல்லாம் போட்டு நேரத்த வீணாக்கிற. நீ வேஷம் போடாம போயிருந்தா முதலாம் இடம் பெற்றிருப்பியே.

நிரோஜிகன்




# கவலையின்றி வாழ...



எடுத்ததற்கெல்லாம் கவலைப்படுவதால் மன நோய் உண்டாகும் என்று வைத்தியர்கள் கூறுகிறார்கள். சிலர் சின்னச்சின்ன விடயங்களுக்கெல்லாம் பெரும் கவலை கொண்டு காலத்தையும்,நேரத்தையும் வீணாக்கிக் கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் காலப் போக்கில் வாழ்க்கையில் பற்றில்லாதவர்களாகவும், தன்னம்பிக்கையில்லாதவர்களாகவும் மாற வேண்டிய நிலைக்கு உள்ளாவார்கள். மனதில் திடமான நம்பிக்கை இல்லாததே கவலைகள் உண்டாகக் காரணமாக அமைகின்றது. சிலர் தோல்விகளைச் சந்திக்கும் போது மனக்கவலை அடைவர். தொடர் கவலை என்பது தேக ஆரோக்கியத்தைக் கெடுத்து, விரைவில் மரணத்திற்கு நம்மை இட்டுச் சென்றுவிடும். எனவே எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் திடமான நம்பிக்கை கொண்டு அவற்றை எதிர்கொண்டால் கவலை என்பதே தோன்றாது. செயல்களில் தைரியமும், மனதில் துணிவும் தான் கவலைகளைப் போக்க சிறந்தவழி என்பது உளவியல் நிபுணர்களின் கருத்து.

விஜி

# கட்டான உடல் அழகை எப்படிப் பெறுவது?




கட்டான உடல் அழகைப் பெற வேண்டும் என்பது ஒவ்வொரு மனிதனதும் ஆசையாக இருக்கிறது. ஆசைப் பட்டால் மட்டும் போதுமா. அதற்கு சில கட்டுப்பாடுகளும் தேவைப்படுகின்றன. உடலில் அதிகப்படியான சதைகள் குறைந்தால். உடல் இலேசாக இருப்பதனை உணரலாம். அப்படியிருந்தால் மனிதர்கள் ஆரோக்கியமாகவும், உற்சாகமாகவும் தங்கள் பணிகளை ஆற்ற முடியும்.

இலையுடன் கூடிய பச்சைக்காய்கறிகள், காய்கறிசூப், பழங்கள், மோர், வைத்தியரின் ஆலோசனைப் படி மருந்து உட்கொள்ளுதல் இவற்றின் மூலம் ஆரோக்கியத்தைப் பெறலாம். சரியான உணவுப் பழக்கங்களின் மூலம் நீங்களும் ஆராக்கியமாக வாழுங்கள்.

எல். ஹேமா.

# கண்ணைக் காக்கும் கரட்





தெளிவான பார்வைக்கு கரட் உதவுகின்றது. கண்களில் ஏற்படுகின்ற பலவகையான நோய்களைப் போக்க கரட் சிறந்த உணவாகக் கண்டறியப்பட்டுள்ளது.

வேகவைத்து உண் பதிலும் பார்க்க பச்சையாக கரட்டை நன்கு சாப்பிடுவதன் மூலம் கூர்மையான பார்வையைப் பெற்றுக் கொள்ளலாம். காலை உணவின் பின் ஒவ்வொரு நாளும் ஒரு சிறிய கரட்டை பச்சையாக உண்டு வந்தால் பளிச்சென்ற பார்வை கிடைக்கும். குறும் பார்வை, தூரப்பார்வை போன்ற கண் நோய்களும் அனுகாது.

தர்ஷி

## சருமத்தை பாதுகாக்க

இது வெயில் காலம். வெளியில் சென்றால் வெப்பம் சருமத்தைச் சுட்டெரிக்கின்றது. வீட்டுக்குள்ளிருக்கவும் முடியாது. வேலைக்குச் செல்வதென்றால் வெளியில் வந்துதான் ஆக வேண்டும். இது பெண்களின் கவலை.

இந் நிலைமைகளிலிருந்து பெண்கள் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ள சில வழிகள்.

வெளியில் புறப்படுவதற்கு முன்னரோ அல்லது வெளியில் சென்றுவிட்டு வந்த பிறகோ தக்காளிப்பழச் - சாற்றைப் பிழிந்தெடுத்து முகத்தில் தடவிக் கொள்ள வேண்டும். பின்னர் சிறிது நேரம் கழித்து குளிர்ந்த நீரால் கழுவிவிட்டால் தக்காளிப்பழம் போல உங்கள் கன்னங்கள் பளபளக்கும்.

எண்ணை வடியும் சருமத்தைக் கொண்டவர்கள் ஒரு நாளைக்கு நான்கு தடவையேனும் குளிர்ந்த நீரால் முகத்தைச் சுத்தம் செய்வது அவசியம்.

வெயில் காலங்களில் வெளியில் செல்லும் பெண்கள் மணிக்கொரு தடவையேனும் தண்ணீர் பருக வேண்டும். இளநீர் பருகுவதும் சருமத்திற்கு நல்லது.

# சமையலறையில் சித்தமருத்துவம்







மஞ்சள் :- மஞ்சள்ப் பொடியை நீரில் அல்லது சூடான பாலில் கரைத்து அருந்த வயிற்று பொருமல், வயிற்றுவலி, நீர் சுருக்கு, இருமல் போகும்.

சீரகம் :- உடலுக்கு வலுவைத் தந்து கண்ணுக்கு குளிர்ச்சியை உண்டாக்கும். பித்த நோயைத் தணிக்கும்.

வெந்தயம் :- வயிற்று வலி, வயிற்றுப் பொருமல், உட்சூடு, வெள்ளை, சீதக்கழிச்சல் போகும்.

கொத்தமல்லி விதை :- உடல் சூடு, நளிர் சுரம், வாந்தி, விக்கல், நாவரட்சி. தலைச்சுற்றல் நீங்கும்.

ஏலம் :- வயிற்று வலி, குன்மம், பித்த மயக்கம், செரியாமை குணப்படுத்தும்.

ஓமம் :- செரியாக் கழிச்சல், வயிற்றுப் பொருமல் நீங்கும். கல்லீரல், மண்ணீரல், நோய் மற்றும் கல்லடைப்பை போக்கும்.

கசகசா :- குடல் புழு, குருதிக் கழிச்சல், சீதக் கழிச்சல்,தூக்கமின்மை நீங்கும்.

நன்றி - ஹெல்த்

## வாய்ப்புண் நீங்க......

மணத்தக்காளி இலையை (20) காலையில் வாயில் போட்டு நன்றாக மென்று சாப்பிட்ட பின் ஒரு ரம்ளர் பால் குடித்து வந்தால் வாய்ப்புண் குணமடையும்.

அகத்திக்கீரையுடன் தேங்காய், பருப்பு சேர்த்து நன்றாக வதக்கிக் கொள்ள வேண்டும். இதை உணவுடன் கலந்து நெய் சேர்த்துச் சாப்பிட்டால் வாய்ப்புண்ணுக்கு நல்ல பலன் கிடைக்கும். இதை நான்கு நாட்களுக்குத் தொடர்ந்து சாப்பிட்டு வர வேண்டும்.

## நண்பர் என்பவர் எப்படிப்பட்டவர்?

★ நீங்கள் மரணத்தறுவாயிலிருக்கும் போது, உங்களுக்கு அருகில் யார் இருக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அவரே உங்களது நண்பராவார்.

★ உங்களது வாழ்க்கை முழுவதும், யார் அருகில் இருக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அவரே உங்களது நண்பர்.


★ நீங்கள் பிரச்சினையைச் சந்திக்கும்போது, யாரை உடனே நினைக்கிறீர்களோ, அவரே உங்களது நண்பர்.


★ நீங்கள், உங்களது வாழ்க்கையில் சந்திக்கும் மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பங்களைப் பற்றிய செய்தியை முதலில் அறிந்து கொள்பவர் எவரோ அவரே உங்கள் நண்பர்.

★ ஒருவரும் அறியாத உங்களது உள்ளத்தின் இரகசியங்களை, அறிந்துகொள்ளும் ஒரே நபர் யாரோ அவரே உங்கள் நண்பர்.

(தொடரும்)

# தேங்காய் பிஸ்கட்






தேவையான பொருள்கள்:-

| | |
|---|---|
| தேங்காய்ப்பூ | -250g |
| கோதுமைமா | -250g |
| சீனி | -250g |
| பட்டர் | -250g |

செய்முறை:-

பட்டரையும், சீனியையும் நன்றாக அடிக்கவும். பின்னர் பட்டர் கலவையினுள் மாவையும் தேங்காய்த் துருவலையும் சேர்த்து நன்கு பிசையவும். பிசைந்த மாவைப் பலகையில் வைத்து சமமாகத் தட்டி, விரும்பிய வடிவில் வெட்டி, வெண்ணெய் தடவி தட்டில் வைத்து 'அவனில்' வேகவிட்டு எடுக்கவும்.

ச.சுதா



## பெண்கள் மனம் விட்டுப் பேசலாமா?

பெண்கள் மனம் விட்டுப் பேசல்லாமா...? பேசக்கூடாதா? என்பது பெரும் விவாதத்திற்குரிய ஒன்றாகவே இருந்துவருகிறது.

பெண்கள் மனம் விட்டுப் பேசலாம். ஆனால் வரப்போகும் தன் கணவனிடம் தன் கடந்தகாலத்தைப் பற்றி மாத்திரம் வாயே திறக்கக்கூடாது என்கின்றனர் நிபுணர்கள்.

ஒரு பெண் ஒருவனை மணந்து கொண்டபிறகு அவள் மணமாவதற்கு முன் வேறு எவரையாவது காதலித்ததுண்டா என்ற உண்மையை தன் கணவனிடம் சொல்லலாமா என்பது கேள்வி. பொதுவாக ஆண்கள் மணம் செய்வதற்கு முன் யாரையாவது காதலித்து ஏமாந்திருந்தால் மனைவியிடம் சொல்வது சர்வசாதாரணமான விஷயம். அதனை மனைவியும் அவனை மன்னித்து ஏற்றுக்கொள்வாள். ஆனால் (அதே தவறை) மனைவியின் காதல் விவகாரங்களை கணவனிடம் சொன்னால் அவன் மன்னித்து ஏற்கமாட்டான். ஆகையால் நடந்தவற்றை மறந்து எதிர்காலத்தை மட்டுமே பெண்கள் பேச வேண்டும் என்பது மனவியல் நிபுணர்களின் கருத்து.

## ஒளி மயமான எதிர்காலத்திற்கு...

ஆண், பெண் பேதமின்றி அனைவரதும் அபிப்பிராயங்களிடையே தனித்துவத் தன்மை காணப்படுதல் பிரதானமான தொன்றாகும். நாம் சொல்லும், செய்யும் செயல்களை யாராவது பாராட்டினால் அது எமக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும். அது போலவே நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது எமது செயல்களை யாரும் குறை கூறினால் அது போல் கோபம் வேறு எப்போதும் வராது இல்லையா? இதன் மூலம் ஒருவரின் பிழைகள் கண்டுபிடிக்கப்பட்டு சிறந்த மனிதனாக மாற வழிவகுக்கும்.

(தொடரும்)

# மரண விளையாட்டு

தொடர்கதை

அங்கம் 09

மாயவன்

''எஸ் கம்மின், கதவு திறந்து தான் இருக்கிறது என்றது ஒரு பெண் குரல்''

கதவைத் தள்ளித் திறந்து அறையினுள் அடி எடுத்து வைத்தான் ஜோன்ஸ்.

''ஹலோ அப்படியே வாசலில் நிற்காமல் உள்ளே வாருங்கள் என்று கூப்பிட்டாள் அவள.

''உங்கள் அழகை பார்த்து அசந்து நின்றதில் நான் வந்த காரியத்தை கூட மறந்து விட்டேன்'' என்று கூறிய வண்ணம் உள்ளே நுழைந்து குஷன் செயரில் அமர்ந்தான்''

அவள் மெல்ல கட்டிலை விட்டு எழுந்து பிரிட்சை திறந்து ஸ்பெஷல் பியர் பாட்டில் ஒன்றை எடுத்துவந்து கிளாஸ்களில் நிரப்பி ஐஸ் கட்டிகளை அதனுள் போட்டு ஒன்றை ஜோன்ஸிடம் கொடுத்து தான் ஒன்றை எடுத்துக் கொண்டு அவனை குடிக்கும் வண்ணம் கூறினாள்.

நோ தாங்ஸ் நான் இப்போதுதான் வயிற்றை நிரப்பிக் கொண்டு வந்துள்ளேன். தாங்கள் அருந்துங்கள் என்று கூறினான்.

நான் ஒரு மருந்தும் கலக்கவில்லை தாங்கள் தாராளமாக குடிக்கலாம் என்று கூறியவளின் உதட்டில் மர்மப் புன்னகை ஒன்று தவழ்ந்தது. கதவின் பக்கப்புறம் நிழல் ஒன்று அசைநதது...

''மிஸ்டர் தங்களின் நண்பர்களை உள்ளே அழையு ங்கள். இங்கு பயப்படும்படியாக ஒருவரும் இல்லை.

உங்களிடம் அழகுடன் புத்திசாலித்தனமும் உள்ளது. பிலிப்ஸ் உள்ளே வா என்றான் ஜோன்ஸ்.

''மற்றவ்வரையும் உள்ளே கூப்பிடுங்கள்''

''பரவாயில்லையே வெளியே இருவர் நிற்கிறார்கள் என்று ஊகித்துவிட்டீர்களே''

''அதுமட்டுமல்ல இருவரை பிறவுண்சுகரை பாதுகாக்க விட்டு வந்துள்ளீர்கள் என்பதையும் ஊகித்து விட்டேன்'' என்றாள்.

பிலிப்ஸ், வின்சன் இருவரும் உள்ளே நுழைந்து இருக்கைகளில் அமர்ந்தார்கள். ''மன்னிக்க வேண்டும் நான் யாரென்பதை உங்களுக்கு கூறவில்லை. நான் ரமீலா'' என்றாள்.

ரமீலா நான் ஜோன்சன், இவன் பிலிப்ஸ் மற்றவன் வின்சன் என்று தன் சகாக்களை அறிமுகப்படுத்தினான்.

''சரி இப்போது எம்மை இங்கு அழைத்ததற்கான காரணத்தை கூறுங்கள்'' என்றான் வின்சன்.

ப்ரண்ஸிற்குள் மரியாதை தேவையில்லை சாதாரணமாகவே அழையுங்கள் என்று கூறியவள் கட்டிலில் போய் அமர்ந்தாள்.

உங்களை அழைத்ததற் கான காரணம் இந்தியன் சி.பி.ஐ ஒபிசர் இருவர் உங்களை தொடர்ந்த வண்ணம் இருக்கிறார்கள். அதனை உங்களுக்கு தெரியப்படுத்தத்தான் அழைத்தேன்.

''ரமீலா உனக்கு எவ்வாறு இந்த விஷயம் தெரியும்''

கப்பல் கேப்டன் தான் உங்களின் கையாள். உதவிக் கேப்டன் தான் சி.பி.ஐக்கு தகவல் கொடுத்தது என்றாள்.

''உனக்கு அந்த இரு சி.பி.ஐ ஒபிசர்களையும் தெரியுமா'' என்றான் பிலிப்ஸ்.

''ஆமாம் எனக்கு இருவரையும் தெரியும். அவர்களை



உங்களுக்கு காண்பிப்பேன். ஆனால் நீங்கள் பிறவுண்சுகரில் பங்கு தர வேண்டும்'' என்றாள்.

''எவ்வளவு வேண்டும் உனக்கு''1/5 பகுதி அதாவது 2 கோடி ரூபாய் பெறுமதியான பிறவுண்சுகர் என்றாள் ரமீலா.

பிலிப்ஸ், ஜோன்ஸ், வின்சன் ஆகியோரின் பார்வைகள் சந்தித்து தகவல்களைப் பரிமாறின. ஓ.கே. கேட்டபடி தரலாம். எப்போது நீ எங்களுக்கு அவர்களை காட்டித்தருவாய் என்றான் ஜோன்சன்.

''நாளை அவர்கள் இருவரையும் இனங்காண்பிப்பேன்'' என்று கூறினாள். ஓ.கே.நாம் செல்கிறோம் என்று கூறி விடை பெற்றார்கள்.

இரத்தப் பந்தாய் சூரியன் கீழ்வானத்தில் தோன்றினான். இந்த சமுத்திரம் காலைவேளை அலைகள் இல்லாமல் அமைதி யாக இருந்தது. பாகிஸ்தானில் இருந்து இந்தியா நோக்கி விரைந்து கொண்டிருந்த கப்பல் கடல் நீரைக் கிழித்துக் கொண்டு சீரான வேகத்தில் சென்று கொண்டிருந்தது. கப்பலின் தளத்தில் பயணிகள் பல் வேறு வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். தளத்தின் ஒரு பக்கத்தில் கடலைப் பார்த்துக் கொண்டு இருவர் கதைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் இந்திய சி.பி.ஐ ஒபிசர்கள் விவேக் கும் ராஜேசும் ஆவார்கள்.

''விவேக் பிறவுண்சுகர் கொண்டு செல்லும் ஐவர்களில் மூவர் நேற்று இரவு நடிகை ரமீலாவின் அறைக்குள் சென்றதை பார்த்தேன். ஆனால் இருவர்தான் திரும்பிப் போனார்கள்'' என்றான் ராஜேஸ்.

''ஆமாம் ராஜேஸ். நானும் அவர்கள் போனதை அவதானித்தேன். இன்னும் இரு நாட்களுக்குள் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லாவிட்டால் அவர்கள் தப்பி விடுவார்கள் என்றான் விவேக்.

''எஸ் நீ சொல்வது சரி தான்''

இவர்கள் இருவரும் இவ்வாறு கதைத்துக் கொண்டு நிற்க, இவர்களுக்கு சற்று தூரத்தில் ரமீலாவும், ஜோன்சும், வின்சனும் நின்று கொண்டிருந்தார்கள். ரமீலா பச்சை நிற ரீ சேர்ட்டும் கறுப்பு நிற ஜீன்சும் அணிந்து மேக்கப் இன்றி சாதாரணமாக இருந்தாள். ஜோன்சும், வின்சனும் கறுப்பு நிற டெரிம் ஜீன்சும் அதே நிற ரீ சேட்டும் உடுத்திருந்தனர்.

''ஜோன்ஸ் நன்றாக பார். அதோ கடலைப் பார்த்தபடி இருவர் கதைத்துக்கொண்டு நிற்கிறார்களே அவர்கள் தான் இந்திய சி.பி.ஐ ஒபிசர்கள்'' என்றாள் ரமீலா.

''தாங்யூ ரமீலா அவர்களை இப்போதே மேல் லோகம் அனுப்பிவிட்டு வருகிறேன்'' என்று ஜோன்ஸ் புறப்பட்டான்.

ஜோன்ஸ் அவசரப் படாதே, இப்போது அவர்களை கொல்ல வேண்டாம் நாளை அதிகாலை வேளை கொல்லலாம் இப்போது நாம் எமது ரூமிற்கு செல்வோம்.

''என்ன டி.எஸ்.பி வரதராஜன் கடந்த இரு நாட்களாக தீவிரவாதிகள் எதுவித அசம்பாவிதமும் செய்யவில்லை ஏன் அமைதியாக இருக்கிறார்கள்'' என்று பொலிஸ் கமிஷனர் தேவராஜ் கேட்டார்.

''தெரியவில்லை சார். இது புயலுக்கு பின் அமைதியோ அல்லது அமைதிக்கு பின் புயலோ தெரியவில்லை'' என்றார் டி.எஸ்.பி வரதராஜன். சூரியன் மெல்ல மேற்கு நோக்கி சரிந்தான். எங்கும் இருள் பரவ ஆரம்பித்தது. கப்பலின் தளமெங்கும் ஒவ்வொரு வீதி மின் விளக்குகள் ஒளியைப் பரப்பின. வின்சன் ரமீலாவின் அறையை அடைந்து கதவை மெல்லத் தட்டினான்.

''வின்சன். உள்ளே வா'' என்று கூப்பிட்டாள் ரமீலா. கதவை திறந்து உள்ளே நுழைந்தான்.

வட்டமேசையில் கண்ணாடி கிளாஸ்களில் போதை ஊட்டும் பொன் நிற திரவம் காணப்பட்டது.

ரமீலாவின் மேக்கப் அன்று வித்தியாசமாக இருந்தது. கறுப்பு நிறத்தில் கழுத்தில் இருந்து பாதம் வரை நீண்ட கோட் அணிந்திருந்தாள்.

பிறவுண்சுகர் கொண்டு செல்லும் ஐவர்களில் ஒருவன் உதவிக்கேப்டன் அறையை நோக்கிச் சென்றான். மற்ற நால்வரும் இருவர் இருவராக சி.பி.ஐ ஒபிசர்களை மடக்கச் சென்று கொண்டிருந்தனர்.

ஒருபுறம் இவர்கள் செல்ல மறுபுறம் இவர்களுக்கு அல்வா கொடுத்துவிட்டு 10 கோடி ரூபாய் பெறுமதியுள்ள பிறவுண் சுகரை அபேஸ் பண்ணிக் கொண்டு செல்ல ரமீலா திட்டமிட்டுக் கொண்டிருந்தாள்.

உதவிக் கேப்டன் அறையை அடைந்த ஜோர்ச் கதவை தட்டிவிட்டு சுவர்பக்கம் ஒதுங்கினான். சிறிது நேரத்தில் கதவு திறக்கப்பட்டு கப்பலின் உதவிக்கேப்படன் வெளி வந்தான். அவனை அப்படியே தள்ளியபடி உள்ளே நுழைந்து கால்களால் கதவை உதைத்து மூடிவிட்டு துப்பாக்கியை உதவி கப்டனின் நெற்றி பொட்டில் நிறுத்தினான்.

''யார் நீ உனக்கு என்ன வேண்டும்'' ''ராஸ்கல் செய்வதையும் செய்துவிட்டு என்ன வேண்டும்.

''நான் உனக்கு என்ன செய்தேன்''

டேய் நீதானே நாம் பிறவுண் சுகர் கடத்துவதை இந்தியன் சி.பி.ஐக்கு சொல்லியது''


''இல்லை நான் சொல்லவில்லை''

''பொய் சொன்னாயானால் எலும்புகளை எண்ணி விடுவேன்''.

'' என்னை விட்டு விடு உனக்கு என்ன வேண்டுமானாலும் தருகிறேன்'' என்று கூறியபடி பின்னே நகர்ந்த உதவிக் கேப்டன் அபாயசைரனை ஒலிக்கச் செய்வதற்காக கைகளை நீட்டினான். ''ட்டுசுப் என்று சத்தமில்லாமல் சைலென்சர் பொருத்திய துப்பாக்கியில் இருந்து வெளியான தோட்டா கையை சேதமாக்கியது.

நாயே உன் குணத்தை காட்டி 'விட்டாயே என்று படபட வென தோட்டாக்களால் அவன் உடலை பொத்தலாக்கினான். உயிரற்று சரிந்தான் உதவிக் கேப்டன். துப்பாக்கியை இடுப்பில் செருகிய படி வெளியே வந்தான் ஜோர்ச். சுற்றுமுற்றும் நோக்கினான். தூரத்தில் ஒரு காவலாளிஸ் டென் கன் னுடன் வருவது தெரிந்தது. மெல்ல அங்கிருந்து நழுவினான்.

*(தொடரும்)*



# கம்ப்யூட்டர்க் கல்வி



கீழே உள்ள அட்டவணையில் சில தசம எண்களுக்கு சமமான கெக்ஸ், ஒக்ரல், பைனறி எண்களைக் காணலாம்.

| தசம எண் | ஒக்ரல் எண் | கெக்ஸ் எண் | பைனறி எண் |
|---|---|---|---|
| 0 | 0 | 0 | 0 |
| 1 | 1 | 2 | 1 |
| 2 | 2 | 2 | 10 |
| 3 | 3 | 3 | 11 |
| 4 | 4 | 4 | 100 |
| 5 | 5 | 5 | 101 |
| 6 | 6 | 6 | 110 |
| 7 | 7 | 7 | 111 |
| 8 | 10 | 8 | 1000 |
| 9 | 11 | 9 | 1001 |
| 10 | 12 | A | 1010 |
| 11 | 13 | B | 1011 |

தசம எண்ணியல் முறையில் உள்ளது போன்று கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் போன்ற கணிதவியல் செயற்பாடுகள் (**Mathematical Operations**) ஒக்ரல், கெக்ஸ், பைனறி எண்ணியல் முறைகளிலும் உண்டு என்பது குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

நாம் தொடர்ந்து, கம்பியூட்டர் தகவல் சேமிப்பிற்கும் பைனறி எண்ணியல் முறைக்கும் உள்ள தொடர்பு பற்றி ஆராய்வோம்.

## தகவல் சேமிப்பும் பைனறி எண்ணியல் முறையும்

ஒரு கம்பியூட்டரானது, நாம் கொடுக்கும் எல்லா தகவல்களையும் 1,0 ஆகிய இரண்டு எண்களை அதாவது பைனறி எண்ணியல் முறையை மட்டும் உபயோகித்தே விளங்கிக் கொள்கிறது. உதாரணமாக நாம் ''5'' என்ற எண் தரவை கம்பியூட்டருக்கு கொடுத்தால் அது ''101'' என்றே விளங்கிக் கொள்ளும். எனவே நாம் எந்த ஒரு தரவை அல்லது தகவலை கம்பியூட்டருக்கு கொடுப்பினும் அது பைனறியாக மாற்றியே கம்பியூட்டரால் விளங்கிக் கொள்ளப்படும்.

நாம் கம்பியூட்டர் கீபோர்ட்டில் உள்ள ஒரு கட்டையை அழுத்தும் போது அந்தக் கட்டையானது ஒரு பைனறி எண்ணாகவே கம்பியூட்டரால் உணரப்படும். உதாரணமாக நாம் ''A'' என்ற கட்டையை அழுத்தினால் அது ''01000001'' என்றே உணரப்படும். நாம் மேலே தசம எண்களுக்கு சமமான பைனறி எண்களைப் பார்த்தோம். அதே போன்று கம்பியூட்டர் கீபோர்ட்டில் உள்ள ஒவ்வொரு கட்டைக்கும் சமமான ஒரு பைனறி எண் உண்டு. கீர்போட்டில் உள்ள ஒவ்வொரு கட்டைக்கும் உரிய ஒவ்வொரு பைனறி எண்ணும் ஆன்சி (**ANSI-American National Standards Institute**) எனும் தரப்படுத்தும் நிறுவனத்தால் அஸ்க்கி (**ascii - American Standarad Code for Information Interchange**) எனும் ஒரு சர்வதேச கம்பியூட்டர் குறியீட்டு முறையாக வரையறுக்கப்பட்டுள்ளது. நாம் பாவிகக்கும் கீர்போர்ட்டில் எந்த ஒரு கட்டையை அழுத்தினாலும், அது அஸ்க்கி அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள அந்த கட்டைக்குரிய பைனறி எண்ணாகவே கம்பியூட்ரால் உணரப்படும். சர்வதேச கம்பியூட்டர் குறியீட்டு அஸ்க்கி அட்டவணையை கீழே காணலாம்.

இந்த அஸ்க்கி அட்டவணையில் கீர்போர்ட் கட்டைகளுக்குரிய பைனறி எண்ணும் அதற்கு அருகில் அந்த எண்ணுக்குச் சமமான ஒக்ரல், கெக்ஸ், தசம எண்களும் குறிப்பிடப் பட்டிருப்பதை அவதானியுங்கள்.

இப்போது, நீங்கள் ஒவ்வொரு தடவையும் கீபோர்ட்டில் உள்ள கட்டைகளை அழுத்தும் போது அது கம்பியூட்டரால் எப்படி உணரப்படுகின்றது என்பது உங்களுக்கு தெளிவாக விளங்கியிருக்கும்.

கம்பியூட்டர் தகவல் சேமிப்பில் பைனறி எண்ணியல் முறை எப்படிப் பயன்படுத்தப்படுகின்றது என்பதை தெரிந்து கொண்டீர்கள். தொடர்ந்து கம்பியூட்டர் தகவல் சேமிப்பில் உபயோகிக்கும் அலகுகள் பற்றி நோக்குவோம்.

நன்றி: நுட்பம்

*(தொடரும்)*

# தற்காப்புக்கலை கராத்தே



கராத்தே இருபாலாருமே பயின்று கொள்ளக்கூடிய ஒரு கலையாகும். இதனைச் சிறுவர் முதல் பெரியோர் வரை வயது வேறுபாடின்றி கற்கமுடியும். மேலைத்தேசக் கராத்தே வீரர்களில் பலர் பெண்கள். நமது நாட்டிலும் கூட பல பெண்கள் தற்போது கராத்தே பயின்று வருவது பெருமைக்குரியது. பெண்களுக்கென கராத்தே போட்டிகள் (Tournament) கூட நடைபெற்றுவருகின்றன.

## கராத்தேயும் உடற்பயிற்சியும்

கராத்தே கலையின் நுட்பங்களை அதாவது ஒவ்வொரு அசைவுகளையும் திறம்பட செய்வதற்கு உடற்பயிற்சி மிக அத்தியாவசியமானதாகும். உடற்பயிற்சியினூடே நீண்ட நேரம் கராத்தேப்பயிற்சியைச் செய்யக் கூடிய சக்தி (Staying power) உடற்சமநிலை (Balance) உடலின் இலகுத் தன்மை (Flexibility), பலம் (Strength), வேகம் (Speed) ஆகியவற்றைப் பெற முடியும். இதன் காரணமாகவே கராத்தே வகுப்பின் ஆரம்பத்தில் ஆசிரியரால் உடற்பயிற்சி அளிக்கப்படுகின்றது.


## கராத்தேயும் தியானப்பயிற்சியும்

கராத்தே கலையில் உடற்பயிற்சிக்கு எவ்வளவு முக்கியத்துவம் வழங்கப்படுகிறதோ, அதேயளவிற்கு தியானப் பயிற்சிக்கும் முக்கியத்துவம் உண்டு. நமது மூளையும், உடலும் ஒருங்கிணைந்து இயங்குவதற்கு தியானப்பயிற்சி உதவுகிறது. மற்றும் மனவலிமை (Mental Strength), தன்னம்பிக்கை (Self Confidence), பொறுமை (Patient), நினைவாற்றல் (Memory Power) ஆகிய பண்புகளும், இலகுவில் கராத்தே நுட்பங்களை புரிந்து கொள்ளும்தன்மை, கராத்தேயின் கடினமான பயிற்சிகளையும் இலகுவாக செய்யக் கூடிய தன்மை போன்றவற்றையும் தியானப்பயிற்சி மூலமாகப் பெற முடிகின்றது.

## கராத்தேயில் வழங்கப்படும் தரங்கள் (Grade)

கராத்தே வீரர்கள் பயிற்சியின் போது பலநிற பட்டிகளை இடுப்பில் அணிந்திருப்பதை நாம் காணக் கூடியதாகவுள்ளது. இப்பட்டிகள் அதன் தரங்களை வெளிப்படுத்தக் கூடியதாகவுள்ளது. கராத்தேயில் ஒன்பது மாணவ தகுதிகள் (Kyu) காணப்படுகின்றன. இவை 9 வது Kyu தொடக்கம் 1வது Kyu வரை உள்ளன. அடுத்துவரும் தகுதிகள் ஆசிரியத் தகுதிகள் (DAN). இவை 1வது Dan தொடக்கம் 10 வது Dan வரை உள்ளன. மேற்படி தரங்களை மாணவர்கள் குறிப்பிட்ட காலங்களில் அவர்கள் பயின்று வரும் கராத்தே கழகங்களால் நடாத்தப்படும் தேர்வுகளில் (Grading) பங்குபற்றி சித்தி பெறுவதன் மூலமே அடைய முடியும்.

* * * * * *



### கராத்தேயின் சில கலைச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. | Jodan (யோடான்) | Upper Area | மேற்பாகம். |
| 02. | Chudan (சுடான்) | Middle Area | நடுப்பாகம். |
| 03. | Gedan (கெடான்) | Lower Area | கீழ்ப்பாகம். |
| 04. | Hajime (கஜிமி) | Begin | ஆரம்பம். |
| 05. | Yame (யமே) | Stop | நிறுத்தல். |
| 06. | Rei (ரெய்) | Bow | வணக்கம் செலுத்துதல். |
| 07. | Yoi (யொய்) | Ready | ஆயத்தம். |
| 08. | Dachi (டாச்சி) | Stance | நிலை. |
| 09. | Uki (உக்கி) | Block | தடுத்தல். |
| 10. | Kiri (கிரி) | Kick | உதை. |
| 11. | Kumite (குமுட்டி) | Sparring | சண்டை. |
| 12. | Dojo (டோஜோ) | School | பயிற்சிசாலை. |
| 13. | Sensei (சென்செய்) | Master | ஆசிரியர். |
| 14. | Karatekas (கராட்டிகா) | Karate Student | கராத்தே மாணவன். |
| 15. | Gi [கி (கிட்)] | Training suit | பயிற்சி உடை |

சென்செய். டி. அன்ரோ டினேஸ்

# மம்மியின் சபதம்

பண்டைய எகிப்து மன்னர்கள் இறந்துவிட்ட தங்கள் உற்றார், உறவினர்களுடைய சடலங்களை வாசனைப் பொருள்கள் மற்றும் இரசாயனங்கள் பயன்படுத்தி, பதப்படுத்தப்பட்டுவிசேஷமாக உருவாக்கப்பட்ட பெட்டகத்தில் அடக்கம் செய்து பாதுகாத்து வந்தார்கள். அப்படிப் பாதுகாக்கப்பட்ட சடலம்தான் ''மம்மி'' என அழைக்கப்பட்டு வருகிறது.

3600 வருடங்களுக்கு முன்பு எகிப்தில் உள்ள ''திப்ஸ்'' என்னுமிடத்தில் வாழ்ந்த ராஜகுமாரி ஒருவரது சடலம் இதைப் போன்று மம்மியாகப் பாதுகாக்கப்பட்டு வந்தது. 1910 ஆம் ஆண்டு ''டக்னஸ் முறே'' என்ற ஆங்கிலேயன் அந்த மம்மியை கெய்ரோவில் வைத்து ஓர் அமெரிக்கரின் கைவசமிருந்து விலைக்கு வாங்கினார். சில நாட்களுக்குப் பிறகு அந்த மம்மியை டக்னசிற்கே விற்பனை செய்த அமெரிக்கர் மர்மமான முறையில் இறக்க நேர்ந்தது. அப்போது தான் டக்னஸிற்கு ஒரு உண்மை தெரியவந்தது. அதாவது தான் வாங்கிய மம்மி இறப்பதற்கு முன் பலத்த சாபம் ஒன்றைப் போட்டு விட்டுத்தான் இறந்திருக்கிறார் என்பது. ''தான் இறந்த பிறகு தன்னுடைய உடலை அவமரியாதை செய்பவர்களுக்கு மிகக் கொடிய ஆபத்துக்கள் ஏற்பட வேண்டும்'' என்பதே அந்த மம்மியின் சாபமாம்.

ஆனால், சரித்திர ஆராய்ச்சியாளரான டக்னஸ் அந்த மம்மியின் சாபத்திற்கெல்லாம் கலங்கவேயில்லை. அப்படிப்பட்ட மம்மிகளின் சாபக் கதைகளை ஏராளமாக அவர் கேள்விப்பட்டிருந்தார்.

சிறிது நாட்களுக்குப் பிறகு மீண்டும் ஒரு விபரீத சம்பவம் நடந்து விட்டது. ஆம், வேட்டைக்கு சென்றிருந்த டக்னசின் கையிலிருந்த துப்பாக்கியிலிருந்து எதேச்சையாக ஒரு குண்டு அவரது தோள் பட்டையில் பாய்ந்தது.

பிறகென்ன? அந்தக் கை தோள்பட்டையிலிருந்து அறுவைச்



சிகிச்சை மூலம் அகற்றப்பட வேண்டியதாயிற்று.

அந்தச் சம்பவத்திற்கு பிறகு தான் டக்னசைப் பயம் தொற்றிக் கொண்டது. உடனே தன் கைவசமிருந்த அந்த மம்மியை ஒரு பெண்மணிக்கு விற்றுவிட்டார். நாட்கள் செல்லவே அந்த மம்மியை வாங்கிய பெண்மணியும் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாகிவிட்டார். பயந்து போன அந்த பெண் மம்மியை டக்னசிற்கு திருப்பிக் கொடுத்து விட்டார்.

பிறகு டக்னஸ் அந்த மம்மியை நியூயோர்க்கில் உள்ள ஒரு அருங்காட்சியகத்திற்கு கை மாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டார்.

1912இல் டக்னஸ் அந்த மம்மியை அடக்கம் செய்த பெட்டகத்தை நியூயோர்க்கிற்கு கப்பல் மூலம் அனுப்பி வைத்தார்.

ஆனால் அந்த கப்பல் பயணத்தின் போது நடுக்கடலில் மூழ்கி விட்டது. ஆம் அந்த கப்பல்தான் டைட்டானிக்.

1985 Sep மாதம் ரோபர்ட் பல்லாட், ஹீன்லூஹிமிஷில் ஆகியவர்களின் முன்னிலையில் அமெரிக்கர்களும் பிரெஞ்சுக்காரர்களும் அடங்கிய ஆய்வாளர்கள் விபத்து நடந்த இடத்தை மிக உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினர். பல நாட்களுக்கு பிறகு அவர்களது விடா முயற்சியின் பலனாக ஆழ்கடலின் அடித்தட்டில் டைட்டானிக் கப்பலைக் கண்டு பிடித்தார்கள்.

நன்றி - முத்தாரம்

# கிரிக்கெட் கேள்வி - பதில்கள்



* முதல் கிரிக்கெட் மட்ச் எந்த வருடத்தில் எங்கே நடந்தது?
முதல் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி, 7-6-1975 இல் இங்கிலாந்தில் உள்ள லார்ட்ஸில் நடந்தது.

* முதல் உலகக் கோப்பை மட்சில் முதன் முதலாகக் கலந்து கொண்ட நாடுகள் எவை?
முதல் உலகக் கோப்பைப் போட்டியில், முதன் முதலாக இந்தியா, இங்கிலாந்து அணிகள் ஆடின.

* உலகக் கோப்பை ஆட்டத்தில் முதன் முதலாக 5 விக்கெட்டுகளை எடுத்த பந்து வீச்சாளர் யார்?
டென்னீஸ் வில்லி, உலகக் கோப்பைப் போட்டியில் 5 விக்கெட்டுகளை எடுத்தார்.

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி...........)

## சலரோகத்தின் தீய விளைவுகள்

நீரிழிவு நோயானது ஒருவரின் தேகநிலையினைச் சிதைத்து விட வல்லது. நீரிழிவு நோயானது கட்டுப்படுத்தப்படாது நீடித்த காலத்திற்கு விடப்படின் உடலில் பல்வேறு தொகுதிகளில் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டுவிடும் அபாயம் உண்டு. தீயவிளைவுகளாவன:-

1. சிறுநீரகம் பாதிப்பு அடைவதனால் புரதம் (அல்புமின்) வெளியேறத் தொடங்கும். காலக்கிரமத்தில் சிறுநீரகம் அதன் தொழிற்பாட்டை இழக்க நேரிடும்.

2. கை, கால்களில் விறைப்புத் தன்மை உருவாதல், நரம்புக்கலங்களுக்கு குருதியை வழங்கும் குருதிச் சிறுகுழாய்களில் கொழுப்பு படிவடைந்து குருதிச் சுற்றோட்டம் படிப்படியாகக் குறைவடைவதால் உணர்ச்சி நரம்புகள் பாதிக்கப்படும். இதனால் அவயவங்களில் உணர்ச்சியற்ற தன்மை ஏற்படும்.

3. குருதிக்குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு அவற்றின் பலனாக இருதயநோய்கள், அதி இரத்த அமுக்கம், பாரிசவாதம், மாரடைப்பு ஆகியன ஏற்படலாம்.

4. கண்பார்வை படிப்படியாகக் குறைவடைதல், கண்களின் விழித்திரையில் உள்ள குருதிச்சிறு குழாய்கள் சேதமடைவதாலும் விழித்திரையில் உள்ள குருதிச் சிறு குழாய்கள் சேதமடைவதாலும் நீர்ப்பாயங்கள் சேர்வதனாலும் கண்பார்வை பாதிக்கப்படலாம். (Retinopathy) கண்ணீர்ப் பாயங்களில் உள்ள வெல்லச் செறிவு அதிகரிப்பதால் கண் வில்லைதடிப்படையும். இதனாலும் பார்வை மங்கலாம். (Cataract)

5. தன்னாட்சி நரம்புத் தொகுதி பாதிப்படைவதால் வாந்தி, வயிற்றோட்டம் என்பன அடிக்கடி ஏற்படும். மேலும் உடலின் அக உறுப்புக்களின் (சிறுநீர்ப்பை, இரப்பை, குடல்) இயக்கம் பாதிப்புறலாம்.

6. சிறுநீர்ப்பை, பாலியல் உறுப்புக்கள், தோல் கை, கால்கள் முதலியவற்றில் தொற்றுக்கள் ஏற்படுவதால் பெரும் பாதிப்பு ஏற்படும். சிலவேளைகளில் உயிரைக் காப்பாற்றுவதற்காக கை, கால்கள், விரல்களைக் துண்டிக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம்.

5. ஆண்மைக் குறைபாடு ஏற்படக் கூடும்.

6. நாட்பட்டும் மாறாத புண்கள். இது பின்வரும் காரணங்களினால் ஏற்படுகின்றது.

* கை, கால்களில் உணர்ச்சியின்மையால் காயங்கள் ஏற்படும் போது அதை உடனடியாக அறியமுடியாதிருத்தல்.

* குருதிச் சிறுகுழாய்களில் அடைப்பு ஏற்படுவதால் இழையங்களினது குருதிவிநியோகம் பாதிக்கப்படுதல்.

* உடலின் நோய் எதிர்ப்புத் தன்மைகுறைவடைதல் இதனால் நோய்க்கிருமிகள் பல்கிப்பெருகும் வாய்ப்புகள் அதிகரித்து புண் மாறும் தன்மை குறையும்.

## சலரோகமும் அதற்கான சிகிச்சை முறையும்.


சலரோக சிகிச்சையின் நோக்கமானது குருதியில் குளுக்கோஸ் சமநிலையை பேணுவதன் மூலம் இந் நோயினால் வரும் சிக்கல்களைக் குறைத்து நோயாளியின் வாழ் நாளை நீடிக்கச் செய்தலாகும். பிரதான மூன்று முறைகளில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.
1. உணவுக் கட்டுப்பாட்டு முறை
2. உணவுக்கட்டுப்பாடும் மாத்திரைகளும்
3. உணவுக் கட்டுப்பாடும் இன்சுலின் ஊசி ஏற்றுதலும்.

(மறு இதழில் தொடரும்)

பொ. பிரதீபன்
4ஆம் வருடம்
மருத்துவ பீடம்
யாழ். பல்கலைக்கழகம்




## கண்டுபிடியுங்கள்




படத்தில் உள்ள சிறுவனின் முன்னால் எண்கள் எழுதிய பல பந்துகள் காணப்படுகின்றன. அவனுடைய அப்பா அவனை அழைத்து, ''ராஜா! கூட்டினால், 257 வரக் கூடிய இரண்டு பந்துகளை கண்டுபிடித்தால், உனக்கு பத்து ரூபாய் தருகிறேன்'' என்றார். ராஜாவுக்கு பத்து ரூபாய் கிடைக்க நீங்கள் உதவுங்களேன்!

## பொது அறிவு

1. படுத்து உறங்கத் தெரியாத மிருகம் எது?
   *குதிரை*
2. நிறவேறுபாடு தெரியாத மிருகம் எது?
   *யானை*
3. பார்வை தெரியாத புகழ் பெற்ற கவிஞர் யார்?
   *மில்டன்*
4. ஆங்கிலம் தெரியாத இங்கிலாந்து மன்னர் யார்?
   *முதலாவது ஜோர்ஜ்*

அ.யோகினி,
வட்டு மத்திய கல்லூரி

## முயற்சி

கல்விக்கடல் கரைசேரும் வரை
அறிவுப்படகை
முயற்சித் துடுப்பால் செலுத்து.
ஆகும் என்ற இலட்சியம்
இருந்திடின்ஆகாதவை இல்லை.
மலையில் நதியை ஏற்றிடலாம்
இமயத்தை அடியோடுதகர்க்
கலாம்.முயற்சி எம்மில் இருந்
திட்டால் முயலாமை(யிடம்)
தோற்க வேண்டியதுதான்.

த. பிரசாத்

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்



**அன்புக் குழந்தைகளே! விதம் விதமாக உங்களிற்கு வர்ணம் தீட்ட ஆசை தானே? இதோ இங்கு தரப்பட்டிருக்கும் படத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம். என்ன நீங்கள் நிறந்தீட்டத்தயார் தானே?**



## அறிந்து கொள்வோம்

| | |
|---|---|
| மிக மிக நல்ல நாள் | - இன்று |
| மிகப் பெரிய வெகுமதி | - மன்னிப்பு |
| மிகவும் வேண்டாதது | - வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | - சமயோசித புத்தி |
| மிகக் கொடிய நோய் | - பேராசை |
| மிகவும் சுலபமானது | - குற்றம் காணல் |
| கீழ்த்தரமான விஷயம் | - பொறாமை |
| நம்பக் கூடாதது | - வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | - அதிக பேச்சு |
| செய்யக் கூடாதது | - உபதேசம் |
| செய்ய வேண்டியது | - உதவி |
| விலக்க வேண்டியது | - விவாதம் |
| உயர்வுக்கு வழி | - உழைப்பு |
| நழுவக் கூடாதது | - வாய்ப்பு |

எஸ்.கீதா

## கணிதப் புதிர்கள்

| | | |
|---|---|---|
| | | 6 |
| 9 | | |
| | 3 | |

இடமிருந்து வலமாகவோ மேலிருந்து கீழாகவோ மூலை விட்டமாகவோ கூட்டுத் தொகை15 ஆக வருமாறு இடைவெளிகளை தானங்களாக நிரப்புக.

விடைகள்

| | | |
|---|---|---|
| 2 | 7 | 6 |
| 9 | 5 | 1 |
| 4 | 3 | 8 |

P.அன்ரன்ஜெயக்குமார்,
குருநகர்.

## மாணவர்களிற்கு 'ரியூசன்' அவசியமா?

இன்றைய கால கட்டத்தில் மாணவர்களின் கல்வி முறைகளும், பாடத்திட்டங்களும் அடிக்கடி மாறிக் கொண்டே இருக்கின்றன. இதனால் அவர்கள் மீது சுமத்தப்படும் கல்விச் சுமைகளும் அதிகரிக்கின்றன. அச்சுமைகளை சுகமாக மாற்றிக் கொள்ள மாணவர்கள் ''ரியூசன்'' செல்கிறார்கள். உண்மையில் ரியூசன் அவர்களின் சுமையைக் குறைக்குமா? அது அவர்களுக்கு அவசியமா? என்பது சிந்திக்கத்தக்கது.

இன்று ரியூசன் செல்வது நாகரிகமாகி விட்டது.

மாணவர்கள்பாடசாலையில் ஆசிரியர்கள் பாடம் நடத்தும் போது கவனமாகக் கேட்டு, அதில் ஏற்படும் சந்தேகத்தை உடனுக்குடன் நிவர்த்தி செய்து கொள்வது அவசியம்.

அத்தோடு மட்டும் நின்று விடாது. அன்றைய பாடத்தை அன்றே படித்து மனப்பாடம் செய்துவிடல் வேண்டும். இதனால் கல்வியினால் ஏற்படும் சுமை பெருமளவு குறைக்கப்படும். மாணவர்கள் சினிமாவிலும், விளையாட்டிலும் நேரத்தை அதிகம் செலவிடாமல், படிப்பதில் அதிக நேரத்தை செலவிடல் வேண்டும். இதனால் நாம் முன்னேற்றமடைய அதிக வாய்ப்பு உண்டு.

''படிப்பே உயிர் மூச்சு'' என நினைக்கும் மாணவருக்கு ''ரியூசன்'' அவசியமில்லை. காலம் பொன்போன்றது. கல்வி கண் போன்றது. 'ரியூசன்' என்பது இரவல் கண் மாதிரி என்றே கூறலாம். சொந்தக் கண்ணால் பார்க்க முடியாதவன். இரவல் கண்ணால் எப்படிப் பார்க்க முடியும்.

ஆகவே மாணவர்களே நீங்கள் ரியூசன் செல்லுமுன் உங்களுக்கு ரியூசன் அவசியமா என சற்றே சிந்தியுங்களேன்.........!

பிரியா

## சிந்தனைத் துளிகள்

உண்மைக்குப் பயப்படுகின்றவன் வேறு எவருக்கும் பயப்பட வேண்டிய அவசியமில்லை.
ஆசை பேராசையாகவும், அன்பு வெறியாகவும் மாறக் கூடாது.
கோபம் எழும் போது அதன் விளைவுகளை எண்ணிப்பார்.
சுயநலக்காரனுக்குச் சுற்றத்தார் இருக்கமாட்டார்கள்.

சி. சயந்தன்

## சிந்தித்து செயற்படுங்கள்



ஒரு காட்டில் பலசாலியான ராமனும், அறிவாளியான ரங்கனும் பயணம்செய்து கொண்டிருந்தார்கள்.இவர்கள் இருவரும் நண்பர்கள்.

இவர்கள் சென்ற பாதையின் நடுவே ஒரு கரடிதூங்கிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த ரங்கன், ''ராமா! கரடி படுத்துஉறங்கும்பாதையில் போனால் ஆபத்து. வந்த வழியே திரும்பிப் போகலாம் வா'' என்றான். இதைக் கேட்ட ராமன் ''நான் உன்னைப் போலக் கோழையல்ல. இதோ பார் என் வீரத்தை'' என்று கூறியபடி ஒரு கல்லை எடுத்து கரடியின் மீது எறிந்தான்.

கல்லடிபட்ட கரடி, தூக்கம் கலைந்து எழுந்தது. கோபத்துடன் பொருமிக் கொண்டே ராமனின் மீது பாய்ந்து அவனைப் கடித்துக் குதறியது. வலி பொறுக்க முடியாமல் அலறினான் ராமன்.

அப்போது ஒரு மரத்தில் மறைந்து கொண்டு இருந்த ரங்கன் தன் நண்பனைக் காப்பாற்ற நினைத்தான். மிருகங்களைப் போல ஒலி எழுப்ப பழகி இருந்த அவன், மதவெறி கொண்ட யானையைப் போலக் கத்தினான். அதைக் கேட்டுப் பயந்த கரடி, ராமனை விட்டுவிட்டு காட்டிற்குள் ஓடி மறைந்தது.

ரங்கன் மரத்திலிருந்து இறங்கி இரத்தக் காயங்களுடன் நின்ற ராமனிடம் சென்றான். அப்போது ராமன், ''ரங்கா! புத்திபலம் இல்லாத உடல்பலம் என்றுமே வெல்லாது என்பதை புரிந்து கொண்டேன்'' என்று கூறி மனம் வருந்தினான்.

**சிறுவர்களே! கதையைப் படித்தீர்களா? நீங்கள் எந்த விடயமானாலும் நன்கு சிந்தித்து செயற்படுங்கள். தெளிவான சிந்தனை உங்கள் உயர்விற்கு வழிவகுக்கும்.**

தொகுப்பு:- சுஜா

## போதைப் பொருள் அது பாவப் பொருள்

இன்றைய நவீன நாகரிக உலகம் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும், சவால்களையும் சமாளிக்க வேண்டிய இக்கட்டான நிலையில் தவித்துக் கொண்டிருக்கிறது. ஆம் இன்று உலக நாடுகள் அனைத்திலும் மிகவும் பயங்கரமான ஒரு பிரச்சினையாக போதைப் பொருள் பாவனை உருவெடுத்துள்ளது.

இப்போதைப் பொருளை பாவிப்பதில் சின்னஞ்சிறார்கள் முதல் வயோதிபர் வரை அடிமையாகி இருப்பதை இன்று கண்கூடாக காணக் கூடியதாக இருக்கின்றது. மதுபானம், கஞ்சா, அபின், பெதடின், மெதடோன், மர்ஜுவானா போன்ற பல வகையான போதைப் பொருட்கள் உலகெங்கும் மிகத் தீவிரமாகப் பரவி விட்டது.

இப்போதைவஸ்தை பாவிப்பவர்களின் ஆயுள் அற்பமாக முடிகிறது என ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளார்கள். இதனால் எமது சூழல் உட்பட முழு நாடுமே பாதிக்கப்படுகிறது. கொலை, களவு, கொள்ளை போன்ற பயங்கரமான கோரச் செயல்களுக்கு போதைப் பொருள் பாவனை காரணமாகின்றது.

மனிதன் என்ற தனிப்பண்பை உயர்த்தி, வளர்த்து உன்னதமான இலட்சியங்களை உருவாக்கி வாழ்வை அமைக்கும் முயற்சிகளை எடுப்போம். வாழ்க்கையை அழிக்கும் போதைப் பொருளை அகராதியில் இருந்தே அழித்து விடதிடசங்கற்பம் செய்து கொள்வோம்.

மு.ஹர்சன்

## வீ. எம். கே. ஜீவலர்ஸின்

### இவரைத் தெரியுமா — பரிசுப் போட்டி இல: — 08

பட்த்தில் இருப்பவர் யார் தெரியுமா?

உருகும் பெயரைக் கொண்ட இந்த அழகி தான் உருகாமல் பார்ப்போரை உருக வைத்து விடுவாள். இவளைத் தெரிந்தால் உங்கள் விடைகளைஎழுதி எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-



'இவரைத்தெரியுமா
போட்டி இல:- 08'
வீ. எம். கே. ஜீவலர்ஸ்,
இல.305, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:-
சரியான விடை எழுதும் மூன்று போட்டியாளர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

### இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல: — 08

படத்தில் உள்ளவரின் பெயர் :-..............................

அனுப்புபவரின் முழுப் பெயர் :-..............................

அனுப்புபவரின் முகவரி :-..............................
..............................
..............................

### இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல 07
சரியான விடை





பாப்பரசர் 2ம் அருளப்பர் சின்னப்பர்

இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல. 07 இல் பங்குபற்றி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:

முதற்பரிசு: — க.கோகில ரமணன், கல்லூரி வீதி, வட்டுக்கோட்டை.

இரண்டாம்பரிசு: — மா.அனுஷானந்தி 09,2ம் ஒழுங்கை பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

மூன்றாம்பரிசு: — கு.சுகந்தி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்

சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:-

*செ.ஹெலன் கவிதா, யாழ்ப்பாணம், பா.செல்வராணி, வட்டுக்கோட்டை, ம.தனபால் ஆனைக்கோட்டை, S.சாந்திமதி, யாழ்ப்பாணம், ச.நீலவேணி சித்திங்கேணி, ச.தமிழினி சுழிபுரம், ஏ.ஷர்மிளா அரியாலை, செ.ஜெரீம் நிரோஷன், வட்டுக்கோட்டை, சி.நிரஞ்சன் யாழ்ப்பாணம், ப.சத்தியராகவன் ஆனைப்பந்தி*

### யோகம் பற்றி அறிந்து கொள்வோம்

#### ஆசனம் செய்வதால் உண்டாகும் பயன்கள்

ஆசனங்களை முறையோடு செய்து வந்தால் உடல் வளம் பெறுவதுடன், மிகவும் சுறுசுறுப்போடும் விரைவாகவும் அன்றாட வாழ்வில் இயங்கமுடியும்.

முதுகெலும்பு எளிதில் வளைந்து இயங்கும் ஆற்றலைப் பெறுவதால், எதனையும் சிறப்பாகப் பணியாற்றும் வகையில் உடலில் ஒத்துழைப்பு உயர்ந்தளவில் கிடைக்கின்றது.

பசி நன்றாக எடுக்கின்றது. உடலில் பற்றிக்கொள்கின்ற நோய்கள் ஆரம்ப நிலையிலேயே முறியடிக்கப்படுகின்றன.

மிகவும் முக்கிய உறுப்புகளான இதயம், நுரையீரல்கள், மற்றும் மூளைப்பகுதிகள் செழிப்படைந்து சிறப்புடன் பணியாற்ற முடிகின்றது.

தங்குதடை இல்லாத இரத்த ஓட்டம் உடலெங்கும் இயல்பாக ஓடி, உடலைப் பூரண பொலிவு பெற வைக்கின்றது.

உடல் அவயவங்கள் எல்லாம் விறைப்பாக இருக்காமல் எளிதில் செயலுக்கு இணங்கும் தன்மையில் இருந்திட வழிஅமைகிறது.

(தொடரும்......)




ம.வித்தியாதரன்.
வயது:- 21.
ஒழுவில் வீதி,
கரம்பொன்,
ஊர்காவற்றுறை.
பத்திரிகை, வானொலி
பேனாநட்பு.

மா.ஷண்மார்சிங்.
வயது:- 20
இல.40, பீச் றோட்,
குருநகர், யாழ்ப்பாணம்.
கிரிக்கெட், ஆன்மீகம்,
பேனாநட்பு

லி.நிர்மலன்,
வயது:- 28,
மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
பொதுத்தொண்டு, கிரிக்கெட்,
பத்திரிகை.

க.ஜெயவசந்தன்,
வயது:- ?2
அராலி வடக்கு,
செட்டியார் மடம்,
வட்டுக்கோட்டை.
வானொலி, பத்திரிகை
பேனாநட்பு.

S. சபேஸ்குமார்
வயது:- 26
காலையடி, பண்டத்தரிப்பு.
வானொலி கேட்பது T.V
பார்ப்பது, பத்திரிகை
வாசித்தல், கவிதை எழுதுதல்,
பேனாநட்பு.


'பேனா நண்பர்கள்' பகுதியில் இணைந்து கொள்ள விரும்பும் வாசகர்களுக்கு!

நீங்கள் உங்கள் சுயவிபரங்களுடன், அடையாள அட்டையின் நிழற்பிரதியையும் இணைத்து சங்குநாதத்தின் பேனா நண்பர்கள் பகுதிக்கு அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர்

## குறுக்கெழுத்துப் போட்டி

### இல. 09



அனுப்ப வேண்டிய முகவரி

குறுக்கெழுத்துப் போட்டி இல-09
ஸ்ரீ வாணி நகை மாடம்,
இல.173, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் :- ..............................
விலாசம் :- ..............................
..............................
..............................

..............✂ இங்கே வெட்டுக..............................

### இடமிருந்து வலம்

1) மனஞ்சலியாமை 4) மகிழ்க/சிரிக்க 6) மணமகன் 7) இரும்பு வேலை செய்பவர் 8)சலதாரை 9) வீணான 10) வஞ்சகம் 12)வாழ்வு 14) ஆணுமல்ல பெண்ணுமல்ல 15) மேன்மை 16)பலாத்காரமாக 17) மகிழ்வு 19) பன்றி (வலம் மாறி)

### மேலிருந்து கீழ்

1) பழிச்சொல் 2) உட்பொருள் 3) ஓங்கிய புகழ்/வான் சிறப்பு 4) நன்மையான 5) செருக்கு 7) பந்தல் 9) கணியம் (கீழிலிருந்து மேலாக) 11) தகுதியடைதல் 12) கட்டிளம் காளை 13) இலகுவான/ஆரோக்கியமான 15) மிச்சம் 18) ஒன்றல்ல(கீழிருந்து மேலாக) 19) ஒன்றுதான்(கீழிருந்து மேலாக)

### குறுக்கெழுத்துப்போட்டி 8 இற்கான விடைகள்
### இடமிருந்து வலம்

1) ஆததாயிகள் 6) சுருதி 7) சலி 8) அதி 9) வித்தக 11) சித்திரபானு 12) வதி 13) கடி 14) வியாசர் 17) முரசம் 18) ஆல் 19) நா 20) திம்பு

### குறுக்கெழுத்துப்போட்டி 8 இற்கான விடைகள்
### மேலிருந்து கீழ்

1) ஆசு அற்றார் 2) தருதி 3) தாதி 4) கடத்தி 5) புலி 7) சகபாடி 9) வித்தியாசம் 10) தரகர் 11) சிவவிரதி 15) சம்பு 16) வல்வை 18) ஆசி

**பல வாசகர்கள் இக் குறுக்கெழுத்துப்போட்டியில் ஆர்வத்துடன் இணைந்து கொண்டுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விபரம்:-**

1ம் பரிசு - கே.இராஜகோபால் அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.

2ம் பரிசு - கு.சிவகுமார் "கணேச வாசா" மயிலணி, சுன்னாகம்.

3ம் பரிசு - சபா.அனுசன் இலகடி, அல்வாய்.


**போட்டியில் கலந்து கொண்டு பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் விபரம்**

*சி.சச்சிதானந்தன், யாழ்ப்பாணம், சி.துஷ்யந்தி யாழ்ப்பாணம், ச.கஜமுகன், சுழிபுரம், நா.த.சபாரத்தினம், பருத்தித்துறை, ச.தர்சினி, வட்டுக்கோட்டை எஸ்.கோகுலன் சங்கானை, ச.தேனுசா, யாழ்ப்பாணம், ரா.தாரகா, வட்டுக்கோட்டை, ந.சஞ்சயன் யாழ்ப்பாணம், ஸ்ரீ.பரமானந்தவல்லி, சுழிபுரம்.*

**குறிப்பு:- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை ஸ்ரீ வாணி நகை மாட த்தில் பெற்றுக் கொள்ளவும்.**

குறுக்கெழுத்துப் போட்டிக்கு விடைகள் அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "குறுக்கெழுத்துப் போட்டி இல.9" எனத் தவறாது குறிப்பிடவும். அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி 27-04-2002.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | 150.00 |
| இரண்டாம் பரிசு:- | 100.00 |
| மூன்றாம் பரிசு:- | 50.00 |




## மோனல் தற்கொலை ஏன்?




தற்கொலை செய்து கொள்வதற்கு முன் நடிகை மோனலை அவருடைய தயார் கன்னத்தில் அறைந்துள்ளார் என்ற விவரம் தெரியவந்துள்ளது. சிம்ரனின் தங்கையும் நடிகையுமான மோனல், தூக்கு போட்டு தற் கொலை செய்துகொண்டார்.மோனலின் தற் கொலை தமிழ்த் திரைப்பட உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.மோனல், சிம்ரனின் உடன் பிறந்த சகோதரி அல்ல. சித்தியின் மகள். அவரை சிம்ரனின் தாயார் வீணா வளர்ப்பு மகளாக தத்து எடுத்துக் கொண்டார். பெரியம்மா தான் என்றாலும் பெற்ற தாயிடம் கிடைக்கும் உண்மையான அன்பும், பாசமும் மோனலுக்கு கிடைக்கவில்லை. அவரிடம் வீணா கண்டிப்பாக நடந்து கொண்டார். மோனல் நடிகையாகி, பணம் சம்பாதிக்க ஆரம்பித்ததும் வீணாவின் கண்டிப்பு மேலும் அதிகமானது.தயாரிப்பாளர்களிடம் வீணா தான் சம்பளம் பேசுவார். முழு சம்பளத்தையும் அவரே வாங்கிக் கொள்வார். சம்பள பாக்கி வைத்த



தயாரிப்பாளர்களிடம் பணத்தை கேட்டு வாங்கி வா என்று வற்புறுத்தி அனுப்பி வைப்பார். இது தொடர்பாக மோன லுக்கும், அவருடைய தயாருக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டு அடிதடி நடக்கும் என் று அக்கம் பக்கத்தினர் கூறுகிறார்கள். சம்பவத்தன் று இரண்டு பேருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டு இருக்கிறது.மோனல் ஒரு தயாரிப்பாளரிடம் ரூ. 3 லட்சம் சம்பளம் பேசி ரூ. 2 லட்சட்தை மட்டும் தாயாரிடம் கொடுத்தார். மீதி ஒரு லட்சட்தை அவர் தன் கை செலவுக்காக வைத்துக்கொண்டார். இது வீணாவுக்கு தெரிய வந்ததும், மோனலை பிடித்து தாறுமாறாகஅடித்து இருக்கிறார். காதலனிடம் இருந்து போன் வந்ததும், அவருடைய கோபம் இன்னும் அதிகரித்து இருக்கிறது. அவனுடன் பேசாதே என் று எத்தனை முறை சொல்வது ? என்று மோனல கன்னத்தில் அறைந்து இருக்கிறார்.காதல் தோல்வி, வளர்ப்புத் தாயாரின் சித்ரவதைகள் ஆகிய இரண்டும் சேர்ந்து, மோனலை தற் கொலை முடிவுக்கு தூண்டி விட்டன. வாழ வேண்டிய ஒரு நடிகை, இளம் வயதிலேயே வாழ்க்கையை முடித்துக் கொண்டார்.


## வேகமாக வளர்ந்து வரும் உன்னை நினைத்து

லஷ்மி மூவி மேக்கர்ஸ் தயாரிக்கும் படம் “உன்னை நினைத்து”நிர்மலா வீட்டு வாசலுக்கு வரும் சூர்யா தனது மொபட்டை ஸ்டார்ட் பண்ணிவிட்டு பார்க்க... நிர்மலா செருப்புடன் வீட்டினுள் இருந்து வெளியே வர.. என் னங்க... இந்த வெய்யில்ல எங்க கிளம் பிட்டீங்க என்று கேட்கி றாள். செருப்பு அறுந்து போச்சு.. என, அதை நீங்க... 110 டிகிரி வெய் யில் அடிக்குது... இந்த வெய்யிலலே நீங்க போய் செருப்பு தச்சிட்டு குடுங்க நான் போய் தச்சிட்டு வந்துடறேன் என்று செருப்பை வாங்க பாக்க.. இல்லயே வெயில் மீடியமாதானே இருக்கு என்று நிர்மலா சொல்ல... இல்லல்ல இது ஊமை வெயில். வெளிய போனா ஆளையே உருக்கும் என்று சொல்லிவிட்டு செருப்பை பய




பாக்கிறான் சூர்யா.ச்சே... ச்சே... வேண்டாங்க. ஒரு ஆம்பள நீங்க போயி பொம்பள செருப்பை தச்சுட்டு வர்றது அவ்வளவு கௌரவமா இருக்காது என்று நிர்மலா சொல்ல... அட என்னங்க கௌரவம் இதற்கு... மனுஷனுக்கு மனுஷன் விட்டுக் கொடுத்து வாழணுங்க என்று சூர்யா சொல்ல நிர்மலா சிறிது யோசிக்க, பச்... என்ன யோசிக்கிறீங்க... ஒரு படிச்சவங்ககிட்டப் போயி எப்படி இந்த வேலை யைக் குடுக்கிறதுன்னா...ச்சே.. ச்சே அதெல்லாம் ஒண்ணும் இல்ல.. எஸ்.எஸ்.எல்.சி. படிப்பெல்லாம் ஒரு பெரிய படிப்பா.. என்று ஏளனமாக சொல்ல, சூர்யா திருதிருவென முழிக்கிறான் . சரி பரவாயில்ல நீங்களே போயி தச்சுட்டு வாங்க... என் று சொல்லி செருப்பையும் பணத்தையும் கொடுக்கிறாள்.செருப்பை கையில் வாங்கிவிட்டு சுற்றும் முற்றும் பாாக்கிறான் சூர்யா. அசட்டு சிரிப்புடன் கிளம்புகிறான் .இந்த காட்சியில் சூர்யாவாக சூர்யா, நிர்மலாவாக லைலா நடித்தார்கள். மேலும் ஸ்னேகா, ரமேஷ்கண்ணா, சார்லி, ‘தலைவாசல்’ விஜய், டெல்லிகணேஷ், ஜெயமணி, கோவை செந்தில், சங்கர நாராயணன் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

## அஜித் நடிக்கும் அச்சமில்லை



தீனா வெற்றி படத்தை தயாரித்தவரும், அஜித் குமாரின் நெருங்கிய நண்பருமான கார்த்திக், அடுத்து ஒரு புதிய படம் தயாரிக்கிறார். விஜயம் சினி கம்பைன் ஸ் சார்பில் தயாராகும் இந்த படத்துக்கு ‘அச்சமில்லை’ என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். படம், சினிமாஸ் கோப்பில் தயாராகிறது.இந்த படத்திலும் அஜித்குமார் கதாநாயகனாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக நடிக்கும் கதாநாயகி தேர்வு நடைபெற்று வருகிறது. இந்தி, தெலுங்கு ஆகிய 2 மொழி பட உலகிலும் கதாநாயகி வேட்டை நடக்கிறது. மற்ற நடிகர் – நடிகைகள் தேர்வும் நடைபெறுகிறது.டைரக்டர்கள் ராஜ்கபூர், பிரவின் காந்த் ஆகிய இருவரிடமும் இணை இயக்குநராக இருந்த அன்பு, இந்த படட்தின் மூலம் டைரக்டராக அறிமுகமாகிறார். அவரே கதை – திரைக்கதை – வசனமும் எழுதுகிறார்.யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். ப்ரியன் ஒளிப்பதிவு செய்கிறார்.இதன் படப்பிடிப்பு அடுத்த மாதம் சென்னை வாசன் ஹவுசில் தொடங்கி,.தொடர்ந்து நடைபெற இருக்கிறது.

## வேகமாய் வளரும் நாசரின் "பாப்கார்ன்"



சுனா பிலிம் மேக்கர்ஸ் தயாரித்து வரும் படம் “பாப் கார்ன் ”.ஊர் உலக மெங்கும் ஒலிக்கும் ஏழிசையை ஒன் றென்றே காட்ட வேண்டும் என்ற கொள்கையுடையவன் விக்ரமா. எல்லா இசையையும் கலந்த இசையாக அந்தந்த நேரத்தின் உணர்ச் சிக்கேற்ப எந்த இசை வருதோ அதற் கேற்ப தாளத்துடன் இசை இருக்க வேண்டும். அந்த இசையை ரசித்துக் கொண்டிருப்பவன் முழுமையாக அதில் பங்கு பெற வேண்டும். ரசிக்கும் வகையில் எழுந்து ஆட தோன் றினாலும் ஆடுகின்ற சம்பிர தாயம் வரவேண்டும். இப்படி ஒரு இசை கலைஞன் என் பதால், விக்ரமாவுக்கு இளை ஞர்கள் மத்தியில் ஏக வரவேற்பு. அன்றும் கச்சேரிதான் .”என் இசைக்கு இங்கு கிழக்கு மேற்கு... என்று பெயரை சூட்ட வேண்டும் ஊர் உலகமெங்கும் ஒலிக்கும் ஏழிசையைஒன் றென்றே காட்ட வேண்டும்....”என்று பாட்டு பாடி ஆடி முடிக்கும் வேளையில்தான் அவனுக்கு ஞாபகம் வருகிறது. காதலி ஜமுனாவின் பிறந்த நாளென்பது இரவோடு இரவாக ஜமுனாவை சந்திக்கிறான் . தான் வாங்கி வைத்திருந்த வைர மோதிரத்தை அவளுக்கு அணிவிக்கிறான் . அவளது விரலுக்கு மோதிரம் ‘லூஸ்’ ஆக இருப்பதை பார்த்து... எத்தன நாள் என் கை விரல பிடிச்சி மயில் இறகால தடவிவிட்டீங்க. ஆனா என் விரல் சைஸ் மட்டும் உங்களுக்கு தெரியாதா... என்று செல்லமாக சிணுங்குகிறாள்.இந்த காட்சி யில் விக்ரமாவாக மோகன்லால், ஜமுனா வாக சிம்ரன் நடித்தார்கள். மோகன் லால் படிக்கும் இந்த பாடலை கவிஞர் வாலி எழுத, ஹரிஹரன் பாடியுள்ளார்.மோகன் லால் நடிக்கும் இரண்டாவது தமிழ் படமான இப்படத்தில் இள ஜோடிகளாக சக்திஷா, ஜோதி அறிமுகமாக மேலும், விவேக், அ‘சு, ஸ்ரீமன் , டெல்லி கணேஷ், சந்திரசேகர், மதன் பாப், தியாகு, ஜனகராஜ், ரட்தன் , பாப் ஷாலினி, நடிக்கிறார்கள்.



## சிம்ரன் நடித்த போதையூட்டும் பாடல்க் காட்சி



எட்டு விதமான கவர்ச்சி உடைகளில், சிம்ரன் நடித்த போதையூட்டும் ஒரு பாடல் காட்சி “ஏழுமலை” படத்திற் காக படமாக்கப்பட்டது. இதற்காக வாஹினி ஸ்டூடியோ வில் மலை குகைகளில் இருந்து அருவி கொட்டுவது போன்ற அரங்கு அமைக்கப்பட்டு இருந்தது.மோகன் ஸ்டூடியோவில் செயற்கை தாமரை தடாகம் ஒன்று அமைக்கப்பட்டது. அதே ஸ்டூடியோவில் பனி மலைக ளுக்கு இடையில், பனி மழை பொழிவது போன்ற இன் னொரு அரங்கு அமைக்கப்பட்டிருந்தது. சில்லென்று வரும் காற்று எனை ஏன் இனறு சுடுகின்றது ? என் ற பாடல் காட்சி, அந்த மூன்று அரங்குகளிலும் 4 நாடகள் படமாக்கப்பட்டன. அர்ஜூன் – சிம்ரன் இருவரும் 8 விதமான உடைகளில் ஆடிப்பாடுவது போல் நடிடதாா கள். கே.எஸ். செல்வராஜ் ஒளிப்பதிவில், டைரக்டு செய் தார் அர்ஜூன் . கே.சி. தங்கம் வசனம் எழுத, மணிசர்மா இசையமைக்கிறார். விரைவில் திரைக்கு வரவிருக்கும் இந்த படத்தில் மும்தாஜ், ஆஷிஷ் விட்யார்த்தி, விஜயகுமார், சந்திரகோ், ஆனந்தராஜ், சத்யபிரியா மற் றும் பலரும் நடிக்கிறார்கள்.வெங்கடரமணா புரொடக் ஷன் ஸ் சார்பில் எம்.வி. முரளி கிருஷ்ணா தயாரிக்கிறார். •

இப் பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 24.04.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது